# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT
# 2023

බුද්ධිමත් ගොවිතැන
ஸ்மார்ட் விவசாயம்
SMART FARMING



සීමාසහිත කුරුණෑගල වැවිලි සමාගම
வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட கம்பனி
Kurunegala Plantations Limited

රාජ්‍ය වැවිලි ව්‍යවසාය ප්‍රතිසංස්කරණ කැබිනට් නොවන අමාත්‍යාංශය
அரச பெருந்தோட்ட நிறுவன சீர்திருத்தங்களுக்கான அமைச்சரவை அல்லாத அமைச
Non-Cabinet Ministry of State Plantation Enterprise Reforms

# ஆண்டறிக்கை 2023

ஸ்மார்ட் விவசாயம்



සීමාසහිත කුරුණෑගල වැවිලි සමාගම
வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட கம்பனி
Kurunegala Plantations Limited

රාජ්‍ය වැවිලි ව්‍යවසාය ප්‍රතිසංස්කරණ කැබිනට් නොවන අමාත්‍යාංශය
அரச பெருந்தோட்ட நிறுவன சீர்திருத்தங்களுக்கான அமைச்சரவை அல்லாத அமைச்சு
Non-Cabinet Ministry of State Plantation Enterprise Reforms

# சூட்டிகையான விவசாயம் : விவசாயத்தின் எதிஉகாலம்

சூட்டிகையான விவசாயம் என்பது நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளின் அளவு மற்றும் தரத்தினை அதிகரிக்கும் அதேவேளை தேவையான மனித உழைப்பை மேம்படுத்திப் பண்ணைகளை நிர்வகித்தல் ஆகும்.

இன்றைய கால விவசாயிகளுக்குக் கிடைக்கும் தொழில்நுட்பங்களாவன்

| | | |
|---|---|---|
| **உணரிகள்** | : | மண், நீர், ஒளி, ஈரப்பதம், வெப்பநிலை முகாமைத்துவம் |
| **மென்பொருள்** | : | குறிப்பிட்ட பண்ணை அல்லது பயன்பாட்டு இயங்குதளங்களைக் குறிவைக்கும் சிறப்பு மென்பொருள் தீர்வுகள் |
| **இணைப்பு** | : | செல்லுலர், லோரா |
| **அமைவிடம்** | : | GPS, செயற்கைக்கோள் |
| **எந்திரனியல** | : | தன்னாட்சி டிரக்டர்கள், செயலாக்க வசதிகள் |
| **தரவுப் பகுப்பாய்வு** | : | தனித்த பகுப்பாய்வு தீர்வுகள், கீழ்நிலை தீர்வுகளுக்கான தரவு குழாய்கள் |




அத்தகைய கருவிகளைக் கொண்டு விவசாயிகள் வயல் நிலைமைகளைக் கண்காணித்து, வயலில் காலடி எடுத்து வைக்கத் தேவையின்றி, முழுப் பண்ணை அல்லது ஒரு பயிருக்கான மூலோபாய முடிவுகளை எடுக்கலாம்.

சூட்டிகையான விவசாயத்தின் உந்து சக்தியாக இருக்கும் விடயங்களின் இணையம் - விவசாய செயல் முறைகளை தரவு உந்துதல் மற்றும் தானியங்கு மூலம் பண்ணைகளை ஒருங்கிணைக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் சென்சார்களை இணைக்கின்றது.



# உள்ளடக்கம்


எம்மை பற்றி 03
எமது தூரநோக்கு, செயற்பணி மற்றும் முக்கிய மதிப்புக்கள் 04
சாதனைகள் 05
மைல்கற்கள் 06
தலைவரின் செய்தி 08
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் ஆய்வுரை 11
பணிப்பாளர் சபை 14
சிரேஷ்ட முகாமைத்துவம் 17
பகுதி அத்தியட்சகர்கள் 18

**முகாமைத்துவ கலந்துரையாடல் ரூ பகுப்பாய்வு**
நிலைத்தன்மை அறிக்கை 19
இடர் முகாமைத்துவம் 22
கூட்டிணைந்த ஆளுகை 25
கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 27

**நிதிக்கூற்றுக்கள்**
பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை 29
பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்று 34
நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 35

விரிவான வருமானக் கூற்று 40
நிதி நிலைமைக் கூற்று 41
உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று 42
காசுப்பாய்ச்சல் கூற்று 43
கணக்கீட்டுக் கொள்கைகள் 44
நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 58

**பின்னிணைப்புக்கள்**
வருடாந்த பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு 82
பதிலாள் படிவம் 83

நிறுவன தகவல் 84

# எம்மைப் பற்றி

1992 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட, முற்றிலும் அரச உடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட கம்பனி (KPL), 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டதாகும். அரச தனியார்மயப்படுத்தல் கொள்கையின் கீழ் 1987 இன் 23 ஆம் இலக்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச உடைமையாக்கப்பட்ட வணிக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையினால் நிர்வகிக்கப்பட்ட காணிகளைச் சட்டபூர்வமாக உரித்தாக்கியதன் அடிப்படையில் இக் கம்பனி நிறுவப்பட்டதாகும். ஒரே ஒரு பங்குதாரர் கம்பனியாக செயற்படும் கம்பனிக்கு இலங்கை பொதுத் திறைசேரியின் செயலாளர் தனியான பங்குதாரராக விளங்குகின்றார். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 80, தம்புள்ள வீதி, குருநாகல் எனும் முகவரியில் அமைந்துள்ளது.

ஆரம்ப காலத்திலிருந்தே வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட கம்பனியின் முகாமைத்துவம் தனியார் துறையை அடித்தளமாகக் கொண்டிருந்தது. ஏறத்தாழ 13 வருட காலமாக 2005 ஜனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கம்பனியின் முகாமைத்துவத்தை மீண்டும் பொறுப்பேற்க அரசாங்கம் தீர்மானித்தது. இத்தகைய நடவடிக்கை காரணமாக, கம்பனி பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக அதன் கட்டுப்பாடு அமைச்சிலிருந்து அமைச்சிற்கு பல முறை மாறியது. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட கம்பனி 2015 செப்தெம்பர் 01 முதல் அரச தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டிருந்தது, இது பின்னர் அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சாக மாறியது. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட கம்பனி தற்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் செயற்பட்டு வருகிறது.

குருநாகல் பெருந்தோட்ட கம்பனியின் (KPL) முக்கிய வணிக நலன்கள், குருநாகல், கம்பஹா மற்றும் அனுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள பல்வேறு விவசாய காலநிலை வலயங்களில் பரந்து விரிந்துள்ள 4971.12 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்ட 07 பிரதேச தோட்டங்களின் தொகுதியுடன், தென்னை, இறப்பர் மற்றும் துணைப் பயிர்களின் பயிர்ச்செய்கை, உற்பத்தி, செயன்முறைப்படுத்தல் மற்றும் விற்பனை ஆகியவற்றில் தொடர்கின்றன. ஒவ்வொரு தோட்டமும் மேலும் இரண்டு முதல் மூன்று பிரதேச செயலகங்களில் பரந்துள்ள பிரிவுகளாக அறியப்படும் சிறிய ஏக்கர்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

இக் கம்பனி 1100 பேருக்கும் அதிகமானோருக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குகிறதுடன் ஏனைய பலரின் வாழ்வாதாரத்திற்கு மறைமுகமாக உதவுகிறது.

எமது தூரநோக்கு, செயற்பணி மற்றும் முக்கிய மதிப்புக்கள்

## எமது தூரநோக்கு

தென் கிழக்காசியப் பிராந்தியத்தில் சிறந்த மாதிரிப் பெருந்தோட்ட விவசாய, வர்த்தக நிறுவனமாகத் திகழுதல்.

## எமது செயற்பணி

பெருந்தோட்ட மற்றும் விவசாய, வர்த்தக நிறுவனங்களை, இயற்கை, பௌதீக, மனிதவளம் என்பனவற்றை ஒன்றுதிரட்டி, சூழலை அசுத்தமாக்காத வகையிலும், சமூக ரீதியில் பொறுப்புணர்ச்சி கொண்ட விதத்திலும், பங்குதாரர்கள் மற்றும் நாட்டு மக்கள் அனைவருக்கும் நன்மையளிக்கும் வகையிலும் நிர்வகித்தல்.

## வணிக தத்துவம

| | |
|---|---|
| சிறந்த தொழில்தருநர் | : தரம், உற்பத்தித்திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நேர்மையான, தகுதிவாய்ந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள பதவியணியினரிற்கு அதிகாரம் அளித்தல், |
| தொழில்முனைவு | : பெறுமதி உருவாக்கம், இலாபத்தன்மை, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் நிறுவன சமூக பொறுப்பு. |
| தரம் வழங்குநர் | : நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் மேம்பட்ட வாடிக்கையாளர் திருப்தி மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம். |
| உற்பத்தித்திறன் | : ஒரு அலகு வள உள்ளீடு, ஒரு ஹெக்டெயருக்கு உத்தம உற்பத்திதிறன், விரயத்தைக் குறைக்கும் போது நிலையான அடிப்படையில் உகந்த நிலப் பயன்பாடு ஆகியவற்றை அடைந்துகொள்ளுதல். |
| தொழில்முனைவு | : எல்லா நேரங்களிலும் புதுமையான அணுகுமுறைகளை நோக்கிச் செயலூக்கத்துடன் பாடுபடுதல் |
| பெறுமதி உருவாக்கம் | : வணிகச் சூழலின் மாறிவரும் தேவைகளுக்குத் தொடர்ந்து பதிலளித்தல். |
| இலாபத்தன்மை | : முதன்மை உற்பத்தி மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப்பொருட்களுக்கான உகந்த தேறிய விற்பனை சராசரி மற்றும் குறைந்த சாத்தியமான உற்பத்தி கிரயத்தை அடைந்துகொள்ளுதல். |
| சுற்றுச்சூழல் நட்பு | : சுற்றுச்சூழலுக்கு குறைந்தபட்ச அல்லது சேதம் ஏற்படாத வகையில் சுற்றுச்சூழலுடன் இணக்கமான வளங்களைச் சுரண்டுதல், |
| சமூக பொறுப்பு | : மக்கள் மற்றும் சுற்றுச்சூழலில் அக்கறை செலுத்துதல், நல்லாட்சிக்கு மதிப்பளித்தல். |

**2011**

- தேசிய மட்டத்தில் விவசாய வணிகத்திற்கான இரண்டாமிடம்
- பெரிய வகை உற்பத்தியாளருக்கான தங்க விருது (பெருந்தோட்டம்)

**2012**

- விவசாய வணிகத்திற்கான தேசிய தங்க விருது
- பெரிய வகை உற்பத்தியாளருக்கான தங்க விருது (பெருந்தோட்டம்)

**2013**

- விவசாய வணிகத்திற்கான தேசிய தங்க விருது
- பெரிய வகை உற்பத்தியாளருக்கான தங்க விருது (பெருந்தோட்டம்)

**2014**

- விவசாய வணிகத்திற்கான தேசிய தங்க விருது
- பெரிய வகை உற்பத்தியாளர் (பெருந்தோட்டம்)-2014 இற்கான தங்க விருது

**2015**

- இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த தேசிய வணிக சிறப்பு விருதுகளில் 2015 இல் விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் துறையில் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

**2016**

- சர்வதேச மிளகு சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த மிளகு விவசாயி விருது

**2017**

- சர்வதேச மிளகு சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த மிளகு விவசாயி விருது

**2018**

- சர்வதேச மிளகு சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த மிளகு விவசாயி விருது மற்றும் இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பெரிய வகை உற்பத்தியாளர் (விவசாயம் மற்றும் பெருந்தோட்டம்) தேசிய வணிக சிறப்பு விருதுகளுக்கான தேசிய அளவிலான தகுதி விருது.

**2019**

- சர்வதேச மிளகு சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த மிளகு விவசாயி விருது

**2021**

- இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பெரிய வகை உற்பத்தியாளர் (விவசாயம் மற்றும் பெருந்தோட்டம்) தேசிய வணிக சிறப்பு விருதுகளுக்கான தேசிய அளவிலான தகுதி விருது.

**2022**

- சிறந்த நிறுவன விருது வேளாண் துறை மிகப் பெரிய பிரிவு 2022. வயம்பா விஜயாபிமானி விருது வழங்கும் விழா 2023 விருதுகள் தொழில்துறை சேவை பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது வடமேற்கு மாகாணம்.



## 1992 யூன் 18

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி (KPL) அரச தனியார்மயமாக்கல் கொள்கையின் கீழ் 1992 யூன் 18 இல் முழுமையாக அரச உடமையாக்கப்பட்ட கம்பனியாக 1987 இன் 23 ஆம் இலக்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச உடைமையாக்கப்பட்ட வணிக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையினால் சபை இல. (ஏ) இன் கீழ் அப்போது முகாமை செய்யப்பட்ட தோட்டங்களை ஒதுக்குவதன் மூலம் நிறுவப்பட்டது. 1992 யூன் 18 முதல் 2004 திசெம்பர் 31 வரை வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி ஒரு தனியார் நிர்வாக முகவரால் நிர்வகிக்கப்பட்டது.

## 2005 சனவரி 01

2005 சனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் கம்பனியின் முகாமைத்துவத்தை கையேற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததுடன் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

## 2006 யூன் 06

மீண்டு தெங்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் கைமாறியது

## 2007 ஏப்ரல் 18

மீண்டு அரச தோட்ட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி அமைச்சகத்தின் அதிகார எல்லையின் கீழ் வந்தது.

## 2010 யூன் 18

மீண்டு ஆனது அரச வளங்கள் மற்றும் நிறுவன அபிவிருத்தி அமைச்சிற்கு கைமாறியது.

## 2010 நவம்பர் 16

மீண்டு தென்னை அபிவிருத்தி மற்றும் ஜனதா தோட்ட அபிவிருத்தி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் வந்தது.

**2015 பெப்ரவரி 18**

முீடு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2015 செப்தெம்பர் 21**

முீடு அரச தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**2018 மே 01**

முீடு அரச நிறுவன மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சுக்கு கைமாறியது.

**2018 நவம்பர் 09**

முீடு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2020 ஆகஸ்ட் 09**

முீடு பெருந்தோட்ட அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

**2022 மே 27**

முீடு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது

# தலைவரின் செய்தி



**அன்புள்ள பங்குதாரரே,**

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். கம்பனியின் செயலாற்றல் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான அதன் முயற்சி பற்றிய ஆழமான புரிந்துகொள்ளலுடன் அறிக்கை வழங்கப்படும் என கருதப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி (KPL) தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் முன்மாதிரி பெருந்தோட்ட மற்றும் விவசாய வணிக முகாமைத்துவ கம்பனியாக இருக்க முயற்சிக்கிறது. இந்த தூரநோக்கை நிறைவேற்றும் முயற்சியில், KPL அதனது இயற்கை, பௌதீக மற்றும் மனித வளங்களை உகந்த அளவில் பயன்படுத்துவதன் மூலம் அதன் பெருந்தோட்டங்கள் மற்றும் ஏனைய விவசாய வணிகங்களை உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் நிலையான முறையில் தொடர்ந்து முகாமைசெய்து வருகிறது. அவ்வாறு செய்யும் போது, KPL கம்பனி மற்றும் நாட்டின் அனைத்து பங்குதாரர்களுக்கும் பலனளிக்கும் வகையில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படைக் கொள்கைகளை கடைபிடிக்கிறது.

**மீளாய்வு ஆண்டு**

குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்காக ரூபா 534.4 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை வழங்கி ஒரு வலுவான செயலாற்றலைப் பதிவுசெய்தது. நல்ல விவசாய நடைமுறைகளின் ஆதரவாளர்களாக, நாம் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மற்றும் தன்னியக்க முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு முதலீடு செய்யப்படுவதுடன், உள்ளீட்டுத் தரம் மற்றும் நிலைத்ததன்மையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு தொழில்நுட்படம் மற்றுமு் சரியான விவசாயத் தீர்வுகளை பயன்புடுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகள் அனைத்தும் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இது இறுதியில் செயற்பாட்டு சிறப்பிற்கு வழிவகுக்கும்.

குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2023 ஆம் ஆண்டுக்கான தேறிய விற்பனை சராசரி 16.7 சதவீத வளர்ச்சியை காண்பித்தது. தேசிய மட்டத்தில் 2023 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 3.6 சதவீதமான வீழ்ச்சிக்கு ஒப்பாக 2023 ஆம் ஆண்டின் போது தேங்காய் உற்பத்தியானது 2023 ஆம் ஆண்டின் போது 16.7 சதவீத விழ்ச்சியை பதிவு செய்தது. (CBSL – 2023) இந்த நிலைமைக்கு பிரதானமாக உரப் பற்றாக்குறை, பாதகமான காலநிலை மற்றும் தென்னை பயிரிடப்படும் பிரதேசங்களில் வெள்ளை ஈக்களால் ஏற்பட்ட சேதம் ஆகியன தாக்கமளித்திருந்தன. இதன் காரணமாக ஒட்டுமொத்த தேங்காய்களின் எண்ணிக்கை 2.5 மில்லியன் குறைவொன்று ஏற்பட்டதுடன், அது அதற்கு முன்னைய ஆண்டின் விற்பனைக்கு ஒப்பாக ரூபா 63 மில்லியன் வீழ்ச்சி ஆகும்.

தேசிய இறப்பர் உற்பத்தியானது இறப்பர் வளரும் பகுதிகளில் நிலவிய பாதகமான காலநிலையின் ஒன்றிணைந்த விளைவால் பெரிதும் உந்தப்பட்டு தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக 2023 ஆம் ஆண்டின் போதும் 7.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது (CBSL – 2023). அத்தனகல்ல பிரதேச தோட்டத்தில் பஸ்னாகொட நீர் செயற்திட்டத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கத்தால் எமது சிறப்பாக வளர்ச்சியடைந்துவரும் இறப்பர் தோட்டம் கையகப்படுத்தப்பட்ட போதிலும் கூட ரீடு இறப்பர் உற்பத்தி வீழ்சிப் போக்கை காட்டி முந்தைய ஆண்டை விட 10,222 கிலோ கிராம் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், இது 10 சதவீத வீழ்ச்சியை குறிக்கிறது.

2023 ஆம் ஆண்டின் போது ஏனைய வருமான மூலங்களும் வலுப்படுத்தப்பட்டன. கம்பனி ஊடுபயிர்த் துறையும் வரலாற்றில் மிக உயர்ந்த இடத்தைப் பதிவுசெய்ததுடன் மீளாய்வாண்டில் இது ரூபா 81 மில்லியன் பங்களிப்பை வழங்கியது. தென்னை மரங்களின் விற்பனை மூலம் ரூபா 14.9

மில்லியனும், இறப்பர் மரங்களின் விற்பனை மூலம் ரூபா 26.68 மில்லியனும் பங்களிப்பு செய்யப்பட்டதுடன், ஒட்டுமொத்த வருமானத்தில் ரூபா 41 மில்லியன் ஏற்பவரின் பௌதீக சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைத்தது. மரங்களின் விலை அதிகரித்தமையால் 2023 ஆம் ஆண்டின் போது நுகரக்கூடிய பௌதீக சொத்துக்களின் அடிப்படையில் ரூபா 62 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட இலாபத்தினை பெற்றுள்ளதுடன், அது மரங்களின் விலையை அதிகரிப்பதற்கு இலங்கை மரக் கூட்டுத்தாபனத்தை தூண்டியது. 2023 ஆம் ஆண்டின போது உப குத்தகை ∴ வசதிகள் கட்டண வருமானமாக ரூபா 12 மில்லியனை பெற்றுக்கொள்ள கம்பனிக்கு முடியுமானதாக இருந்தது என்பதை குறிப்பிடல் முக்கியமானது ஆகும். மேலும் குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியினால் விற்பனை செய்யப்படும் விற்பனை நிலையங்களின் வலையமைப்பினை விரிவுபடுத்தலுடன் 2023 ஆம் ஆண்டின் போது நாம் ரூபா 20 மில்லியன் வருமானத்தை பதிவு செய்தோம். இதன் பெறுபேறாக அன்னாசி, இஞ்சி, கற்றாளை, வெற்றிலை போன்ற குறுகியகால பயிர்களை பயிரிடுவதற்காக வெளிவாரி விவசாயிகளுக்கு வசதிகள் அடிப்படையில் மேலதிக காணித் துண்டொன்று வழங்கப்பட்டது. இரு தரப்பினருக்கு நலன் ஏற்படுகின்றமையால் இதனை வெற்றிகரமான நிலையொன்றாக கருத முடிடியும். கம்பனியின் கண்ணோாட்டத்தில் இதனை மற்றுமொரு வருமான வழியாக காண முடியும். எவ்வாறான போதிலும், அது களைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்காக பயிர்ச்செய்கையாளர் பொறுப்பேற்றமையால் அது கிரயத்தை குறைக்கும் மூலோபாயமாகும். மேலும், இது எங்கள் தோட்டங்களில் ஒரு நுண்ணுயிரியல் சூழலை உருவாக்குகிறது, இது நமக்கு உள்ளார்ந்த நன்மையாகும். இது சாத்தியமுள்ள நிலங்களில் தென்னை புதிய∴கீழ் நடவுகளை அறிமுகப்படுத்த அனுமதிக்கிறது மற்றும் தென்னை நாற்றுகளின் வளர்ச்சி ஒரு புலப்படும் வித்தியாசத்தைக் காட்டுகிறது. தேசிய உற்பத்திக்கு பங்களிக்கும் அதே வேளையில் கணிசமான கூடுதல் வருமானத்தை ஈட்ட உதவுவதன் மூலம் இத்திட்டம் கிராம மக்களுக்கு பயனளிக்கிறது.

விவசாய உற்பத்தியில் ஏற்படும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைத் தணிக்க நீர்ப்பாசன முறைகளை நிறுவுதல் மற்றும் உமி குழிகளைப் பயன்படுத்துவது போன்ற ஈரப்பதத்தைப் பாதுகாக்கும் முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பல உத்திகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**எமது மக்கள்**

தரம், உற்பத்தித்திறன், தொழில்முனைவு, பெறுமதி உருவாக்கம், இலாபத்தன்மை, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் நிறுவன சமூகப் பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் நேர்மையான, தகுதிவாய்ந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள தொழிற்படையை உருவாக்குவதில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். எமது பதவியணியினரை வலுவூட்டுவதில், நாங்கள் இரு மடங்கு அணுகுமுறையைப் பின்பற்றியுள்ளோம்: முதலாவதாக, செயலாற்றல் அடிப்படையிலான ஊக்குவிப்பு படிகள் உள்ளடங்கிய நிதி நலன்கள் மற்றும் சிறந்த வாழ்க்கை விடுதிகள் போன்ற நிதி அல்லாத நலன்களை எமது ஊழியர்களுக்கு ஆண்டு முழுவதும் வழங்கியுள்ளோம். பின்தங்கிய பகுதிகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு மின்சாரம், நீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகள் வழங்கப்பட்ட அதேவேளை மேலும் சிலருக்கு சூரிய சக்தி முறைமைகளும் பொருத்தப்பட்டு இலவச மண்ணெண்ணெய் மற்றும் தேங்காய்கள் வழங்கப்பட்டன. இரண்டாவதாக, தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம் அவர்களின் தற்போதைய அறிவு மற்றும் திறன்களை நாங்கள் வளர்த்துள்ளோம். கடந்த நிதியாண்டில், அனைத்து மட்டங்களிலும் உள்ள ஊழியர்களை உள்ளடக்கிய பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நாங்கள் நடத்தியுள்ளோம்.

**பூஜ்ஜிய காடழிப்பு மற்றும் பொறுப்பான நடுகை செய்வதற்கான அர்ப்பணிப்பு**

எங்கள் எல்லைக்குட்பட்ட அனைத்து நிலப்பரப்பையும் முழுமையாக பயிர்ச்செய்கை நோக்கத்திற்காக பயன்படுத்துவதன் மூலம் பொறுப்பான நடவு செய்வதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். மேலும், அரச காணிகளை காடழிப்பு அல்லது தவறான பயன்பாட்டில் இருந்து பாதுகாக்க அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம். பொறுப்பான நடவு செய்வதற்கான எங்கள் முயற்சியான வழங்கப்பட்டுள்ள நிலப்பரப்பினை அதன் மண்ணின் தரத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில், அதிகபட்ச விளைச்சலைப் பெற பிரதான பயிர்களின் ஊடுபயிர்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் மேலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆண்டில், KPL இன் கீழ் உள்ள அனைத்து தோட்டங்களின் காணிகளின் அளவையும், அவற்றின் சட்ட எல்லைகளை தெளிவாக வரையறுத்து, அதன் மூலம் முன்னேற்ற அளவீடுகளுக்கான யதார்த்தமான இலக்குகளை வரையறுப்பதற்கான அடித்தளத்தை அமைத்தோம்.

**கூட்டிணைந்த ஆளுகை மற்றும் இடஉ முகாமைத்துவம்**

பெருந்தோட்டத் துறைக்கும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் பொருந்தும் சிறந்த தொழில் நடைமுறைகள், அரசாங்கக் கொள்கைகள் மற்றும் விதிகள் மற்றும் பிரமாணங்களைப் பின்பற்றுவதன் மூலம் கூட்டிணைந்த ஆளுகை மற்றும் வணிக நடத்தை ஆகியவற்றின் உயர் தரத்தை நிலைநிறுத்துவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எனினும், ஒழுங்குமுறை கட்டுப்பாடுகள் எங்களிடம் உள்ள நிதி வலிமை மற்றும் இயலளவு ஆகியவற்றின் முழு திறனையும் மீறி எங்கள் பணிகளைச் செய்வதில் நடைமுறை சிக்கல்களை உருவாக்கியுள்ளன. இது தொடர்பில் பல தடவைகள் பொது தொழில்முயற்சிகள் அமைச்சில் நடைபெற்ற CORP குழு மற்றும் அமைச்சு கூட்டங்கள் உட்பட உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு நாம் கொண்டு சென்ற போதிலும் இதுவரை இந்த விடயத்தில் தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**சட்டத் தடைகளால் தாமதமாகிய செயன்முன்னேற்றம்**

2005 ஆம் ஆண்டு முதல் அரசாங்க உடைமையின் கீழ் இருக்கும் KPL அதன் செயல்பாடுகளை மேற்கொள்ளும் போது தொடர்புடைய அரசாங்க கொள்கைகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டது. இருப்பினும், நீடித்த ஒப்புதல் செயல்முறைகள் காரணமாக பணிகளை மேற்கொள்வதில் ஏற்படும் தாமதங்கள், சில சிக்கலான ஒப்புதல் நடைமுறைகளை அகற்றுவதன் மூலம் கட்டமைப்பின் கடினத்தன்மையை தளர்த்த வேண்டியதன் அவசியத்தை முன்னணியில் கொண்டு வந்துள்ளன. குறிப்பாக சுதந்திரமான முடிவெடுக்கும் விஷயத்தில் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் சுயாதீனத்தை பேணுவதற்கு இது இன்றியமையாததாகும்.

**சமூக மற்றும் தேசிய பங்களிப்பு**

சமூகத்திற்கும் நாட்டிற்கும் அதன் பங்களிப்பை பெரியளவில் அதிகரிக்க முயற்சிக்கும் போது KPL ஆனது சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கும், குறுங்கால பயிர்களை பயிரிட விரும்பும் ஏனைய ஆர்வமுள்ள தரப்பினருக்கும்.:.வெளி விவசாயிகளுக்கும் நிலத்தை குத்தகைக்கு விடுதல் நடைமுறையில் உள்ளது. இது ஒருபுறம் நமது களையெடுப்பு கிரயங்களை குறைத்த போதிலும், GDP இல் கணிசமான பங்களிப்பைச் செய்யும் அதே வேளையில், மறுபுறம், வெளிமாநில விவசாயிகள் தங்கள் தயாரிப்புகளில் நல்ல இலாபம் ஈட்ட முடிந்ததால், இது ஒரு வெற்றிகரமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. மேலும், இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதில் KPL உயர்தர முகாமைத்துவ நடைமுறைகளை கடைபிடித்தது, மேலும் இது கடந்த பல ஆண்டுகளாக பெற்ற விருதுகள் மற்றும் பாராட்டுக்கள் மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் விவசாயம் மற்றும் நிதி செயலாற்றல் என்பன நாட்டில் மிகவும் தொழில் ரீதியாக முகாமை செய்யப்படும் விவசாய வணிக நிறுவனங்களில் ஒன்றாக எங்களை நிலைநிறுத்தி எமது சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளுக்கு மேலும் சான்றாக நிற்கின்றன. இது தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் ஒரு 'மாதிரி பெருந்தோட்டக் கம்பனி' என்ற எங்களின் தூரநோக்கை நனவாக்கும் இலக்கை நோக்கி எங்களை நன்கு வழிநடாத்துகிறது.

**நம்பிக்கையுடன் தெரியும் எதிர்காலம்**

KPL எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் தன்னம்பிக்கையுடனும் எதிர்நோக்குகிறது, துன்பங்களை திறம்பட சமாளிக்கும் அதன் திறனை நம்புகிறது. கம்பனியின் இலாபத்தை மேலும் மேம்படுத்தும் முயற்சியில், KPL உருவாக்குதல் மற்றும் சந்தைப்படுத்துதல் உட்பட, அதன் தயாரிப்புக்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கு சாத்தியமான ஒவ்வொரு வழியையும் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது. தவிர, மற்றொரு வருமானம் ஈட்டும் செயற்திட்டமாக சுற்றுச்சூழல் சுற்றுலா செயற்திட்டங்களைத் தொடங்குவதற்கு KPL திட்டமிட்டுள்ளது. நீண்ட காலத்திற்கு, KPL ஆனது ஒரு பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கி அதனை விரிவுபடுத்துவதன் மூலம் பல்வகைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலம் அதே பாதையில் தொடர முடிவு செய்துள்ளது. அவ்வாறு செய்யும்போது, மேலே கலந்துரையாடப்பட்ட தடைகளை முறியடிப்பதற்கான ஒரு வழியாக பொது-தனியார் பங்குடமை முயற்சிகளின் சாத்தியத் தன்மையை ஆராய்வதற்கு KPL விரும்புகிறது.

**பாராட்டு**

கௌரவ அரச பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் மறுசீரமைப்பு அமைச்சரவை அல்லாத அமைச்சர் திரு. ரஞ்சித் சியபலாபிட்டிய அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்.

எம்.எம்.எஸ்.எஸ்.பி.யலேகம - அமைச்சரவை அல்லாத அரச பெருந்தோட்ட கைத்தொழில் மறுசீரமைப்பு அமைச்சரின் செயலாளர் திருமதி. ஏ.யு.கே. தொடன்வல – மேலதிக செயலாளர், பெருந்தோட்ட கைத்தொழில் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் எங்களுக்கு தங்களின் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிய ஏனைய அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சக பணிப்பாளர் சபைக்கு சபை தொடர்பான அனைத்து விடயங்களிலும் ஆர்வத்துடன் பங்கேற்றதற்காகவும், எல்லா நேரங்களிலும் அவர்கள் எனக்கு அளித்த அபரிமிதமான ஆதரவிற்காகவும் மனப்பூர்வமாக நன்றி கூறுகிறேன்.

முகாமைத்துவக் குழு மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் இந்த மீளாய்வாண்டில் அவர்கள் காட்டிய அபரிமிதமான அர்ப்பணிப்புக்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும் வரும் ஆண்டுகளிலும் இதைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்கிறேன். முடிவில், எங்கள் பங்குதாரர்கள் அனைவருக்கும் எமது கம்பனியின் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கைக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். வரும் ஆண்டுகளில் தங்களின் தொடர் ஆதரவையும் அனுசரணையையும் எதிர்பார்க்கிறேன்.



**கே.ஜே.ஜே.எவ். ஜெனட் ஜயவர்தன** (சட்டத்தரணி)
தலைவர்

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் ஆய்வுரை



வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் (KPL) பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான கம்பனியின் ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றை சமர்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்னுமொரு ஆக்கப்பூர்வமான ஆண்டை நிறைவு செய்துள்ளோம் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். எமது துல்லியமான விவசாய மூலோபாயம் மற்றும் எமது பெருந்தோட்டங்களின் சரியான முகாமைத்துவம் மூலம் கம்பனி அற்புதமான வெற்றிக்கு வழிவகுத்தது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, கடுமையான பொருளாதார நெருக்கடி நிலை, இயற்கை அனர்த்தங்கள், புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பல நாடுகளில் உள்ள ஆழமான அரசியல் பிளவுகள் ஆகியன மீளாய்வாண்டை கடினமாக்கியது.

மேலே குறிப்பிட்டுள்ள சவால்கள் காணப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டு பல மைல்கற்களுடன் KPL இற்கு உற்சாகமான ஒன்றாக இருந்தது. இது ஊழியர்களின் நேர்மையையும் KPL இன் நிலைப்பாட்டை வீழ்ச்சியடையாது நிலைநிறுத்துவதற்கான எமது விருப்பத்தையும் தைரியத்தையும் அதிகரித்துள்ளது. இது இலங்கையின் முதன்மையான பல்வகைப்பட்ட தெங்கு உற்பத்தி செய்யும் பெருந்தோட்டமாக மாற்றும் எமது நோக்கத்தில் கவனம் செலுத்தினோம். இந்த நேரத்தில் குறிப்பிடத்தக்க மைல்கற்கள் எட்டப்பட்டன. KPL இன் வரலாற்றில் முதன்முறையாக ரூபா. 500 மில்லியன் வரிக்கு முந்தைய இலாபத்தையும் (PBT) ரூபா. 1000 மில்லியனுக்கு அதிகமான புரள்வையும் கடந்துள்ளது.

**தெங்கு துறை**

மீளாய்வுக்குரிய நிதியாண்டில், எமது கம்பனி 12.9 மில்லியன் தேங்காய்களை அறுவடை செய்தது, இது 16 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. இந்த சரிவுக்கு நிறுவனம் எதிர்கொண்ட முக்கிய தடையாக உரம், விவசாய இரசாயனங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாதது ஆகும். ஈர, வறண்ட மற்றும் இடைநிலை விவசாய காலநிலை வலயத்தில் அமைந்துள்ள KPL தோட்டங்களில் காலநிலை மாற்றம் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இது தேங்காய் அறுவடை ஏற்ற இறக்கத்திற்கு முக்கிய காரணமாகும். எனினும், சொட்டு நீர் பாசனம், உமி புதைத்தல், குளங்களை உருவாக்குதல், ஊடுபயிர் பயிரிடுதல் மற்றும் ஊடு பயிர்கள் போன்ற பொருத்தமான விவசாய முறைகளால் வறட்சியின் பாதகமான விளைவுகள் குறைக்கப்பட்டன. மேலும் KPL அதன் நல்ல விவசாய மற்றும் கள முகாமைத்துவ நடைமுறைகளை பேணி வருகிறது, இது கடந்த சில ஆண்டுகளில் சிறப்பான பலன்களை வழங்கியுள்ளது. கீழ் நடுகை மற்றும் நிரப்புதல் ஆகியவை சிறந்த பலன்களை அளித்துள்ளன.

**இறப்பர் துறை**

இலங்கையில் பெருந்தோட்டப் பகுதிகளில் இடைவிடாத மழை, வடித்தல் நாட்களில் பூஞ்சை நோய் பரவியதால் 2023 ஆம் ஆண்டில் இறப்பர் உற்பத்தி 7.7 சதவீதத்தால் தொடர்ந்து வீழ்ச்சியடைந்ததுடன், சராசரி தேறிய விற்பனையும் வீழ்ச்சியடைந்திருந்தது. அதிக மழை வீழ்ச்சி மற்றும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அதிக மழையுடன் கூடிய நாட்கள் நிலவியமை ஆகியவற்றின் விளைவாக KPL இன் இறப்பர் உற்பத்தி 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

**ஏனைய பயிர்கள்**

2005 ஆம் ஆண்டு முதல், KPL ஆனது 2005 ஆம் ஆண்டில் 59.28 ஹெக்டெயரில் இருந்து 2023 ஆம் ஆண்டளவில் 920 ஹெக்டெயர் வரை ஊடுபயிராக பல்வகைப்படுத்தப்பட்டுள்ளது. குருநாகலின் வறண்ட வலய தோட்டங்களில் முந்திரி, இலவங்கப்பட்டை, டிராகன் பழம், மா, மற்றும் கொய்யா பயிரிடப்பட்டதுடன், கம்பஹாவின் ஈர வலயத்தில் ரம்புட்டான் மற்றும் தூரியன் பயிரிடப்பட்டது. பல ஆண்டுகளாக, ஊடுபயிர்கள் மூலம் KPL ரூபா 81 மில்லியன் வருமானத்தைப் பெற்றது.

**விவசாயம் அல்லாத அபிவிருத்தித் செயற்திட்டங்கள்**

KPL கம்பனிக்கு சொந்தமான 10 விற்பனைக் கூடங்களை நிறுவியுள்ளதுடன், பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளை வழங்குவதற்காக 45 பிரன்சைஸ் கடைகளுடன் நெருக்கமாக செயல்படுகிறது. கொக்கோ மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலாப் பயணிகளாக உள்ளூர் மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் நாரம்மல பிரதேச தோட்டங்களின் ஒலியாதெனிய பிரிவில் தேசிய தென்னை தொழில்நுட்ப பூங்காவும் ஆரம்பிக்கப்பட்டது.

**மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு**

எமது முன்னோக்கிய பயணத்தில், அறுவடையை அதிகரிப்பதன் மூலம் தென்னையின் கூட்டுத் தொழிலைப் பேணுவதற்கு நான்கு முக்கிய உத்திகளைத் தொடர்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இரண்டாம் நிலை வளர்ச்சி உத்தியாக, அதிபட்ச நில உற்பத்தித் திறனைப் பெறுவதற்கு சாத்தியமான ஊடுபயிர்களை மேலும் மேம்படுத்துவோம். மூன்றாவதாக தேங்காய், பழங்கள், மசாலாப் பொருட்கள் மற்றும் குறைந்த பயன்பாட்டுப் பொருட்களான கித்துல், பலா போன்றவற்றுக்கு பெறுமதி சேர்த்தல் ஆகும். உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சந்தை வலையமைப்பை உருவாக்குவதே இறுதி மற்றும் நான்காவது வளர்ச்சி உத்தியாகும்.

2023 ஆம் ஆண்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் KPL கூடைக்கு தேங்காய் ஐஸ்கிரீமை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது வாடிக்கையாளர்களின் நம்பமுடியாத ஈர்ப்பை நிரூபித்துள்ளது. எதிர்காலத்தில் KPL உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளைப் பூர்த்தி செய்ய ஒரு அதி நவீன தேங்காய் ஐஸ்கிரீம் தொழிற்சாலையை நிறுவ உத்தேசித்துள்ளது. பெறுமதி சங்கிலியை மதிப்பீடு செய்து, ஒவ்வொரு வியாபாரப் பிரிவிலும் எமது போட்டி நிலையைப் பகுப்பாய்வு செய்யும் அதே வேளையில் வளர்ச்சி வேகத்தை நீண்ட காலத்திற்கு வைத்திருக்க வெவ்வேறு தெரிவுகளைக் கருத்தில் கொண்டுள்ளோம்.

குறுகிய கால மற்றும் நடுத்தர காலத்திற்கு, நாம் எமது உபாய நோக்கங்களுடன் இணைந்த நிதி மற்றும் மனித வளங்களை ஒதுக்குவோம். எமது ஊழியர்களின் பயிற்சி மற்றும் மேம்பாடு மற்றும் புதிய திறமைகளைப் பெறுதல் என்பவை எமது வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றன. எமது குழுவின் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் பயிற்சிக்காகப் பல உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவோம். உற்பத்தி சொத்துக்களை மேம்படுத்துவதற்கும், எமது தோட்டங்களில் சமூக உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும் எமது மூலதன செலவின வரவுசெலவுத் திட்டம் தொடரப்படும்.

**நிஉவாகம் மற்றும் மேற்பாஉவை பொறுப்பு**

அனைத்து பங்குதாரர்களுக்கும் எமது கடப்பாட்டின் ஒரு பகுதியாக, சிறந்த கூட்டிணைந்த ஆளுகையே நிலையான நிறுவனத்தை வளர்ப்பதற்கான மூலக்கல்லாகும் என்பதை நாங்கள் நம்புகிறோம். இதன் விளைவாக, ஆளுகைச் செயன்முறைகளில் உயர் தரத்தைப் பேணுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இடர்களை மதிப்பிடுவதற்கும் முகாமை செய்வதற்கும் சபை முகாமைத்துவத்துடன் நெருக்கமாக ஒத்துழைக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன், இதனால் தொழில்துறை தொடர்ந்து எதிர்கொள்ளும் எண்ணற்ற பிரச்சனைகளை சமாளிக்க கம்பனியை அனுமதிக்கிறது.

**எதிர்கால கண்ணோட்டம்**

நிலையான பெருந்தோட்ட அபிவிருத்தி என்ற எமது நீண்டகால நோக்கத்துடன், எமது அபிவிருத்தி மற்றும் பல்வகைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நாங்கள் தொடர்வோம். ஒரு மூலோபாய மட்டத்தில், எமது நீண்ட கால கவனம் எமது முக்கிய பெருந்தோட்ட வணிகத்தை மேம்படுத்தி ஒருங்கிணைப்பதில் உள்ளது. இதன் விளைவாக, கம்பனி அதன் நீண்டகால நம்பகத்தன்மையை உறுதிசெய்து, வெறும் முதன்மை உற்பத்தியாளரிடமிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்பு கம்பனியாக மாறுவதற்கு வெவ்வேறு பயிர் பெறுமதி உருவாக்கல் முயற்சிகளை ஆராயும்.

எதிர்காலம் எமக்கு சிறந்த காலமாக அமையும் என நான் நம்புகின்றேன். தற்போது உள்ளூர் தேங்காய்த் தொழிலில் தேவை மந்தமாக உள்ளதால், மீட்சி மெதுவான வேகத்தில் இருப்பதாகத் தோன்றுகின்ற போதிலும், நீண்ட கால நலன்களைப் பெறுவதற்கு சந்தை நிலவரங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் இறப்பர் தொழில் துறையும் நிறுவனத்திற்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் என நான் நம்புகிறேன். அதனால்தான், வணிகத்தின் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பெறுமதியை உருவாக்குவதற்கு, வளர்ந்து வரும் வாய்ப்புக்களை மேம்படுத்துவதன் மூலம், எமது நான்கு வணிகப் பிரிவுகளும் எங்களுக்கு நீண்ட கால வெற்றியைக் கொண்டு வருவதற்குத் தொடர்ந்து சிறப்பாக நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்வதில் நாங்கள் முழுமையாக கடப்பாட்டுடன் இருக்கிறோம். நல்ல நாட்கள் வரும் என்று நம்புகிறேன். கொவிட்-19 தொற்றுநோயின் விளைவு காரணமாக மீட்சி எதிர்பார்த்ததை விட அதிக நேரம் எடுத்துக்கொள்வதாகத் தோன்றினாலும், நமது தென்னந்தோப்பில் இருந்து நீண்டகால நலன்களைப் பெறுவதற்கு நாம் நிலையானதாக இருக்க வேண்டும். கடந்த ஏழு வருடங்களாக அனுபவித்து வந்த கஷ்டங்களுக்கு முடிவு கட்டி 2023 ஆம் ஆண்டில் இறப்பர் துறை மீண்டு வரும் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன், தென்னையில் ஊடுபயிராக, எப்போதும் கணிசமான லாபம் கிடைக்கிறது. அதனால்தான், எதிர்காலத்தில், அனைத்து கம்பனி பங்குதாரர்களுக்கும் பெறுமதியை உருவாக்குவதற்கு, வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, நீண்ட கால வெற்றியை எமக்கு வழங்குவதற்கு, எங்கள் வணிகத் துறைகளில் மும்மடங்கு தொடர்ந்து நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்வதில் நாங்கள் முழு ஈடுபாட்டுடன் இருப்போம். அதே நேரத்தில், பல ஆண்டுகளாக எங்கள் வெற்றிக்கு வழிவகுத்த அடிப்படை இலட்சியங்களை நாங்கள் நிலைநிறுத்துவோம். பெறுமதி உருவாக்கத்தின் முன்னணியில்

தொடர்தலானது பின்வரும் மேற்கோளில் காட்டப்பட்டுள்ளவாறு செயற்திறன் மற்றும் தற்போதைய கண்டுபிடிப்புக்களில் சமரசமற்ற கவனம் செலுத்துதலை பேணுவதை கருதுகின்றது.

நல்ல காலம் வரும் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். மீட்சியானது பொருளாதார நெருக்கடியின் மெதுவான வேகத்தில் இருப்பதாகத் தோன்றினாலும், பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களின் அதிகபட்ச பலன்களைப் பெறுவதற்கு சந்தை விரிவாக்கத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். 2024 ஆம் ஆண்டில் ரப்பர் தொழில்துறையும் மீண்டும் எழுச்சி பெறும் என்று நான் நம்புகிறேன், இது கடந்த ஏழு ஆண்டுகளாக நாங்கள் எதிர்கொண்ட சிரமங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும். அதனால்தான், வணிகத்தின் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் மதிப்பை உருவாக்க, வளர்ந்து வரும் வாய்ப்புகளை மேம்படுத்துவதன் மூலம், நீண்ட கால வெற்றியை எமக்குக் கொண்டு வருவதற்கு, எங்கள் வணிகப் பிரிவுகள் தொடர்ந்து நன்கு நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்வதில் நாங்கள் முழுமையாக உறுதியாக இருக்கிறோம். நல்ல நாட்கள் வரும் என்று நம்புகிறேன். பொருளாதார நெருக்கடியின் விளைவு காரணமாக மீட்பு எதிர்பார்த்ததை விட நீண்ட காலம் எடுப்பதாகத் தோன்றினாலும், நமது தென்னந்தோப்பில் இருந்து நீண்ட கால பலன்களைப் பெறுவதற்கு நாம் நிலையானதாக இருக்க வேண்டும். 2024-ல் ரப்பர் துறை மீண்டு வரும் என்று நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன், கடந்த ஏழு வருடங்களாக அனுபவித்த கஷ்டங்களுக்கு முடிவு கட்டும். தென்னையில் ஊடுபயிராக, எப்போதும் கணிசமான லாபம் கிடைக்கிறது. அதனால்தான், எதிர்காலத்தில், அனைத்து நிறுவனப் பங்குதாரர்களுக்கும் மதிப்பை உருவாக்க, வளர்ந்து வரும் சாத்தியக்கூறுகளைப் பயன்படுத்தி, நீண்ட கால வெற்றியை எமக்கு வழங்குவதற்காக, எங்களின் நான்கு மடங்கு வணிகத் துறைகள் தொடர்ந்து நன்கு நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்வதில் நாங்கள் முழுமையாக உறுதியாக இருப்போம். அதே நேரத்தில், பல ஆண்டுகளாக எங்கள் வெற்றிக்கு வழிவகுத்த அடிப்படை இலட்சியங்களை நாங்கள் நிலைநிறுத்துவோம். மதிப்பு உருவாக்கத்தின் முன்னணியில் தொடர்வது என்பது செயல்திறன் மற்றும் தற்போதைய கண்டுபிடிப்புகளில் சமரசமற்ற கவனம் செலுத்துவதாகும்.

**நன்றி நவில்தல்கள்**

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ திரு. ரஞ்சித் சியம்பலாபிடிய அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அமைச்சரவை அல்லாத அரச பெருந்தோட்ட கைத்தொழில் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் கலாநிதி எம்.எம்.எஸ்.எஸ்.பி.யலேகம, மேலதிக செயலாளர் திருமதி ஏ.யு.கே.தொடன்வல மற்றும் ஏனைய அமைச்சின் உத்தியோகத்தர்கள் பெரும் உதவியும் ஊக்கமும் அளித்துள்ளனர்.ஏனைய அமைச்சின் அதிகாரிகள் இந்த வருடத்தில் சிறப்பான இலக்குகளை அடைய ஊக்குவித்து உதவியவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எமது தலைவி திருமதி கே.ஜீ.ஜீ.எவ். ஜெனட் ஜெயவர்தன அவர்களுக்கும், அவர்களின் முக்கிய உள்ளீடுகள், ஊக்கம் மற்றும் ஆதரவுக்காக மற்ற நிர்வாக சபையினரையும் எங்களையும் இடையறாமல் வழிநடாத்தியதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறுதியாக, கோப்பரேட் அட்வைசறி சேர்விஸஸ் (பிறைவேட்) லிமிட்டட் - KPL இன் செயலாளர்கள் மற்றும் எமது ஏனைய பங்குதாரர்கள் அனைவருக்கும் இந்த வருடத்தில் நிறுவனத்தின் வெற்றிக்கு தங்களின் பங்களிப்பிற்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி இந்த சிறந்த வெற்றிகளைத் தொடர்ந்து பெறுவதற்கு உதவிய எமது திறமையான சிரேஷ்ட முகாமைத்துவக் குழு, பிரதேச அத்தியட்சகர்கள் மற்றும் அனைத்து பதவியணியினரிற்கும் அவர்களின் ஆர்வம், அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்திற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**கலாநிதி. எஸ்.எம்.எம். சமரகோன்**
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்



**திருமதி கே.ஜீ.ஜீ.எவ்.**
**ஜெனட் ஜயவர்தன**
தலைவர்

திருமதி கே.ஜீ.ஜீ.எவ். ஜெனட் ஜயவர்தன 2022 ஒக்தோபர் 06 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் 1998 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது L.L.B ஐ பூர்த்திசெய்து குருநாகல் மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணியாற்றினார்.

இவர் 2019 முதல் அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும், பொல்கொல்லவில் உள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளார். திருமதி. ஜயவர்தன வடமேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கான சட்ட ஆலோசகர் (2004 -2013) மற்றும் ஆசிய நிதிக்கான சட்ட ஆலோசகர் ஆவார்.

திருமதி ஜெனட் ஜயவர்தன முன்னாள் பிரதமர் கௌரவ. திரு. மஹிந்த ராஜபக்ஷவிற்கான ஒருங்கிணைப்பு செயலாளராக இருந்தார்.

திருமதி ஜெனட் ஜயவர்தன 2003 இல் ஜப்பான் சட்டத்தரணிகள் சங்க சம்மேளனம் - சட்டம் ஆசியா மற்றும் 2005 இல் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கம் - பணமோசடி சட்டத்திற்கான மன்றம் போன்ற பல சர்வதேச மன்றங்களில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.



**திரு.டபிள்யூ.எம்.டி. விஜேபண்டார**
பணிப்பாளர் – திறைசேரி பிரதிநிதி

2022 மார்ச் 02 முதல் அமுலுக்கு வரும் வகையில் வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளராக/ திறைசேரி பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட திரு. விஜேபண்டார, பொது திறைசேரியில் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் உள்ளார்.

இவர் 2005 இல் களனிப் பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவமானி (கணக்கியல்) சிறப்புப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததுடன் 2020 இல் களனிப் பல்கலைக்கழகத்தில் வணிக முதுமானிப் பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார். மேலும் இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (CA) இடைநிலை மட்டத்தை பூர்த்தி செய்துள்ளார்.

திரு. விஜேபண்டார 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை மெதிரிகிரிய, ஹிகுராக்கொட மற்றும் எலஹர ஆகிய பிரதேச செயலகங்களில் கணக்காளராக தனது சேவையைத் தொடங்கினார். 2016 முதல் அவர் பொது திறைசேரியில் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் உதவி பணிப்பாளராக (விசேட கணக்காய்வு மற்றும் புலனாய்வு) பணிபுரிந்ததுடன் 2019 முதல் அவர் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக (முறைமை கணக்காய்வு) பணியாற்றுகிறார்.

திரு. விஜேபண்டார 2012 - 2013 இல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் (SLIDA) பொது பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்தில் டிப்ளோமாவை (DIPPCA) பின்பற்றியிருந்ததுடன் இவர் 2017 இல் பொது பெறுகை பற்றிய சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்தையும் (CPPP) 2018 இல் மிலொட நிதியியல் கற்கைகள் அக்கடமியில் தொழில்முறை கல்வியாளர்களுக்கான ஆங்கிலத்தில் டிப்ளோமாவையும் பூர்த்தி செய்துள்ளார். மேலும் இவர் 2019 முதல் IT கணக்காய்வு தொடர்பாக பல்வேறு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கற்கைநெறிகளை பூர்த்தி செய்துள்ளார்.



**திருமதி. அமிதா தொடன்வல**
பணிப்பாளர்

ஏ.யு.கே. தொடன்வல குருநாகல் பிளான்டேஷன் லிமிடெட்டின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக தனது கடமைகளை திறம்பட நிறைவேற்றுகிறார். அவர் அரச பெருந்தோட்ட கைத்தொழில் மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக பதவி வகித்து வருவதால், அவர் சபையின் உத்தியோகபூர்வ உறுப்பினராக பணியாற்றுகிறார். திருமதி. ஏ.யு.கே. தொடன்வல பொதுத்துறையில் உயர் முகாமைத்துவ பதவிகளில் 24 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள இலங்கை நிர்வாக சேவையின் சிறப்புத் தர உத்தியோகத்தர் ஆவார். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தில் பொது முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டத்தையும் பெற்றார். பல்வேறு அரச நிறவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினராக அவரது வேறுபட்ட அனுபவங்கள் சபைக்கு பெறுமதிமிக்க முன்னோக்குகளை வழங்குகின்றன, குழுப்பணியை வலுப்படுத்தல் மற்றும் சிறந்த வணிக முடிவுகளுக்கு வழிவகுக்கும் தூரநோக்கு, இலக்குகள் மற்றும் மூலோபாயங்களை தயாரித்தல்.



**திரு.டபிள்யூ.ஏ.ஜே.ஜீ.டி. விஜேசிங்க**
பணிப்பாளர்

திரு. விஜேசிங்க 2020 சனவரி 15 முதல் வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் உறுப்பினராக பணியாற்றினார். இவர் தகவல் தொழில்நுட்பத் துறையில் பரந்த அறிவைக் கொண்டுள்ளதுடன் ஒரு தொழில்முனைவோராக சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அதிக அனுபவத்தைப் பெற்றவர்.

இவர் குருநாகல் மலியதேவ கல்லூரியில் பயின்றதுடன் 2002 இல் தனது உயர்தரப் பரீட்சைகளை பூர்த்தி செய்தார். இலங்கை தகவல் தொழில்நுட்ப அக்கடமியில் (AIT) IT பட்டப்படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளார். தற்போது இவர் குருநாகல் தேசப்பிரிய குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக உள்ளார்.



**திரு. கோசல ரங்கல**
பணிப்பாளர

குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிடெட் கம்பனியின் பணிப்பாளராக கோசல ரங்கல 2023 செப்தம்பர் 21 ஆந் திகதி நியமிக்கப்பட்டார். கண்டி டிரினிட்டி கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவர் திரு. 1982 இல் தனது உயர்தரப் பரீட்சையை முடித்த சிறிது காலத்திலேயே ரங்கல தனது தொழில்முறை பயணத்தைத் தொடங்கினார். வணிக உலகில் முன்னணி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் நோக்குடன், அவர் தனது சொந்த நிறுவனமான கன்சோலிடேட்டட் மல்டி டிரேடிங் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியை நிறுவினார், அங்கு அவர் வெற்றிகரமாக நிர்வாக பணிப்பாளராக பதவி வகித்தார். வணிக முகாமைத்துவம் மற்றும் மூலோபாய தலைமைத்துவத்தில் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் வர்த்தக துறையில் 30 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள திரு. ரங்கல துறையின் பல ஏற்ற தாழ்வுகளைக் கண்டு, கடந்து வந்துள்ளார். கைத்தொழில் துறையின் இயக்கம் பற்றிய அவரது ஆழமான புரிதல் ஒரு வணிகத் தலைவராக அவரது வெற்றிக்கு உதவியாக இருந்தது.

அவரது முயற்சியாண்மை முயற்சிகளுக்கு மேலதிகமாக, திரு. ரங்கல யூரோ ஸ்டுடிவர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் செயல்பாட்டு முகாமையாளராகவும் பணியாற்றுகிறார், அங்கு அவர் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு நிர்வகிக்கிறார், மேலும் பல தொழில்களில் தனது பல்துறை மற்றும் நிபுணத்துவத்தை மேலும் வெளிப்படுத்துகிறார். இந்த நிறுவனங்களில் அவரது தலைமைப் பாத்திரங்கள், சிறந்து விளங்குவதற்கான அவரது அர்ப்பணிப்பையும், சிக்கலான வணிகச் சூழல்களை எளிதில் வழிநடத்தும் திறனையும் வலியுறுத்துகின்றது.

வரையறுக்கப்பட்ட குருநாகல் பிளான்டேஷன்ஸ் லிமிடெட் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு திரு. ரங்கலாவின் நியமனம் அவரது தொழில் வாழ்க்கையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது, இது அவரது அர்ப்பணிப்பு மற்றும் கைத்தொழில் துறைக்கான தொடர்ச்சியான பங்களிப்பை பிரதிபலிக்கிறது.



**திரு. ரீ.டீ.எம்.பீ. பண்டார**
பணிப்பாளர்

திரு. ரீ.டீ.எம்.பீ. பண்டார அவர்கள் 2024 மார்ச் 01 ஆந் திகதி முதல் வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் சபை உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.



**திரு. டீ.சீ.ஜே. பிரேமதிலக்க**
பணிப்பாளர்

திரு. டீ.சீ.ஜே. பிரேமதிலக்க அவர்கள் 2024 மார்ச் 01 ஆந் திகதி முதல் வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் சபை உறுப்பினராக பணியாற்றியுள்ளார்.

சிரேஷ்ட முகாமைத்துவம்



பிரதம நிறைவேற்று அதிகாரி
**எஸ்.எம்.எம்.சமரக்கோன்**
PHD, M. Sc. (Agric.Econ.)
B. Sc. (Agriculture) Hons.



பிரதிப் பொது முகாமையாளர்
**திரு ஏ.எம்.எஸ்.பீ அத்தநாயக்க**
M.Sc. Agriculture
B.Sc. Agriculture



மேலாளர் - நிதி
**திரு.டி.ஐ.கே. திசாநாயக்க**
B.B. Mgt. (Human Resource)
(Special),
CBA,



முகாமையாளர்
மனித வளம் மற்றும் நிருவாகம்
**திரு ஐ.ஏ. குணசேக்கர**
B.B. Mgt. (Human Resource) Hons.
PG Dip M (SL)



முகாமையாளர்
தோட்ட கண்காணிப்பும் ஒருங்கிணைப்பும்
**திரு எஸ்.எம். ஆர். பி சத்குமார**
B. Sc. (Agricultural Sciences)
Specializing Plantation Management



முகாமையாளர்
சந்தைப்படுத்தல்
**திரு ஜே.மேக.ஜே.பி ஜயவர்தன**
M.Sc. (Agricultural Extension)
B. Sc. (Agriculture)



முகாமையாளர்
கணக்காய்வு / முகாமையாளர் நிதி
(குறித்துரைக்கப்பட்ட)
**திரு எம்.கே.என். அபேதீர**
Bachelor of Commerce (Special)
CBA



திரு ஜீ.கே.ஏ ஜயவர்தன



திரு ஆர்.எம்.பி.யு. பிரசாந்த
B.V.Sc. Registered Veterinary
Surgeon & Practitioner



திரு எம்.ரீ.ஜே பெரேரா
B.Sc. (Agriculture) (Special) Hons



திரு டப். எம். ஜீ.கே பி. வீரசிங்க
B.Sc. Plantation Management
MBA



திரு எஸ்.எல்.பி. விதானகே
B.Sc. Plantation Management



திரு.கே.ஏ.ஜீ. சந்தனா
B.Sc. (Agriculture) (Special) Hons



திரு. எஸ்.ஜீ.ஜீ.ஐ. வீரகோன்
M.AETM, B.Sc. (Plantation Management),
Dip. in Agriculture

ஒரு பெருந்தோட்ட கம்பனியாக, பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை உருவாக்குவதன் மூலம் வளர்ச்சியை அதிகரிப்பதன் ஊடாக நிலைத்தன்மையை உறுதி செய்வதில் KPL உறுதியாக உள்ளது. பொருளாதார நிலைத்தன்மை, இது கம்பனியின் நிதி நிலைத்தன்மையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, பங்குதாரர்களுக்கு பொருளாதார நன்மைகளை கொண்டு வரும் போது சமூகங்களுக்கு பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குகிறது. விவசாய அடிப்படையிலான கம்பனியாக இருப்பதால், அதன் நிதி நிலைத்தன்மை சுற்றுச்சூழல் நிலைத்தன்மையுடன் பிரிக்கமுடியாத வகையில் பின்னிப்பிணைந்துள்ளது, இதையொட்டி கம்பனி இயற்கை சூழலையும் சுற்றுச்சூழல் முறைமையையும் பாதுகாத்து பேண வேண்டும். இதற்கு நிச்சயமாக காணி மற்றும் நீரின் நிலையான பயன்பாடு மற்றும் கம்பனியின் வணிக நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இயற்கை வளங்களைப் பாதுகாப்பது உட்பட நிலையான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவது அவசியமாகும். பெருந்தோட்டத் தோட்டங்களுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள சமூக தொடர்புகளின் மூலம் சமூக நிலைத்தன்மை கம்பனியால் ஊக்குவிக்கப்படுகிறது. சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் மக்கள் எமது வணிகத்தின் ஒரு அங்கமாக இருப்பதால், இந்த சமூகங்களுடனான தொடர்பு சந்தேகத்திற்கு இடமின்றி சமூக ஒற்றுமையை வளர்க்கும் என்று நாங்கள் நம்புகிறோம். தவிர, அரச உடமையாக்கப்பட்ட கம்பனியாக இருப்பதால், நாங்கள் பொதுப் பொறுப்புக்கூறலுக்கு உட்பட்டவர்களாக இருப்பதால், நல்லாட்சிக்காக நாங்கள் கடப்பாடுடையவர்களாக உள்ளோம். இது சம்பந்தமாக, ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு வெளிப்படையான செயன்முறைகள், வழக்கமான கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றின் மூலம் நல்லாளுகைக்காக நாங்கள் பாடுபடுகிறோம்.

**நிலையான விவசாய நடைமுறைகள்**

அதிகபட்ச உற்பத்தித்திறனை உறுதி செய்வதற்காக நிலையான விவசாய முகாமைத்துவ நடைமுறைகளை நாங்கள் தொடர்ந்து ஊக்குவித்துள்ளோம். எனவே, வினைத்திறன், பயிர் பல்வகைப்படுத்தல், இடைப் பயிர் மற்றும் நடுகை ஆகியவற்றிற்கான அதிகரித்த நிலப் பயன்பாடு மூலம். இந்த நடைமுறைகள் எமது ஏழு தோட்டங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன, அதிக உற்பத்தித்திறனுக்காக நில பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு, "ஒரு ஏக்கருக்கு அதிகபட்ச பனைகள்" கொள்கையைப் பின்பற்றுவதற்கு நாங்கள் பெரும் முயற்சி எடுத்துள்ளோம். தற்போது அனைத்து வகையான நிலங்களிலும் நடுகை மேற்கொள்ளப்படுகிறது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு மொத்த தென்னை நிலப்பரப்பில் 16% (589.18 ஹெக்டெயர்) ஆக பதிவு செய்யப்பட்டதுடன், அந்த ஆண்டில் முதிர்ச்சியடையாத தென்னந்தோப்புகளில் ரூபா 162 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. ஒரு ஏக்கருக்கான மரங்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட இந்த அதிகரிப்பு சந்தேகத்திற்கு இடமின்றி எதிர்காலத்தில் எமது அனைத்து தோட்டங்களிலிருந்தும் தேங்காய் விளைச்சலை மேம்படுத்தும், அதன் மூலம் கம்பனியின் நிலைத்தன்மை நீடிக்கும். கரிமமல்லாத உரங்களின் தடைப்பட்ட பயன்பாட்டுடன் கூடிய கரிம உரங்களின் பயன்பாடு, சுருக்கப்பட்ட வடிகாண், ஈரப்பாதுகாப்பு மூட்டம் போன்ற நமது சிறந்த விவசாய நடைமுறைகள், நமது நிலங்களின் நிலையான உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு பங்களித்துள்ளன. தவிர, மண் வளம், ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் திறன், மண் காற்றோட்டம், நுண்துளை அமைப்பு மற்றும் மண்ணின் ஆரோக்கியமான நுண்ணுயிர் செயற்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு கரிம உரங்களின் பயன்பாடு பங்களித்துள்ளது. மண்ணின் இந்த சாதகமான பண்புகள் நல்ல விவசாய நடைமுறைகள் மற்றும் நமது நிலங்களின் நிலைத்தன்மைக்கான நமது அர்ப்பணிப்புக்கு சாட்சியமளிக்கின்றன.

**பெருந்தோட்டங்களில் செயற்கை இரசாயனங்களின் பயன்பாட்டைக் குறைத்தல்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது கம்பனியின் முக்கிய கவனம் செலுத்துதலொன்றாக இருப்பதால், களைக்கொல்லிகள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூஞ்சைக் கொல்லிகள் போன்ற செயற்கை இரசாயனங்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம், அதே நேரத்தில் கரிம உரத்தின் பயன்பாட்டை அதிகரித்து உயிரியல் மற்றும் இயந்திரக் கட்டுப்பாடுகளைப் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

**உயிரியல் கட்டுப்பாடு**

- தென்னந்தோப்புகளில் சாதாரணப் பூச்சிகளை (Aceria guerreronis) கட்டுப்படுத்த வேட்டையாடும் பூச்சிகளை (Neoseiulus baraki) பயன்படுத்துதல் - வேட்டையாடும் பூச்சிகளின் உற்பத்தி கட்டுகம்பொலவில் உள்ள முழு அளவிலான இனப்பெருக்க ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த சுற்றுச்சூழல் நட்பு நுட்பம் மிகவும் நம்பிக்கைக்குரிய முடிவுகளைக் காட்டியுள்ளது.
- பெரோமோன் பொறிகள் - பழத் தோட்டங்களில் பழ ஈ (டிரோசோபிலா இனங்கள்) மற்றும் தென்னந்தோப்புகளில் சிவப்பு அந்துப்பூச்சி (ரைன்கோபோரஸ் பெருஜினியஸ்) ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்.

- முந்திரி தோட்டங்களில் ஹெலோபெல்டிஸ் கொசுவை கட்டுப்படுத்துவதற்காக சிவப்பு எறும்புகளின் (சோலெனோபிசிஸ் இனங்கள்) அறிமுகம்.

**இயந்திர கட்டுப்பாடு**

ஒரு களைக்கொல்லியாக கிளைபோசேட்மை பயன்படுத்துதல் பல்வேறு மன்றங்களில் பரவலாக விவாதிக்கப்பட்டு தற்போது அரசாங்கம் இந்த இரசாயனத்தின் பயன்பாட்டை தடை செய்துள்ளது. மாற்று களைக்கட்டுப்பாட்டு பொறிமுறைகளாக, பின்வரும் முறைகளை நாங்கள் சோதித்து மதிப்பீடு செய்து வருகிறோம்.

- உழுதல், பிரித்தல் மற்றும் வெட்டுதலிதற்கு இயந்திரங்களைப் பயன்படுத்துதல்
- கால்நடைகளை மேய்த்தல்
- மூடும் பயிர்களை உருவாக்குதல்
- உர வட்டங்களை பாதுகாக்கும் தழைக்கூளம் இடுதல்

**கரிம உரப் பயன்பாடு**

இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைப்பதற்கு கம்பனி எடுத்த ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையானது அதற்குப் பதிலாக கரிம உரத்தைப் பயன்படுத்துவதைத் தெரிவுசெய்வதாகும். மேலும், எமது பெருந்தோட்டங்களில் இரசாயனங்களின் பாவனை மற்றும் கையாளுதல் என்பன விழிப்புடன் கண்காணிக்கப்படுகின்றன. கள மட்டத்தில் இந்த இரசாயனங்களை தெளித்து கையாளும் ஊழியர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அபாயங்கள் காரணமாக கட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு கல்வி அளிக்கப்படுகிறது.

**பல்லுயிர்**

பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்த எமது அனைத்து தோட்டங்களிலும் தீவிரமாக பணியாற்றி வருகிறோம். பெருந்தோட்டத்தின் தற்போதைய நிலப்பரப்பு மற்றும் ஊடுபயிர் மற்றும் மரத்தின் பொருத்தமான வகைகளுக்கு பயிரிடக்கூடிய பரப்பை எதிர்காலத்தில் விரிவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இரண்டையும் கண்டறிவதற்கான மதிப்பீடுகளை நாங்கள் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளோம்.

KPL அதனது தோட்டங்களில் உள்ள மரங்களிலிருந்து ஒரு நுகரத்தக்க உயிரியல் சொத்தாக அறுவடை செய்யக்கூடிய மதிப்புமிக்க மரங்களைப் பற்றி அறிந்திருக்கிறது. மாகாண சுற்றாடல் அதிகாரசபை, வன திணைக்களம், பெருந்தோட்ட அமைச்சு மற்றும் பிரதேச செயலகத்தின் அங்கீகாரத்தைப் பெற்று முறையான வகையில் முதிர்ந்த மரங்கள் அறுவடை செய்யப்படுகின்றன. நிலைத்தன்மையைப் பேணுவதற்காக அறுவடை செய்யப்படும் மரங்களுக்குப் பதிலாக மீண்டும் நடுகை செய்யும் நடவடிக்கைகளை எமது கம்பனி முறையாக நிறுவியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஊழியஉ நலன்கள் மற்றும் ஊக்கப்படுத்தல்**

KPL அதனது ஊழியர்களுக்கு பாதுகாப்பான, இனிமையான மற்றும் நலனளிக்கும் பணிச்சூழலை வழங்குவதற்கான அதன் கடப்பாட்டில் உறுதியாக உள்ளது. தகுதிவாய்ந்த, அனுபவம் வாய்ந்த மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த தொழில் வல்லுநர்கள் என போட்டி நலன்களைக் கொண்ட எமது ஊழியர்கள் எங்களின் மிகவும் மதிப்புமிக்க சொத்தாக இருக்கிறார்கள். எமது பெருந்தோட்டங்களின் இலாபகரமான முகாமைத்துவத்திற்கான உயர்தர தொழில்சார் திறன் மற்றும் நிபுணத்துவத்தின் அவசியத்தை பாராட்டுவதன் மூலம், KPL தொடர்ந்து பொருத்தமான திறன்களையும் அறிவையும் கொண்ட மனித மூலதன அடித்தளத்தைப் பெற்று வளர்ப்பதற்கு முயற்சிக்கிறது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில், ழூடு இன் மொத்த வேலைப்படை 1150 பணியாளர்களைக் கொண்டிருந்தது.

**செயலாற்றல் அடிப்படையிலான ஊக்குவிப்பு படி கொடுப்பனவு**

கம்பனி 2005 இல் செயலாற்றல் அடிப்படையிலான ஊக்குவிப்பு படித் திட்டத்தைத் தொடங்கி அதன் ஊழியர்களை சிறந்த செயலாற்றலை வழங்குவதற்கு ஊக்குவிக்கும் அதே நேரம் அதைத் தொடர்கிறது. 2023 ஆம் ஆண்டில் செயலாற்றல் அடிப்படையிலான ஊக்குவிப்பு படி கொடுப்பனவிற்காக நிதிக்கூற்றுக்களில் ரூபா 90 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்கான தொகை ரூபா 90 மில்லியனாகும். மாதாந்த ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு இரண்டு மாத சேமலாப நிதிய சம்பள பெறுமதி மற்றும் நாளாந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு படியாக ரூபா 50,000 செலுத்தும் பொருட்டு இந்நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

**எமது ஊழியர்கள் அனுபவிக்கும் ஏனைய நலன்கள்:**

- குறைந்த வட்டி விகிதத்தில் இடர் கடன் வசதிகள்
- பாடசாலை புத்தகங்கள் மற்றும் புடவைகளுக்கு வட்டியில்லா கடன்கள்
- வீட்டு உபயோகத்திற்காக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான தேங்காய்களை அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு தேங்காய்க்கு ரூபா 1 ஆன மிகவும் பெயரளவு விலையில் வழங்குதல்
- உதிர்ந்த தேங்காய் சேகரிப்பு மற்றும் காவலாளிகளுக்கு வழக்கமான மாதாந்த வருகைக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்
- மின்சாரம் இல்லாத காவலாளிகளுக்கு மண்ணெண்ணெய் கொடுப்பனவு
- அனைத்து ஊழியர்களுக்கும் தொழிலாளர் இழப்பீட்டுக் காப்புறுதி
- நிறைவேற்றுநர்களுக்கு ரூபா 1 மில்லியன் தனிநபர் விபத்து காப்புறுதி
- நிறைவேற்றுநர்களுக்கு ஒரு குடும்ப அலகுக்கு ரூபா 450,000 மருத்துவக் காப்புறுதி

- பதவியணி உறுப்பினர்களின் உயர் கல்விக்கான நிதி உதவி
- ஊழியர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்விக்கான புலமைப்பரிசில்
- பெற்றுக்கொள்ளாத மருத்துவ விடுமுறைக்கு ஒரு மாத சம்பளக் கொடுப்பனவு

**குடியிருப்பு வசதிகள்**

கடந்த சில வருடங்களாக எமது பெருந்தோட்டங்கள் முழுவதிலும் உள்ள வீட்டு நிலைமைகளை மேம்படுத்துவதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். கம்பனி எப்பொழுதும் வசிக்கும் தொழிலாளர்கள் மீது அக்கறை கொண்டுள்ளதால், மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகளுடன் கூடிய சிறந்த குடியிருப்புகளை வழங்குகிறது. ஆண்டின் போது நாங்கள் 01 பதவியணி குடியிருப்பு மற்றும் 05 காவலாளி அறையை மொத்தம் ரூபா 15.9 மில்லியன் தொகையில் நிர்மாணித்துள்ளதுடன் மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுடன், ஒரு சில குடியிருப்பு விடுதிகளை புதுப்பித்துள்ளோம்.

**ஊழியஉ பயிற்சி மற்றும் அபிவிருத்தி**

KPL பதவியணியினரிற்குத் தேவையான திறன்கள், அறிவு மற்றும் மனப்பான்மையை அவர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் அவாகளின் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் தொடர்ந்து முதலீடு செய்கிறது. ஊழியர்களின் தொடர்ச்சியான கற்றல் மற்றும் தனிப்பட்ட அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன் உள் மற்றும் வெளியில் பலதரப்பட்ட பயிற்சி திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில், மேலும், கம்பனி ஊழியர்களுக்கான பல டிப்ளமோ, பட்டப்படிப்பு மற்றும் முதுகாலைப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆதரிக்கிறது. களப் பணியாளர்களுக்கு, விவசாயத் துறையில் வல்லுனர்களால் நடாத்தப்படும் சிறப்புப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுவதுடன், வேலைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**ஊழியர்களுடனான வாழ்நாள் உறவுகளை கட்டியெழுப்புதல்**

கம்பனி வாழ்நாள் முழுவதும் உறவுகளை கட்டியெழுப்புவதற்கு பல்வேறு ஊழியர் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தது

- தொடர்ந்து 13 வது ஆண்டிற்காக வருடாந்த அனைத்து இரவு பிரித் ஓதுதல் நடாத்தப்பட்டது
- வருடாந்த பொசன் விழாவை முன்னிட்டு ‘கிரிபத் தன்சல’ குருநாகலில் உள்ள தலைமை அலுவலக வளாகத்தில் தொடர்ந்து 11 வது ஆண்டிற்காக நடைபெற்றது.
- ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினருக்காக வருடாந்த ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்பட்டது
- தோட்டங்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி நடாத்தப்பட்டது
- மனித வள முகாமைத்துவ மூலோபாயமாக பதவியணியினரிற்கான வருடாந்த உல்லாசப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஊழியர்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாக இருந்தது, மேலும் இது கம்பனியின் மீது ஊழியர்களின் அதிக விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்புடன் அதிக உற்பத்தித் திறனை ஏற்படுத்தியது.

**KPL மற்றும் சமூகம்**

கம்பனியின் நிலத்தை தங்கள் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு பயன்படுத்த விரும்பும் அண்டை விவசாயிகளுக்கு KPL தொடர்ந்து உதவி வருகிறது. இதையொட்டி, கால்நடைகளின் சாணம் வடிவில் கரிம உரத்தைப் பெறுதல் மற்றும் மேய்ச்சல் மூலம் களைகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற நலன்களை KPL இற்கு வழங்கியது. இந்த ஏற்பாடு தேசிய பால் உற்பத்தியை அதிகரிக்கவும், கால்நடைகளின் எண்ணிக்கையை பெருமளவில் அதிகரிக்கவும் உதவுகிறது. எமது தோட்டங்களில் பணப்பயிர்கள் மற்றும் அரை நிலைத்திருக்கும் பயிர்களை பயிரிடுவதற்கு அண்டை கிராமவாசிகளுக்கு கம்பனி வசதி செய்துள்ளது, மேலும் இது அவர்களுக்கு பெரும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த ஒத்துழைப்பு அவர்களின் குடும்ப வருமானம் மற்றும் தேசிய விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் அதே வேளையில், தோட்டங்களின் மண் கட்டமைப்பில் சிறந்த உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலைக்கு பங்களிக்கிறது. பாரம்பரிய விவசாய அறிவும் அனுபவமும் கொண்ட திறமையான தொழிலாளர்களை அடையாளம் கண்டு உள்வாங்கவும் இந்த ஏற்பாடு நமக்கு உதவுகிறது. KPL ஆனது கண்டி ஸ்ரீ தலதா பெரஹெரா மற்றும் உள்ளூர் கோவில்கள் மற்றும் தேவாலயங்களின் பெரஹெரா போன்ற கலாச்சார நிகழ்வுகளுக்கு கொப்பரை வழங்குவதையும் மேற்கொள்கிறது. மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பள்ளிகளின் நிர்மாணம்.·.புனரமைப்புக்கான மரத்திற்கான கோரிக்கைகளையும் கம்பனி சாதகமாக பரிசீலிக்கிறது. நாங்கள் நிலைநிறுத்தும் மதிப்புகள் எங்களின் அனைத்து வணிக நடவடிக்கைகளுடனும் எமது செயற்பாடுகளில் உட்பொதிக்கப்பட்டுள்ளதுடன் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. KPL ஒரு பெருந்தோட்ட கம்பனியாக இருப்பதால், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாத்தல் மற்றும் ஊழியர்கள் மற்றும் நமது தேசத்தின் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் அதே வேளையில் பொருளாதார ரீதியாக சாத்தியமான விவசாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது.

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி இடர் முகாமைத்துவத்தை நல்ல ஒட்டுமொத்த முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தின் ஒருங்கிணைந்த அங்கமாக இனங்கண்டுள்ளது. எனவே, பெருந்தோட்டத் துறைக்குக் குறிப்பிட்ட சில பொதுவான இடர் மற்றும் மேலதிக இடர்களைக் கண்டறியும் முயற்சியை அது மேற்கொண்டுள்ளது. குறிப்பிட்ட இடர்கள் முக்கியமாக கம்பனி செயற்படுகின்ற இறப்பர், தென்னை மற்றும் ஏனைய ஊடுபயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் செயன்முறை மற்றும் நிதிச் சூழல் ஆகியவற்றுடன் தொடர்புடையவையாகும். எனவே, சிறந்த நிதி மற்றும் செயற்பாட்டுக் கட்டுப்பாட்டு முறைமைகள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து வணிக இடர்களை முகாமை செய்வதில் பணிப்பாளர் சபை சிறப்பு கவனம் செலுத்துகிறது. அவ்வப்போது உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் முகாமைத்துவக் குழு நடைமுறையில் உள்ள இடர்களை நிவர்த்தி செய்வதில் முறைமைகளின் செயற்திறனை மதிப்பாய்வு செய்கிறது, மேலும் இது இடர்களின் தீங்குகளை அகற்றும் திறன் மற்றும் பங்குதாரர்களின் முதலீடுகள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு இடர்களின் தலைகீழ் பயன்பாட்டைப் பயன்படுத்துகிறது.

**இடஉ கலாச்சாரம்**

பணிப்பாளர் சபை அதனது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதுடன் அத்தகைய முறைமையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு விரிவான இடர் முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கு நன்கு வரையறுக்கப்பட்ட சீரான அணுகுமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டது. முகாமைத்துவமானது நெறிமுறைக் கொள்கைகளுக்கான அதன் கடப்பாட்டை பிரதிபலிப்பதன் மூலம் பொதுவாக முடிவுகளை எடுக்கும்போது பொதுவான பங்குதாரரின் நிலையைக் கருத்தில் கொள்கிறது. தலைமைத்துவத்தின் கொள்கைகளுடன் முழுமையாக உடன்பட்டு, பதவியணியினரிற்கும் இந்த நெறிமுறைக் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, அதே பாதையில் தொடர்ந்து பயணித்து வருகின்றனர்.

**இடரை இனங்காணுதல்**

கம்பனியின் உயர்மட்ட முகாமைத்துவம் ஊழியர்களிடையே போதுமான இடர் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நிறுவனத்திற்குள் ஆபத்து கலாச்சாரத்தை உருவாக்க கடமைப்பட்டுள்ளது. உள்ளக இடர்களை கண்டறிவதற்கான கம்பனியின் முயற்சிகள் கீழ்நிலை அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன, அங்கு செயற்பாட்டு நிலை ஊழியர்கள் கூட அந்தந்த தொழில் சார்ந்த பகுதிகளில் ஏற்படும் இடர்களைக் கண்டறிவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். வெளிப்புற இடர்களைக் கண்டறியும் அதே நேரம் உயர்மட்ட முகாமைத்துவம் வெளிப்புற அபிவிருத்திகளையும் அறிந்திருக்கிறது. ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டைப் பயன்படுத்தும் நோக்கத்திற்காக இந்த இனங்காணப்பட்ட இடர்களை கம்பனி மேலும் வகைப்படுத்துகிறது, அவற்றில் சில ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பொதுவானவை, சில பெருந்தோட்டத் துறைக்கு குறிப்பிட்டத்துரைக்கப்பட்டவையாகும்,

**செயற்பாட்டு அபாயங்கள்**

எமது முதன்மைப் பயிராக இருக்கும் தென்னை கம்பனிக்கு முக்கிய வருமானத்தை ஈட்டித் தருகிறது. உற்பத்தி செய்யப்படும் தேங்காயில் 70மூ இற்கும் அதிகமானவை சமையல் நோக்கங்களுக்காக உள்நாட்டில் நுகரப்படுகிறது, தொழில்துறை பயன்பாட்டிற்கானது 30மூ இற்கும் குறைவாக உள்ளது. இது சந்தையில் உறுதியற்ற தன்மையை உருவாக்கியுள்ளது, இதனால் அதிக பயிர் உற்பத்தி காணப்படுகின்ற போதிலும் வருடாந்த புரள்வு ஏமாற்றமளிக்கும் வகையில் குறைவாக உள்ளது. எனினும், வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட ஏலத்தில் அதன் உயர்தர தேங்காய் உற்பத்தியின் காரணமாக குறைந்த பட்ச அறுவடை நிராகரிப்பு வீதத்துடன் கூடிய தேசிய விற்பனைச் சராசரியைப் பெற முடிந்ததுடன் இதையொட்டி கொள்வனவாளர்களின் நம்பிக்கைத்தன்மையை பெற்றுள்ளது சந்தையில் அதிக போட்டியை உருவாக்குவதன் மூலம் வலுவான உள்ளூர் கொள்வனவாளர் தளத்தை நிறுவுவதற்கு கம்பனி மேலும் முயற்சி செய்தது, இது அதிக பயிர் விளைச்சல் காலங்களில் வெளியீட்டை விநியோகிப்பதில் நன்மை பயக்கும் என்பதையும் நிரூபித்துள்ளது. கொள்வனவாளர் சேகரிப்பு நிலையங்களை எளிதாக அணுகுதல், தென்னை மட்டையாளர்களுக்கு குடியிருப்பு வசதிகளை வழங்குதல், பாதகமான சூழ்நிலைகளின் போது விளைபொருட்களை களஞ்சியப்படுத்தும் இடங்களிற்கு போக்குவரத்து செய்தல் மற்றும் ஏற்றுதல் நேரங்களை அமைப்பதில் நெகிழ்வுத்தன்மை காரணமாக அவர்கள் மத்தியில் வாடிக்கையாளர் நட்பு வழங்குநராக KPL அதிக அங்கீகாரத்தைப் பெற்றது. வருடத்தின் போது, தீவிர வானிலை நிலைமைகள் நீடித்த வறட்சி அல்லது வெள்ளம் தொடர்பான சூழ்நிலைகளை ஏற்படுத்தியது, இது தென்னை உட்பட அனைத்து விவசாய பயிர்களிலும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. கடுமையான காலநிலை நிகழ்வுகள் அறுவடை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய விவசாய நடைமுறைகளை சீர்குலைத்தன. பாதகமான காலநிலைக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கையாக, கம்பனியானது, தழைக்கூளம் இடுதல், உமி புதைத்தல், மூடு பயிர்களைப் பயன்படுத்துதல், மண் பிரிப்பு, சமதள வடிகாணை அமைத்தல், கரிம உரங்களைப் பயன்படுத்தி

மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல் மற்றும் மண்ணைப் பாதுகாத்தல் போன்ற பல விவசாய நடைமுறைகளைக் கடைப்பிடித்துள்ளது. இந்த நடைமுறைகள் நம்பிக்கைக்குரிய முடிவுகளைத் தந்துள்ளதால், இறப்பர் பெருந்தோட்டங்களைப் பாதுகாப்பதிலும், காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களிலிருந்தும் இதேபோன்ற நடைமுறைகளை கம்பனி பின்பற்றியுள்ளது. தீவிர வானிலை காரணமாக உற்பத்தி இழப்பைக் குறைப்பதற்கு இறப்பர் மரங்களுக்கு RRI பரிந்துரைக்கப்பட்ட குளோன்கள் மற்றும் மழை பாதுகாப்பான் ஆகியன இதில் அடங்கும்.

**பூச்சிகள் மற்றும் நோய்கள்**

தென்னைப் பூச்சிகளான "Aceria guerreronis", "Plessispa" மற்றும் "Weligama Wilt" ஆகியன தற்போது பெருந்தோட்டங்களில் காணப்படும் பூச்சிகள் மற்றும் நோய்களின் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் அவை உயர்தர தென்னை மரங்களுக்கு பெரும் சேதத்தையும் அழிவையும் ஏற்படுத்தியுள்ளன. தென்னைப் பூச்சித் தொல்லையானது சூழலுக்கு உகந்த வேட்டையாடும் பூச்சியை அறிமுகப்படுத்தி, உயிரியல் வழிமுறைகள் மூலம் வெற்றிகரமாக எதிர்கொள்ளப்பட்டிருந்தது. தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ், எமது சொந்த தோட்டங்களிலும், பக்கத்து தென்னந்தோப்புகளிலும் பயன்படுத்துவதற்காக கம்பனி ஆய்வுகூடத்தில் வேட்டையாடும் பூச்சியை நியாயமான விலையில் விற்பனை செய்வதன் மூலம் KPL வளர்க்கிறது. அனுபவம் வாய்ந்த களப்பணியாளர்களால் பாதிக்கப்பட்ட மரங்களை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் எங்கள் தோட்டங்களில் உள்ள அனைத்து பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தவும் அழிக்கவும் முடிந்தது. கம்பனி தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து களப்பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களை வழக்கமான பயிற்சிக்கு அனுப்புவதன் மூலம் அவர்களின் அறிவை தொடர்ந்து மேம்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.

**பயிர் பாதுகாப்பு**

அதிக தேவை உள்ள தேங்காய் ஒரு சமையல் பொருளாக இருப்பதால் திருட்டு அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பல பிரதேச செயலகங்களில் பரந்து காணப்படும் தனிமைப்படுத்தப்பட்ட சிறிய ஏக்கர் நிலப்பரப்பின் காரணமாக தென்னைகளைப் பாதுகாப்பது தொடர்ச்சியாகப் பிரச்சினையாக இருந்து வருகின்றது. எனவே, திருட்டைக் குறைப்பதற்கு தோப்புகளுக்கு உயர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அசாதாரண நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. திருட்டைக் குறைக்கும் நடவடிக்கையாக, இரண்டு மாதத்திற்கு ஒருமுறை பறிக்கும் வழக்கமான நடைமுறைக்கு எதிராக, உதிர்ந்த காய்களைக் குறைத்து, மாதாந்த அறுவடை அளவை 90% வரை கம்பனி விரிவுபடுத்தியது. சுற்றளவு வேலிகளை வலுப்படுத்துவதன் மூலம் இந்த முறை மேலும் ஆதரிக்கப்படுகிறது. மேலும், அத்தியட்சகர்கள், உதவி அத்தியட்சகர்கள், களப் பணியாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நெருக்கமான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை திருட்டைக் குறைப்பதில் பயனுள்ளதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. உதிர்ந்த தேங்காய்களைச் சேகரித்து, தேங்காய்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் காவலாளிகளும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மூலம் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இயற்கைப் பேரழிவுகள், தீ, திருட்டு மற்றும் விபத்துகளால் ஏற்படும் இடர்களை எதிர்கொள்ளவும், போக்குவரத்தில் உள்ள பயிர்களுக்கு கம்பனி காப்புறுதி செய்துள்ளது.

**தொழிலாளர் பற்றாக்குறை**

அறுவடை, உமி மற்றும் வடித்தல் ஆகியவற்றிற்கான திறமையான வேலைப்படை தொழிலில் இன்றியமையாத தேவையாகும். எனினும், கடந்த சில ஆண்டுகளாக, திறமையான தென்னந்தோப்புத் தொழிலாளர்களின் பற்றாக்குறை, கம்பனியின் முகாமைத்துவம் எதிர்கொள்ளும் ஒரு பிரச்சனையாக இருந்தது. இதனால் தென்னந்தோப்புகளில் அன்றாடம் மேற்கொள்ளப்படும் முகாமைத்துவ பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களைப் போல் தென்னந்தோட்டங்கள் குடியிருக்கும் வேலைப்படையை தக்கவைக்காததால், கம்பனி அண்டை கிராமங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை சார்ந்திருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. எனவே, உடலுழைப்புத் தொழிலாளர்களை நம்பியிருப்பதைக் குறைப்பதற்கும், தோட்டங்களைத் திறமையாகப் பராமரிப்பதற்கும், மாற்றுத் தீர்வாக, நியாயமான இரசாயன களையெடுப்பு உட்பட, களையெடுப்பதற்கும், வடித்தலிற்கும் மற்றும் உரமிடுவதற்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதை கம்பனி ஏற்றுக்கொண்டது. நமது தொழிலாளர் படையிலிருந்து உகந்த உற்பத்தியை நாங்கள் எப்போதும் கவனத்தில் வைத்திருக்கும் அதே வேளையில், பொருத்தமான இயந்திரமயமாக்கல் மூலம் மிக அதிக பெறுபேற்றைப் பெற்றுள்ளோம். இலவச குடியிருப்பு வசதிகள் மற்றும் மின்சாரம், தண்ணீர் மற்றும் தேங்காய் ஆகியவற்றை சலுகை விலையில் வழங்குவதன் மூலம் ஊழியர்களை தக்கவைத்துக்கொள்ளவும் கம்பனி நடவடிக்கை எடுத்தது. மேலும் செயலாற்றல் அடிப்படையில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் மிகையூதியக் கொடுப்பனவு, குழந்தைகளின் கல்விக்கான புலமைப்பரிசில், அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பல்வேறு கடன் திட்டங்கள், பதவியணியினரிற்கான இடர் கடன்கள், நியதிச்சட்ட நிலுவைகளை சரியான நேரத்தில் செலுத்துதல், தொழில்முறை பயிற்சி வழங்குதல் மற்றும் நட்பு மற்றும் அக்கறையுள்ள பணிச்சூழலை அமைத்தல் போன்ற ஏனைய நலன்கள் வழங்கப்படுகின்றன.

**நிலம் கையகப்படுத்தும் இடர்**

தேசியத் தேவைகள், பொது நோக்கங்களுக்காகவும் நியதிச்சட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் உற்பத்தி நிலத்தை கையகப்படுத்தும் இடர் பாதிப்பிற்கு கம்பனி மிகவும் உள்ளாகிறது. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்ட

கம்பனியை ஸ்தாபிப்பதற்காக முதலில் 1992 இல் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 26% ஐ இழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தொழிற்சங்கங்கள், சமூக மற்றும் சுற்றுச்சூழல் மாற்றங்கள்**

தொழில் நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்ட பின்னர், வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி தொழிற்சங்கங்கள் மற்றும் இலங்கை தொழில்தருநர் சம்மேளனத்துடன் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது, இதில் KPL உறுப்பினராக உள்ளது. இது சரியான நேரத்தில் ஊதியம், நியதிச்சட்ட நிலுவைகளை கொடுப்பனவு செய்தல், தொழிலாளர்களின் இழப்பீட்டுக் காப்புறுதி மற்றும் தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பான பகுதிகளில் உடனடி கவனம் செலுத்துதலை விளைவித்துள்ளது. இந்த நடவடிக்கைகள் கம்பனியில் தொழில்துறை நல்லிணக்கத்தை வலுப்படுத்தியுள்ளன.

**இடர் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு**

கம்பனியின் இடர் முகாமைத்துவக் கூறுகளின் இருப்பு மற்றும் செயற்பாடு காலப்போக்கில் கட்டுப்பாடுகளில் உள்ள பலவீனங்களைக் கண்டறியும் நோக்கத்துடன் மதிப்பிடப்படுகிறது, இதனால் தேவையான உள்ளக மற்றும் வெளிப்புற மாற்றங்களைச் செய்ய முடியும். உயர் முகாமைத்துவமும் கணக்காய்வுக் குழுவும் தனித்தனி மதிப்பீடுகள் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கான இறுதிப் பொறுப்பைக் கொண்டிருக்கும் போது எமது உள்ளகக் கணக்காய்வுக் குழு ஒவ்வொரு தோட்டத்திற்கும் சென்று உடனடி பதில் தேவைப்படும் விடயங்களில் இடர்கள் குறித்து அறிக்கை செய்வதன் மூலம் அடிக்கடி முறைமை அடிப்படையிலான கணக்காய்வுகளை மேற்கொள்கிறது. இடர் முகாமைத்துவ செயன்முறையின் செயற்திறன் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது, மேலும் நடைமுறையில் உள்ள செயன்முறைக்கு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இந்த கட்டத்தில், கம்பனிக்குள் இடர் முகாமைத்துவத்திற்கு பொறுப்பான நபர்களுக்கு உதவுவதற்கும் வழிகாட்டுவதற்கும் பொருத்தமான சிக்கல்கள் இனங்காணப்பட்டு தெரிவிக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபை நேர்மை, கூட்டாண்மை பாரபட்சமற்ற தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் கணக்களிப்பொறுப்புக்கூறல் ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது. இவைதான் அதன் அனைத்து பங்குதாரர்களுடனும் வலுவான உறவை உருவாக்குவதற்கும், கம்பனி செயற்படும் சூழலை வளர்ப்பதற்கும் அடித்தளமாக அமைகின்றன. கம்பனியின் செயற்பாடுகள் நெறிமுறை நியமங்களுக்கு ஏற்பவும் அதன் அனைத்து பங்குதாரர்களின் சிறந்த நலன்களுக்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன. வணிகத்தின் ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல் வணிக பெறுமதியை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளில் பொதிந்துள்ள சரியான வகிபங்குகள், கட்டமைப்புக்கள் மற்றும் தகவல்களுடன் இந்த அர்ப்பணிப்பு ஆதரிக்கப்படுகிறது.

**பணிப்பாளஉ சபை**

பணிப்பாளர் சபை இறுதியில் கணக்களிப்பொறுப்புக்கூறலுடன் கம்பனியின் செயலாற்றலிற்கு பொறுப்பாகும். மேலும் கூட்டிணைந்த ஆளுகை செயன்முறையின் மையமாக அமைகிறது.

**பொறுப்பு**

சபை முக்கிய கொள்கைகள் மற்றும் மூலோபாய நோக்கங்களை அமைக்கிறதுடன் அவற்றை செயற்படுத்துவதை உறுதிப்படுத்துகிறது. நிதித் தகவலின் ஒருமைப்பாடு மற்றும் கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்திறன் ஆகியவற்றிற்கான இறுதிப் பொறுப்பையும் சபை ஏற்கிறது.

**தொகுப்பு**

சபை தலைவர் உட்பட ஏழு (07) பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.

**சபைக் கூட்டங்கள்**

சபைக் கூட்டங்கள் மாதாந்த அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த கூட்டங்களில் சபை கம்பனியின் மூலோபாய வழிகாட்டலை அமைக்கிறது, வருடாந்த பாதீடு, அனைத்து நடவடிக்கைகளினதும் முன்னேற்றம் மற்றும் மீண்டெழும் மற்றும் மூலதன செலவின நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பாய்வு செய்கிறது. ஒவ்வொரு கூட்டத்திற்கும் முன்னதாக சபை உறுப்பினர்களுக்கு தகுந்த ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் பதின்மூன்று (12) சபைக் கூட்டங்கள் பின்வருமாறு நடைபெற்றன:

| சபைக் கூட்ட இலக்கம் | திகதி |
|---|---|
| 394 | 2023 ஜனவரி 26 |
| 395 | 2023 பெப்ரவரி 27 |
| 396 | 2023 மார்ச் 28 |
| 397 | 2023 ஏப்பிரல் 27 |
| 398 | 2023 மே 26 |
| 399 | 2023 ஜூன் 28 |
| 400 | 2023 ஜூலை 24 |
| 401 | 2023 ஓகஸ்ட் 14 |
| 402 | 2023 செப்தம்பர் 15 |
| 403 | 2023 ஒக்டோபர் 30 |
| 404 | 2023 நவம்பர் 30 |
| 405 | 2023 திசெம்பர் 15 |

கூட்டிணைந்த ஆளுகை

**தற்போதைய பணிப்பாளஉ சபை**

| பெயஉ | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| திருமதி கே.ஜீ.ஜீ.எவ். ஜெனட் ஜயவர்தன | தலைவர் | 06/10/2022 |
| திருமதி அமிதா தொடன்வல | பணிப்பாளர் | 01/03/2024 |
| திரு.டபிள்யூ.எம்.டி.விஜேபண்டார | பணிப்பாளர் – திறைசேரி பிரதிநிதி | 02/03/2022 |
| திரு. டபிள்யூ.ஏ.ஜே.ஜீ.டீ. விஜேசிங்ஹ | பணிப்பாளர் | 15/01/2020 |
| திரு. கோசல ரங்கல | பணிப்பாளர் | 21/09/2023 |
| திரு. ரீ.டீ.எம்.பீ. பண்டார | பணிப்பாளர் | 01/03/2024 |
| திரு. டீ.சீ.ஜே. பிரேமதிலக்க | பணிப்பாளர் | 01/03/2024 |

**2023 ஆம் ஆண்டில் இந்தக் கூட்டங்களில் பணிப்பாளஉ சபையின் வருகை பின்வருமாறு உள்ளது.**

| | 26.01.2023 (394) | 27.02.2023 (395) | 28.03.2023 (396) | 27.04.2023 (397) | 26.05.2023 (398) | 28.06.2023 (399) | 24.07.2023 (400) | 14.08.2023 (401) | 15.09.2023 (402) | 30.10.2023 (403) | 30..11.2023 (404) | 15.12.2023 (405) | வருகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **திருமதி கே.ஜீ.ஜீ.எவ். ஜெனட் ஜயவர்தன** (தலைவர் 05.10.2022 இல் நியமனம்) | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 12/12 |
| **திருமதி. அருணி எஸ் ரனசிங்ஹ** (24.04.2023 ஆந் திகதி நியமிக்கப்பட்டு, 09.04.2024 ஆந் திகதி பதவி விலகினார்) | N/A | N/A | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 10/10 |
| **திரு.டபிள்யூ.எம்.டி. விஜேபண்டார** (02.03.2022 ஆந் திகதி நியமிக்கப்பட்டார்) | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 12/12 |
| **திரு. டபிள்யூ.ஏ.ஜே.ஜீ.டீ. விஜேசிங்ஹ** (15.01.2020 ஆந் திகதி நியமிக்கப்பட்டார்) | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 12/12 |
| **திரு. எச்.சீ.எம்.எம். குலசேகர** (05.02.2020 ஆந் திகதி நியமிக்கப்பட்டு, 01.03.2024 ஆம் திகதி பதவி விலகினார்) | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 12/12 |
| **திரு. ரீ.எதிரிவிக்கிரமசூரிய** (16.08.2021 ஆந் திகதி நியமிக்கப்பட்டு, 01.03.2024 ஆந் திகதி பதவி விலகினார்) | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | 12/12 |
| **திரு. கோசல ரங்கல** (21.09.2023 ஆந் திகதி நியமிக்கப்பட்டார்) | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | N/A | √ | 1/1 |

**சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்குதல்**

கம்பனியின் விஞ்ஞாபனம் மற்றும் அமைப்பு அகவிதி மற்றும் நாட்டில் உள்ள அரச உடமையாக்கப்பட்ட வணிக நிறுவனங்களுக்கு பொருந்தக்கூடிய ஏனைய விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் கம்பனி இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை ஒவ்வொரு முயற்சியையும் செய்கிறது. கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்படுவதையும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதையும் சபை உறுதிப்படுத்துகிறது.

கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதுடன் குழுவில் மூன்று நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்கள் உள்ளனர். பொது திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் சபை உறுப்பினர் தலைமையில் கணக்காய்வுக் குழு கூட்டங்கள் தேவைக்கேற்ப திட்டமிடப்பட்டுள்ளன. தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் மற்றொரு நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர் ஆகியோர் கணக்காய்வுக் குழு கூட்டங்களில் தவறாமல் பங்கேற்கின்றனர். மேலும், சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் மற்றும் முகாமையாளர்கள், பகுதி அத்தியட்சகர்கள் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதி அவ்வப்போது கூட்டங்களில் அழைப்பின் பேரில் பங்கேற்கின்றனர். மேலும் கூட்டங்கள் கம்பனியின் முகாமையாளர் – கணக்காய்வால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் 04 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன் மேற்கூறிய கூட்டங்களுக்கான வருகைகள் கீழே உள்ள அட்டவணைகளின் பிரகாரம் உள்ளன:

**தற்போதைய கணக்காய்வுக் குழு ஆண்டு – 2023/2024**

| பெயஉ | கணக்காய்வுக் குழுவிற்கு நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|
| திரு. டபிள்யூ.எம்.டி.விஜேபண்டார<br>தலைவர் கணக்காய்வுக் குழு<br>பணிப்பாளர் - திறைசேரி பிரதிநிதி. | 31.03.2022 |
| திருமதி அமிதா தொடன்வெல – பணிப்பாளர்<br>(அரச பெருந்தோட்ட கைத்தொழில் மறுசீரமைப்பு<br>இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர்) | 25.04.2024 |
| திரு. கே.ஜீ.என். ரங்கல – பணிப்பாளர் | 25.03.2024 |

**கணக்காய்வுக் குழு கூட்டங்கள் – 2023 ஆம் ஆண்டு**

| பெயஉ | 10/02/2023 | 29/05/2023 | 25/10/2023 | 15/12/2023 | வருகை |
|---|---|---|---|---|---|
| திரு. டபிள்யூ.எம்.டி.விஜேபண்டார<br>தலைவர் கணக்காய்வுக் குழு<br>பணிப்பாளர் - திறைசேரி பிரதிநிதி | √ | √ | √ | √ | 4/4 |
| திருமதி. அருணி ரணசிங்ஹ - பணிப்பாளர் | இல்லை | √ | √ | √ | 3/3 |
| திரு. எச்.சீ.எம்.எம். குலசேகர – பணிப்பாளர் | √ | √ | √ | √ | 4/4 |

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு இணங்க, கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதி அறிக்கையிடல் செயன்முறைகளின் சிறந்த தரம் மற்றும் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கு முகாமைத்துவத்தின் கடமைகளைச் செயற்படுத்தி மேற்பார்வையிடுதல் கணக்காய்வுக் குழுவின் முக்கிய வகிபங்கு மற்றும் பொறுப்பாகும். மேலும், கம்பனியில் உள்ள உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் குறைப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக இருப்பதையும், பொது திறைசேரியால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் உட்பட சட்ட மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குவதையும் கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்த வேண்டும்.

**நிதியாண்டில் முன்னேற்றம்**

முகாமைத்துவக் கணக்காய்வுக் குழுவால் கணக்காய்வுக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட விடயங்கள் விரிவாகப் கலந்துரையாடப்பட்டு, மீளாய்வு காலப்பகுதியில் நடைபெற்ற கூட்டங்களில் பொருத்தமான தீர்வுகள் பரிந்துரைக்கப்பட்டன. கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள், அங்கீகாரம் மற்றும் அமல்படுத்தலிற்காக கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு தொடர்ந்து அறிவிக்கப்பட்டன. கணக்காய்வுக் குழு, கணக்காய்வின் நோக்கெல்லை, அதன் புறநிலை மற்றும் செயற்திறன் ஆகியவற்றை அவ்வப்போது கணக்காய்வு செய்யக்கூடிய சிக்கல்கள் நீக்கப்படும் போது தொடர்ந்து மதிப்பாய்வு செய்து கண்காணித்தது. எதிர்கால எதிர்பார்ப்புடன் கம்பனியின் செயற்பாடுகளையும் குழு மதிப்பாய்வு செய்தது. எழுப்பப்பட்ட சிக்கல்களுக்கு பதிலளிக்கும் வகையில் முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளின் செயற்திறன் ஆகியவை பிரிவுகளின் தலைவர்கள் / கண்காணிப்பாளர்களுடன் கலந்தாலோசித்து மதிப்பீடு செய்யப்பட்டு, கூட்டங்களின் போது தேவையான திருத்த நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டன.

2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்கான முகாமைத்துவத்தின் பதில்கள், முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வாளர்களுடன் கலந்தாலோசித்து, மேலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு கணக்காய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கான உடனடி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஏற்கனவே கண்டறியப்பட்ட தென்னந்தோப்புகளில் உள்ள உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள் மற்றும் முறைகேடுகள் குறித்து பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் அத்தியட்சர்களுடன் கலந்துரையாடப்பட்டு, அதிக கவனம் தேவைப்பட்ட முக்கியமான பகுதிகள் எடுத்துரைக்கப்பட்டு கம்பனியின் பணிப்பாளர் சபையின் கவனத்திற்காக இது தொடர்பாக சாத்தியமான பரிந்துரைகள் சமர்பிக்கப்பட்டது.

கணக்காய்வுக் குழு, உள்ளக கணக்காய்வுப் பிரிவால் வழங்கப்பட்ட சேவைகள் மற்றும் கம்பனியின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கான அவர்களின் முயற்சிகளை நன்றியுடன் பாராட்ட விரும்புகிறது. கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அழைக்கப்பட்டவர்கள்/பார்வையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட மதிப்புமிக்க பங்களிப்பை நன்றியுடன் பாராட்டுவதுடன், அவர்களின் திறமையும் நிதி விடயங்களில் தொடர்புடைய அனுபவமும் கம்பனியின் தொடர்ச்சியான வெற்றிக்கு மிகவும் உதவியாக இருந்தது.



**திரு.டபிள்யூ.எம்.டி. விஜேபண்டார**
தலைவர், கணக்காய்வுக் குழு

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர்கள் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து அவர்களின் ஆண்டறிக்கையை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர்.

**கம்பனியின் சட்ட அந்தஸ்து**

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியானது (KPL) 1987 இன் 23 ஆம் இலக்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச உடைமையாக்கப்பட்ட வணிக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது. இது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் புதிய பதிவு இலக்கம் – PB 1319 உடன் மீளப் பதிவுசெய்யப்பட்டது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 80, தம்புள்ள வீதி, குருநாகல் எனும் முகவரியில் அமைந்துள்ளது. கம்பனி தனியான பங்குதாரர் கம்பனியொன்றாக உள்ளது, இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியின் செயலாளர் அதன் பங்குதாரராக உள்ளார்.

**முக்கிய செயற்பாடுகள் மற்றும் வணிகத்தின் தன்மை**

தெங்கு, இறப்பர், ஏனைய பயிர்கள் மற்றும் ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை உள்ளடக்கிய கம்பனியின் பிரதான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் 2023 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டன. கம்பனியின் நிலங்கள் குருநாகல், கம்பஹா மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அத்தனகல்ல, தம்பதெனிய, தொடங்கஸ்லந்த, ஹிரியால, குருநாகல், கட்டுகம்பொல மற்றும் நாரம்மல ஆகிய 07 பிரதேச தோட்டங்களை உருவாக்கி பரந்துள்ளன.

**வைத்திருக்கும் நிலங்களின் அளவு**

தேசிய தேவைப்பாடுகள் மற்றும் சட்டப்பூர்வ பிரகடனங்களுக்காக நிலங்களை விடுவிப்பதால் KPL பெருமளவு உற்பத்தி நிலங்களை இழந்துள்ளது. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி 1992 இல் கம்பனிக்கு முதலில் கையளிக்கப்பட்ட (6,722 ஹெக்டெயர்) நிலத்தில் 26% (1,750.88 ஹெக்டெயர்) நிலத்தை கம்பனியின் ஸ்தாபிப்பிற்காக இழந்துள்ளது. 2022 ஆம் நிதியாண்டின் இறுதியில் கைவசம் உள்ள மொத்த நிலத்தின் அளவு 4,971.12 ஹெக்டெயர் ஆகும்.

**பிரதேச தோட்டங்களின் நிலப்பரப்பு**

| | பரப்பளவு (ஹெக்டெயஉ) |
|---|---|
| அத்தனகல்ல | 1,114.53 |
| தம்பதெனிய | 462.18 |
| தொடங்கஸ்லந்த | 690.73 |
| ஹிரியால | 980.21 |
| கட்டுகம்பொல | 617.12 |
| குருநாகல் | 555.80 |
| நாரம்மல | 550.55 |
| | 4,971.12 |

**உற்பத்திப்பொருள் போஉட்போலியோ**

அத்தனகல்ல மற்றும் தொடங்கஸ்லந்த பிரதேசங்களில் இறப்பர் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அதேவேளை 07 பிரதேச தோட்டங்களிலும் தென்னை பிரதான பயிராக உள்ளது. மீடு நிலம் மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு தென்னையின் கீழ் ஊடுபயிராக பயிரிடப்படும் ஏனைய பயிர்களின் வரம்பையும் பேணுகின்றது.

**தொடஉந்தியங்கும் தன்மை**

கம்பனி எதிர்காலத்தில் அதன் செயற்பாட்டைத் தொடர்வதற்கு போதுமான வளமூலங்களை கொண்டிருக்கிறதென பணிப்பாளர் சபை திருப்தி அடைந்துள்ளது. எனவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.

**நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் அறிக்கை**

2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள், பணிப்பாளர்களால் கையொப்பமிடப்பட்டு அதே காலப்பகுதிக்கான கணக்காய்வாளர் அறிக்கையின் 35 முதல் 37 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த அறிக்கையின் 44 முதல் 57 வரையான பக்கங்களில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. முன்னைய ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றமின்றி பயன்படுத்தப்படுகின்றன.

**வருமானம்**

கம்பனியின் வருமானம் கடந்த ஆண்டை விட 5% அதிகமாக உள்ளது. வருமானத்தின் தொகுப்பு பின்வருமாறுள்ளது

| | 2023<br>ரூபா. மில்லியன் | 2022<br>ரூபா. மில்லியன் | அதிகரிப்பு/ (குறைவு)<br>% |
|---|---|---|---|
| தெங்கு | 812 | 875 | (7) |
| இறப்பர் | 43 | 54 | (21) |
| ஏனைய வள மூலங்கள் | 156 | 135 | (15) |
| மொத்தம் | 1,011 | 1,065 | (5) |

**வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்கு பின்னரான இலாபம்**

20223ஆம் ஆண்டிற்கான கம்பனியின் மொத்த வருமானம் ரூபா 1,011 மில்லியன் (2022 - ரூபா 1,065 மில்லியன்) ஆகும். ஆண்டிற்கான ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 86 மில்லியன் (2022 - ரூபா 65 மில்லியன்) ஆகும். 2023 ஆம் ஆண்டு கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 534.4 மில்லியன் (2022 - ரூபா 511.5 மில்லியன்) ஆகும். கம்பனியின் நிதி முடிவுகள் விரிவான வருமான கூற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

| | 2023<br>ரூபா. மில்லியன் | 2022<br>ரூபா. மில்லியன் |
|---|---|---|
| தெங்கிலிருந்தான இலாபம் | 375 | 421 |
| இறப்பரிலிருந்தான இலாபம் / (நட்டம்) | (0.1) | 14 |
| ஏனைய வளமூலங்களிலிருந்தான இலாபம் | 72 | 80 |
| **மொத்த இலாபாம்** | **447** | **515** |
| உயிரியல் சொத்துக்களின் நியாயமான பெறுமதி மீதான ஈட்டம் | 62 | 35 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 86 | 65 |
| நிர்வாக செலவினங்கள் | (226) | (223) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் | 369 | 393 |
| நிதி வருமானம் | 212 | 154 |
| நிதி செலவினம் | (47) | (36) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 534 | 511 |
| வருமான வரி செலவினம் | (57) | (39) |
| ஆண்டிற்கான இலாபம் | 476 | 472 |

**தெங்கு துறை**

2023 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு KPL இல் தென்னையை கெண்டுள்ள அளவு 3,048.03 ஹெக்டேயராக இருந்தது. தற்போது தென்னையின் கீழ் நடுகை (589.18 ஹெக்டேயர்) தென்னையின் பரப்பளவில் 16மூ ஆகும். ஒரு ஏக்கருக்கு 60 மரம் என்ற சிறந்த நடைமுறையுடன் ஒப்பிடும்போது KPL இன் தென்னந்தோப்புகளில் ஒரு ஏக்கருக்கு 60 மர அடர்த்தி உள்ளது, கம்பனியின் முகாமைத்துவம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட ஆண்டான 2005 சனவரி 1 இல் ஒரு ஏக்கருக்கு 50 மரங்களாக அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தேங்காய் விளைச்சல் 2005 முதல் அதிகரித்து 2012 இல் 18.1 மில்லியன் தேங்காய்களைப் பதிவுசெய்தது. எனினும், 2013 ஆம் ஆண்டில், KPL மற்றும் ஏனைய விவசாயிகள் கணிசமான பின்னடைவை சந்தித்தனர், அங்கு KPL இன் உற்பத்தி 13.0 மில்லியன் தேங்காய்களாக குவைடைந்தது. மேலும், கம்பனியின் தேங்காய் உற்பத்தி 2014 இல் 16.7 மில்லியன் தேங்காய்கள், 2015 இல் 14.1 மில்லியன் தேங்காய்கள், 2016 இல் 16.7 மில்லியன் தேங்காய்களைப் பதிவு செய்ததன் பின்னர் அதிகரித்து வரும் போக்கைக் காட்டியது. எனினும், 2017 இல் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க சரிவு பதிவாகி 10.6 மில்லியனான கீழ்நிலையை அடைந்தது. KPL வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த உற்பத்தி என்பது குறிப்பிடத்தக்கது. 2023 ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்தி 12.9 மில்லியன் தேங்காய்கள் ஆக காணப்பட்டது.

உற்பத்தி கடந்த வருடத்தில் (2022) 16% ஆல் குறைவடைந்திருந்த போதிலும், 2023 இல் ஒரு தேங்காயின் தேறிய விற்பனை சராசரி ரூபா 63.68 ஆக பதிவு செய்யப்பட்டதுடன், இது கடந்த ஆண்டை விட 16.7 சதவீத அதிகரிப்பாகும். 2022 ஆம் ஆண்டில் ஒரு தேங்காயின் தேறிய விற்பனை சராசரி ரூபா 54.56 ஆகும். இந்த சூழ்நிலை தென்னை வருமானத்தில்

கடந்த ஆண்டை விட ரூபா 63 மில்லியன் வீழ்ச்சியை பதிவு செய்தது.

**இறப்பர் துறை**

கம்பனி 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 156.92 ஹெக்டெயர் முதிர்ந்த இறப்பர் தோட்டத்தையும், 4.34 -ஹெக்டெயர் முதிர்ச்சியற்ற தோட்டத்தையும் கொண்டிருந்தது. குறைந்த NSA காரணமாக இறப்பர் நீண்ட காலமாக கவனத்தை ஈர்க்காத துறையாக இருந்து வருகிறது. இறப்பர் துறை ரூபா 0.19 மில்லியன் நட்டத்தை பதிவு செய்திருந்ததுடன், அது 2022 இல் ரூபா 14 மில்லியன் இலாபம் ஈட்டியது. இது முக்கியமாக 2022 உடன் ஒப்பிடும்போது 2023 இல் ஒரு கிலோவிற்கு ரூபா 497 ஆல் NSA அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்டது (NSA - 2022 இல் ரூபா 567). மேலும், பழைய அல்லது விளைச்சல் இல்லாத இறப்பர் தோட்டங்களை வேரோடு பிடுங்கியது மற்றும் பாதகமான காலநிலை காரணமாக வடித்தல் நாட்களின் எண்ணிக்கையை குறைத்ததன் காரணமாக கம்பனியின் இறப்பர் உற்பத்தி படிப்படியாக குறைவடைந்துள்ளது. 2023 இல் உற்பத்தி 85,350 கிலோகிராமாக இருந்ததுடன் 2022 இல் 95,572 கிலோகிராம் ஆகும். உற்பத்தி செய்யாத இறப்பர் தோட்டங்கள் அதிக விளைச்சல் தரும் சிறு ஏற்றுமதி பயிர்களுடன் பல்வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இலவங்கப்பட்டை மற்றும் மிளகு போன்ற பயிர்களுக்கு அதன் வளர்ச்சி திறன் மற்றும் சந்தை இலாபம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அதிக கவனம் செலுத்தப்பட்டது. சில நிலப் பகுதிகள் ஒற்றைப் பயிரை உற்பத்தி செய்யும் அல்லது வளர்க்கும் தனியான பயிர்ச்செய்கைக்காக அர்ப்பணிக்கப்பட்டன.

**ஏனைய பயிர்கள்**

எமது ஊடுபயிர் பயிர்செய்கை மீளாய்வாண்டில் எமது வருமானத்திற்கு ரூபா 86.6 மில்லியனை பங்களித்தது. எமது சிறந்த வெற்றி மற்றும் இலாபத்தன்மை எமது தொலைநோக்கு மூலோபாய வழிகாட்டலிற்கு பங்களிக்கலாம். இது தொடர்பாக சமீப காலங்களில் எடுக்கப்பட்ட முக்கியமான மூலோபாய நடவடிக்கைகளில் ஒன்று, எமது வருமானத்தில் ஏறத்தாழ 80மூ பங்கு வகிக்கும் தென்னையின் பிரதான பயிரை சார்ந்திருப்பதைக் குறைப்பதில் ஊடுபயிர்களாக பல்வகைப்படுத்தலை பெரிய அளவில் தொடங்குவது ஆகும். இதன் விளைவாக, ஊடுபயிர்கள் மூலம் மேலதிக வருமானம் ஈட்டும்போது, நில அலகு ஒன்றின் மூலம் கிடைக்கும் வருமானத்தை அதிகப்படுத்த முடிந்தது.

கறுப்பு மிளகு, மாம்பழம் மற்றும் ரம்புட்டான் போன்ற ஊடுபயிர்கள் இந்த வருமானத்திற்கு பெரும் பங்களித்தன. ஊடுபயிர் பயிர்ச்செய்கையின் விளைவாக ஏனைய நன்மைகளும் இருந்தன. ஊடுபயிரானது உயிரி-பன்முகத்தன்மையை உருவாக்குவதில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தற்போதுள்ள பயிர்ச்செய்கை முறைமைகளை மேம்படுத்துவதில், அதன் குறைந்த கிரய சந்தைப்படுத்தல் அணுகுமுறைக்கு இணையாக, KPL ஊடுபயிர் அறுவடையை குத்தகைக்கு அறிமுகப்படுத்தியது. இந்த முறையில், அறுவடைக்குப் பிந்தைய ஆபத்தைக் குறைத்து, அறுவடையைப் பறித்து விற்பனை செய்யும் பொறுப்பு கொள்வனவாளரின் மீது ஒப்படைக்கப்படும்.

**மூலதனச் செலவினங்கள் மற்றும் முதலீடுகள்**

தென்னை மற்றும் ஊடுபயிர்களை விரிவுபடுத்துதல் மற்றும் முதிர்ச்சியடையாத நிலையில் தோட்டங்களை பராமரித்தல் போன்றவற்றை உள்ளடக்கிய மூலதன அபிவிருத்திகளில் கம்பனி கணிசமான தொகையை பல ஆண்டுகளாக முதலீடு செய்து வருகிறது. மீளாய்வு நிதியாண்டில், ரூபா 407.92 மில்லியன் கம்பனியின் நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது, அதில் ஏறத்தாழ ரூபா 201.41 மில்லியன் முதிர்ச்சியடையாத தோட்டங்களில் செலவிடப்பட்டது.

**நிதி நிலைமை கட்டமைப்பு**

நிதி நிலைமை கட்டமைப்பை பலப்படுத்தும் வகையில் ஆண்டுக்கு ஆண்டு மொத்த சொத்து அதிகரிக்கப்பட்டுள்ளது, மீளாய்வு நிதியாண்டில் ரூபா 170 மில்லியன் அதிகரித்துள்ளது. மீளாய்வாண்டில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ரூபா 275 மில்லியன் முதலீடு செய்தமை, நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களில் ரூபா 57 மில்லியனால் தேறிய முன்னேற்றம் காரணமாக மொத்த சொத்து மீளாய்வாண்டில் ரூபா 3,862 மில்லியனாகும்.

**திரவத்தன்மை முகாமைத்துவம்**

கம்பனியின் தேறிய தொழிற்படு மூலதனம் குறுகிய கால முதலீடுகளின் அதிகரிப்பு காரணமாக ரூபா 967 மில்லியன் (2022 - ரூபா 1,041 மில்லியன்) ஆகும். காசு மற்றும் குறுங்கால முதலீடுகள் 2023 ஆம் ஆண்டில் ரூபா 890.2 மில்லியனாகவும் 2023 இல் ரூபா 1,066 மில்லியனாகவும் காணப்பட்டது. கம்பனி 2022 இல் 1,000 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2023 திசெம்பர் 31 இல் ரூபா 875 மில்லியன் குறுங்கால முதலீடுகளை கொண்டிருந்தது. இந்த முதலீடுகள் கீழ்வருமாறு அரச வங்கிகளில் உள்ள கால வைப்புக்களை உள்ளடக்கியது

| | 31.12.2023 இல் உள்ளவாறு | 31.12.2022 இல் உள்ளவாறு |
|---|---|---|
| 03 மாதங்களினுள் முதிர்ச்சியடைந்தது | | |
| கால வைப்புக்கள் - | - | - |
| 03 மாதங்களின் பின்னர் முதிர்ச்சியடைந்தது | | |
| கால வைப்புக்கள் - இலங்கை வங்கி | 250,200,000 | 200,000 |
| கால வைப்புக்கள் - மக்கள் வங்கி | 400,000,000 | 600,000,000 |
| கால வைப்புக்கள் - தேசிய சேமிப்பு வங்கி | 225,000,000 | 400,000,000 |
| | 875,200,000 | 1,000,200,000 |
| **மொத்தம்** | **875,200,000** | **1,000,200,000** |

கூறப்பட்ட மூலதனம்

இது பங்கு வழங்கல் தொடர்பாக கம்பனி பெற்ற மொத்தத் தொகையைக் குறிக்கிறது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் மொத்த கூறப்பட்ட மூலதனம் ரூபா 200,000,010 ஆகும். இதில் 20,000,000 சாதாரண பங்குகள் மற்றும் இலங்கை பொது திறைசேரியின் செயலாளரிடம் உள்ள 01 கோல்டன் பங்கு என்பன உள்ளடங்குகின்றன. இந்த ஆண்டில் பங்குகளின் ஒதுக்கீடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

**ஒதுக்கீடுகள்**

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் ஒதுக்கங்கள் பின்வருமாறு உள்ளன.

| | 2023<br>ரூபா. மில்லியன் | 2022<br>ரூபா. மில்லியன் |
|---|---|---|
| நிறுத்தி வைக் கப்பட்ட இலாபம் | 2,503 | 2,314 |
| உயிரியல் சொத்து மதிப்பீட்டு ஒதுக்கம் | 517 | 455 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 122 | 115 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 70 | 99 |
| | **3,413** | **3,185** |

**பங்கிலாப கொடுப்பனவு**

பெரும்பாலான அரச நிறுவனங்கள் பொது திறைசேரிக்கு சுமையாக இருக்கும் போது KPL ஒரு வெற்றிகரமான சுயநிதியிடல் நிறுவனமாக மாற்றப்பட்டது மட்டுமல்லாமல், கோல்டன் பங்குதாரரான பொது திறைசேரிக்கு பங்கிலாபத்தை செலுத்துவதன் மூலம் அதன் கடப்பாட்டை நிறைவேற்றியுள்ளது. நடைமுறை நிதியாண்டில், KPL தொடர்ந்து அரச முகாமைத்துவத்தின் கீழ் ஒரு சுயநிதியிடல் பொது நிறுவனமாக உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 2005 ஆம் ஆண்டில் KPL முகாமைத்துவத்தை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர், அதன் வரலாற்றில் முதல் முறையாக, கம்பனி 2007 இல் பங்கிலாபங்களை வழங்கியது. 2007 முதல் மொத்தமாக ரூபா 807.5 மில்லியன் தொகை பொது திறைசேரிக்கு பங்கிலாபமாக செலுத்தப்பட்டுள்ளது. 2023 நிதியாண்டில் ரூபா 135 மில்லியன் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பணிப்பாளர்கள்**

தற்போதைய பணிப்பாளர் சபையில் உள்ளவர்களின் பெயர்கள் பின்வருமாறுள்ளன.

| பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| திருமதி.கே.ஜீ.ஜீ.எவ். ஜெனட் ஜயவர்தன | தலைவர் | 06/10/2022 |
| திருமதி. அமிதா தொடன்வல | பணிப்பாளர் | 01/03/2024 |
| திரு. டபிள்யூ.எம்.டி. விஜேபண்டார | பணிப்பாளர் - திறைசேரி பிரதிநிதி | 02/03/2022 |
| திரு.டபிள்யூ.ஏ.ஜே.ஜீ.டி. விஜேசிங்க | பணிப்பாளர் | 15/01/2020 |
| திரு. கோசல ரங்கல | பணிப்பாளர் | 21/09/2023 |
| திரு. ரீ.டீ.எம்.பீ. பண்டார | பணிப்பாளர் | 01/03/2024 |
| திரு.டீ.சீ.ஜே. பிரேமதிலக்க | பணிப்பாளர் | 01/03/2024 |

**ஒப்பந்தங்களில் பணிப்பாளஉகளுக்கான வட்டி**

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு நேரடி அல்லது மறைமுக வட்டி காணப்படவில்லை.

**பணிப்பாளஉகளின் பங்கு**

கம்பனியின் எந்த பணிப்பாளரோ அல்லது அவரது.்.அவளது துணையோ கம்பனியில் எந்தப் பங்குகளையும் கொண்டிருக்கவில்லை.

**கணக்காய்வுக் குழுக்கள்**

| பெயர் | சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி |
|---|---|
| **திரு.டபிள்யூ.எம்.டி. விஜேபண்டார**<br>தலைவர் கணக்காய்வுக் குழு<br>பணிப்பாளர் - திறைசேரி பிரதிநிதி | 31.03.2022 |
| **திருமதி. அமிதா தொடன்வல –** பணிப்பாளர் (மேலதிக செயலாளர் - அரச பெருந்தோட்டக் கைத்தொழில் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு) | 25.04.2024 |
| **திரு. கே.ஜீ.என். ரங்கல –** பணிப்பாளர் | 25.03.2024 |

**வேலைவாய்ப்பு**

கம்பனி சம வாய்ப்புக் கொள்கையைக் கொண்டுள்ளதுடன் இந்தக் கொள்கைகள் குறிப்பிட்ட தெரிவு, பயிற்சி, அபிவிருத்தி மற்றும் பதவி உயர்வுக் கொள்கைகளில் பொதிந்துள்ளன, அனைத்து முடிவுகளும் தகுதியின் அடிப்படையில் இருப்பதை உறுதி செய்கிறது. கம்பனி இனம், மதம், அரசியல் கருத்து, பாலினம், திருமண நிலை அல்லது உடல் ஊனம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான வாய்ப்பை நடைமுறைப்படுத்துகிறது.

**நியதிச்சட்ட கொடுப்பனவுகள்**

பணிப்பாளர்கள் தங்களுக்குத் தெரிந்தவரை, கம்பனி செலுத்த வேண்டிய அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் விதிப்பனவுகள், கம்பனியின் ஊழியர்களின் சார்பாக செலுத்த வேண்டிய அனைத்து பங்களிப்புக்கள், விதிப்பனவுகள் மற்றும் வரிகள் மற்றும் அனைத்து அறியப்பட்ட நியதிச்சட்ட நிலுவைகளும் அறிக்கை திகதியில் உள்ளவாறு கம்பனியால் செலுத்தப்பட்டன என்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

**அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, கம்பனியின் மீது எந்தவொரு பெருண்மையான விளைவையும் ஏற்படுத்தும் எந்த நிகழ்வுகளும் அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் காணப்படவில்லை.

**கணக்காய்வாளஉகள்**

2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

**நிதிக்கூற்றுக்கள்**

2023 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2024 பெப்ரவரி 29 இல் கம்பனியின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. திரு. கே.ஜீ.ஜீ.எவ்.ஜே. ஜயவர்தன (தலைவர்) மற்றும் திரு. டபிள்யூ.எம்.டீ. விஜேபண்டார (பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி) ஆகியோர் வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபைக்காக மற்றும் சார்பாக நிதி அறிக்கைகளில் கையொப்பமிட அதிகாரம் பெற்றுள்ளனர்

**வருடாந்த பொதுக் கூட்டம்**

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டமானது இல. 80, தம்புள்ள வீதி, குருநாகல் - இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 2024 ஆகஸ்ட் 29 வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும். வருடாந்த பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபைக்காகவும் சார்பாகவும்

**திருமதி கே.ஜீ.ஜீ.எவ். ஜெனட் ஜயவர்தன**
தலைவர்

**திரு. டபிள்யூ.எம்.டி. விஜேபண்டார**
பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி

**கோப்பரேட் அட்வைசரி சேர்விஸஸ்**
(பிறைவேட்) லிமிட்டட்
வரையறுக்கப்பட்ட குருநாகல்
பெருந்தோட்டக் கம்பனியின்
செயலாளர்கள.
2024 யூலை 30

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புகள் பின்வரும் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதிக்கூற்று தொடர்பான கணக்காய்வாளர்களிற்கு உரிய அனைத்து பொறுப்புக்களும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்படுகின்றன.

**நிதிக்கூற்றுக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:**

விரிவான வருமானக் கூற்று - இது நிதியாண்டிற்கான கம்பனியின் இலாபம் மற்றும் நட்டம் பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை அளிக்கிறது மற்றும் நிதி நிலைமை கூற்று - இது நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறான கம்பனியின் விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை முன்வைக்கிறது, மேலும் இது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாட்டுடன் இணங்குகிறது. பணிப்பாளர்கள் இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் உறுதிப்படுத்த வேண்டும்:

- பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு, நிலைத்திருக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டு, பொருண்மையான பிறழ்வுகள் ஏதேனும் இருப்பின், வெளிப்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன்
- பொருந்தக்கூடிய அனைத்து கணக்கீட்டு நியமங்களும், உரியவாறு பின்பற்றப்பட்டுள்ளன்
- நியாயமான மற்றும் விவேகமான தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன.

கம்பனியிடம் தொடர்ந்து செயற்படுவதற்கு போதுமான வளமூலங்கள் இருப்பதையும், இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படைகளை பயன்படுத்துவதை நியாயப்படுத்தவும் பணிப்பாளர்கள் உள்ளனர். மேலும், கம்பனி போதுமான கணகீட்டு பதிவேடுகளை நியாயமான துல்லியத்துடன் பேணி வருவதை உறுதிப்படுத்துதல், கம்பனியின் நிதி நிலைமை மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை கம்பனி சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்துதல் ஆகிய பொறுப்பு பணிப்பாளர்ககளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளைத் தடுப்பதற்கும் கண்டறிவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை நிறுவுவதற்கு முறையான பரிசீலனையை வழங்குவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாக உள்ளனர்.

பணிப்பாளர்கள் நிதிக்கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளர்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒவ்வொரு வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி வழங்க வேண்டியதுடன் அவர்களின் கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு ஏற்றதாக அவர்கள் கருதும் மதிப்பீடுகள் எதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் 15 வேலை நாட்களுக்கு குறையாமல் கம்பனியின் பங்குதாரருக்கு வருடாந்த பொதுக் கூட்ட அறிக்கையை சபை அனுப்ப வேண்டும். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றியதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

**இணக்க அறிக்கை**

பணிப்பாளர்கள் தாங்கள் அறிந்த வரையில், கம்பனி செலுத்த வேண்டிய அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் விதிப்பனவுகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துகிறார்கள் கம்பனியின் ஊழியர்கள் சார்பாக செலுத்த வேண்டிய அனைத்து பங்களிப்புக்கள், விதிப்பனவுகள் மற்றும் வரிகள் மற்றும் அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான நிலுவைகள் மற்றும் கம்பனி செலுத்த வேண்டிய அல்லது பொருத்தமான இடங்களில் வழங்கப்பட்டுள்ள அனைத்து அறியப்பட்ட நியதிச்சட்ட நிலுவைகளும் செலுத்தப்பட்டுள்ளன.



**சபையின் உத்தரவின்படி**

கோப்பரேட் அட்வைசரி சேர்வீஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்

செயலாளர்கள் - வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி, குருநாகல்.

2024 யூலை 30

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

பீஎல்/சீ/கேபீஎல்//01/2023/02 2024 யூலை 23

தலைவர்
குருணாகல் பெருந்தோட்டக் கம்பனி

**குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

மஞ்சள் பயிர்ச்செய்கைக்காக 2020 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் வருடங்களுக்காக செலுத்தப்பட்ட ரூபா 8,432,049 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், இந்த செலவின சீராக்கல் எண்ணக்கருவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுகளில் ஈட்டப்பட்ட வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்படாது நடைமுறை சொத்துக்களில் பதிவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் திரண்ட ஈட்டம் அந்த அளவினால் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 கம்பனியின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள கம்பனியின் 2023ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள் ஏனைய தகவல்கள் என்பதால் குறிப்பிடப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களுக்கான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படாததுடன், நான் அது தொடர்பில் எதுவித சான்றுபடுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்விற்குரிய எனது பொறுப்பாக அமைவது, மேற்குறிப்பிடப்பட்ட ஏனைய தகவல்கள் கிடைக்கும் போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் இல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு முறையொன்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் அடிப்படையில் பொருண்மையாக பொருந்தவில்லையா என்பது தொடர்பில் கருத்திற்கொள்வது ஆகும்.

கம்பனியின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதன் பொருண்மையான தவறுகள் உள்ளதாக நான் முடிவெடுத்தால், திருத்துவதற்காக ஆளுமைக்குட்பட்ட தரப்பினருக்கு அந்த தகவல்கள் வழங்கப்பட வேண்டும். தொடர்ந்தும் திருத்தப்படாத தவறுகள் காணப்பட்டால், அவை அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6)ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக

காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வினுள் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து, 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு கம்பனியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், இந்த அறிக்கையில் காணப்படுகின்ற 1.2.அ,ஆ போன்ற பந்திகளில் காணப்படும் அவதானிப்புகள் தவிர, சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கம்பனியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் நிறுவகம் இணங்கியொழுகாதுள்ளமையை.

| சட்டம், விதிகள் / பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| 2010 திசெம்பர் 01 ஆந் திகதிய KP/2010/22 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | மாகாண தோட்ட அலுவலகங்களில் பணப் பெறுவனவு பெறுமதி ரூபா 50,000 இனை விஞ்சும் சந்தர்ப்பங்களில் அந்த பணம் துரிதமாக வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், நாரம்மல மற்றும் தம்பதெனிய மாகாண தோட்ட அலுவலகங்களின் பௌதீக பரிசோதனையின் போது கையிருப்பிலுள்ள காசு மீதி முறையே ரூபா 278,923 மற்றும் ரூபா 265,330 ஆக காணப்பட்டது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

**2.3 ஏனைய அவதானிப்புகள்**

(அ) 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தென்னை உற்பத்தி கடன் பட்டோர் மீதியான ரூபா 63,510,576 தொகையினுள் 03 முதல் 08 வருடங்களை விஞ்சிய முறையே ரூபா 1,688,527 மற்றும் ரூபா 4,677,838 தொகையான கடன் கொடுத்தோர் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹிரியால தோட்ட அலுவலகத்திற்கு சொந்தமான 07 தோட்டங்களை வலுப்படுத்துவதற்கு 2023 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 974,500 பெறுமதியான CCTV கமரா உபகரணங்கள், நோக்கத்திற்குரிய பணிகளில் ஈடுபடுத்தப்படாது நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் உள்ளடக்கப்படாது கனேவத்த களஞ்சியத்தில் காணப்பட்டதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

டபிள்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# விரிவான வருமானக் கூற்று

| திசெம்பஉ 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 4 | 1,010,951,819 | 1,065,494,048 |
| விற்பனை கிரயம் | 5 | (563,224,713) | (549,558,623) |
| மொத்தலாபம் | | 447,727,106 | 515,935,425 |
| உயிரியல் சொத்துக்களின் நியாயமான பெறுமதி மீதான மிகை / (நட்டம்) | 16.2 | 62,300,502 | 35,448,638 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 6 | 86,139,304 | 65,261,823 |
| நிர்வாக மற்றும் பொது செலவினங்கள் | 7 | (226,833,617) | (223,251,034) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்** | | **369,333,295** | **393,394,852** |
| தேறிய நிதி வருமானம் / (செலவினம்) | 8 | 165,097,450 | 118,144,550 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | | **534,430,745** | **511,539,402** |
| வருமான வரி செலவினம் | 9 | (57,820,389) | (39,164,963) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **476,610,356** | **472,374,439** |
| | | | |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்தான உண்மையான இலாபம்/ (நட்டம்) | | (29,036,813) | 18,654,998 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 6,210,036 | - |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பின் தலைகீழ் மாற்றம் (குறிப்பு 26) | | **453,783,579** | **491,029,437** |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | | |
| | **10** | **23.83** | **23.62** |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | | | |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

| திசெம்பஉ 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| பயன்படுத்தும் காணியின் உரிமை | 11 | 56,152,820 | 58,767,078 |
| அசையா குத்தகை சொத்துக்கள் (தரிசு நிலங்கள் தவிர்ந்தவை) | 12 | 7,937,067 | 10,560,635 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 13 | 2,235,123,905 | 1,960,092,523 |
| நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் | 14 | 345,641,117 | 288,723,832 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 15 | 20,212,000 | 19,449,229 |
| | | **2,665,066,909** | **2,337,593,297** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள் மீதான உற்பத்தி | 16.1 | 24,528,771 | 18,932,784 |
| இருப்புக்கள் | 16.3 | 117,376,162 | 76,068,029 |
| வைப்புக்கள் | 17 | 4,691,770 | 4,122,470 |
| முற்கொடுப்பனவுகள் | 18 | 2,753,537 | 2,688,692 |
| குறுங்கால செயந்திட்டங்கள் தொடர்பாக முற்செலுத்திய | 19 | 12,182,275 | 10,245,115 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 20 | 133,771,319 | 164,772,917 |
| வரி மேலதிகக் கொடுப்பனவு | 15 | 12,075,211 | 11,179,534 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 21 | 875,200,000 | 1,000,200,000 |
| குறுங்கால முதலீடுகள் | 22 | 15,051,304 | 66,682,758 |
| காசு மற்றும் வங்கி மீதி | | 1,197,630,349 | 1,354,892,300 |
| **மொத்த சொத்துக்கள்** | | **3,862,697,258** | **3,692,485,597** |
| **மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 23 | 200,000,010 | 200,000,010 |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள் | | 2,503,650,509 | 2,314,340,656 |
| உயிரியல் சொத்து பெறுமதி ஒதுக்கம் | | 517,452,741 | 455,152,239 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் வாகனம் | | 122,089,610 | 115,879,574 |
| ஏனைய ஒதுக்கங்கள் | | 70,647,014 | 99,683,827 |
| | | 3,413,839,884 | 3,185,056,305 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 24 | 145,755,645 | 117,802,881 |
| குத்தகைதாரருக்கான தேறிய பொறுப்பு | 25 | 72,954,822 | 76,520,026 |
| பிற்போடப்பட்ட வரி பொறுபபு | 26 | - | - |
| | | 218,710,467 | 194,322,907 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| குத்தகைதாரருக்கான தேறிய பொறுப்பு | 25 | 3,565,204 | 3,565,204 |
| பெறப்பட்ட முற்பணம் | 27 | 5,877,704 | 10,738,353 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 31,672,908 | 18,388,943 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 28 | 189,031,092 | 280,413,885 |
| | | 230,146,908 | 313,106,385 |
| **மொத்த மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | **3,862,697,258** | **3,692,485,597** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.
2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என சான்றுபடுத்தப்படுகிறது.

**திஸ்ஸநாயக்க டிஜகே**
முகாமையாளர் - நிதி

**சுமுருக்கேஉனு ஏஸ்ஏம்ஏம்**
பீருதுமு நீஜறுவேுறுப் ஆதீகுர்ரீ

இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.
வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

**ஜயவர்தன கே.ஜீ.ஜீ.எவ்.ஜே**
தலைவர்
குருநாகல், 2023.02.27

**விஜேபண்டார டபிள்யூஎம்டி**
பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி

| திசெம்பஉ 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம் ரூபா | மரப்பலகை ஒதுக்கம் ரூபா | ஏனைய ஒதுக்கம் ரூபா | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா | நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள் ரூபா | மொத்த மூலதனம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| **2021 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | **200,000,010** | 419,703,601 | 81,028,828 | 115,879,574 | 2,002,414,854 | 2,819,026,867 |
| 2022 ஆம் ஆண்டிற்கான தேறியலாபம் | | | | | 472,374,439 | 472,374,439 |
| ஏனைய விரிவான வருமானம் | | | 18,654,998 | | - | 18,654,998 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | | - | | - |
| உயிரியல் சொத்து ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டது | | 35,448,638 | | | (35,448,638) | - |
| பங்கிலாபம் | | | | | (125,000,000) | (125,000,000) |
| **2022 திசெம்பஉ 31 இல் உள்ளவாறான மீதி** | **200,000,010** | **455,152,239** | **99,683,826** | **115,879,574** | **2,314,340,655** | **3,185,056,304** |
| 2023 ஆம் ஆண்டிற்கான தேறியலாம் | | | | | 476,610,356 | 476,610,356 |
| ஏனைய விரிவான வருமானம் | | | **(29,036,813)** | | **-** | **(29,036,813)** |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | | 6,210,036 | | 6,210,036 |
| உயிரியல் சொத்து ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டது | | 62,300,502 | | | | (62,300,502) |
| பங்கிலாபம் | | | | | (225,000,000) | (225,000,000) |
| **2023 திசெம்பஉ 31 இல் உள்ளவாறான மீதி** | **200,000,010** | **517,452,741** | **70,647,013** | **122,089,610** | **2,503,650,509** | **3,413,839,883** |

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

## காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பஉ 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| **வருமான வரி செலவினத்திற்கு முன்னரான இலாபம்** | 534,430,745 | 511,539,402 |
| **சீராக்கங்கள்** | | |
| பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு | 92,614,886 | 84,162,950 |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகளிற்கான ஏற்பாடு | 30,297,366 | 20,326,144 |
| செலவினத்திற்கு மாற்றிய முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்கள் | - | 5,076,634 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் வாகனம் | (14,883) | (3,494) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் அகற்றல் மீதான இலாபம் | (41,173,432) | (29,839,522) |
| பயன்பாட்டு தாவர விற்பனை மீதான இலாபம் | (7,688,488) | (2,775,095) |
| விற்பனை கிரயம் கழித்த நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களால் எழும் ஆதாயம் - நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் | (62,300,502) | (35,448,638) |
| தேறிய நிதி வருமானம் | (165,097,450) | (118,144,550) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களிற்கு முன்னரான இலாபம்** | **381,068,242** | **434,893,833** |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்** | | |
| இருப்புக்கள் | (41,308,133) | 7,444,026 |
| வைப்புக்கள் | (569,300) | (3,167,770) |
| முற்கொடுப்பனவுகள் | (64,845) | (898,869) |
| வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் | (5,400,297) | (37,546,231) |
| குறுங்கால செயற்தி“ட்டங்கள் தொடர்பாக முற்செலுத்திய செலவினம் | (1,937,159) | 1,474,829 |
| பெறப்பட்ட முற்பணம் | (4,860,649) | 5,749,279 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | (91,382,793) | 39,452,347 |
| **செயற்பாடுகளில் இருந்து உருவாகிய காசு** | **235,545,066** | **447,401,443** |
| ஓய்வூதிய நலன் கிரயங்களை செலுத்துதல் | (31,381,414) | (15,547,038) |
| செலுத்திய வருமான வரி | (32,931,920) | (26,369,023) |
| செலுத்திய பிடித்துவைத்தல் வரி | (11,604,504) | - |
| செலுத்திய பொருளாதார சேவை கட்டணம் | - | - |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசு** | **159,627,228** | **405,485,382** |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான சேர்த்தல் | (356,513,005) | (211,006,620) |
| நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களிற்கான சேர்த்தல்கள் | (538,969) | (1,643,921) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அகற்றுவதன் யு34:யு39மூலம் கிடைக்கும் வருமானம் | 34,850 | 17,200 |
| தென்னை மற்றும் இறப்பர் பயன்பாட்டு மரங்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் | 41,709,091 | 30,642,008 |
| நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் | 8,014,687 | 5,564,780 |
| கால வைப்புகளில் தேறிய முதலீடு | 125,000,000 | (225,000,000) |
| பெறப்பட்ட வட்டி | 244,713,945 | 88,593,884 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **62,420,598** | **(312,832,669)** |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| செலுத்திய குத்தகை வாடகை | (47,020,833) | (37,161,500) |
| குறுங்கால கடன்களுக்கான வட்டி | - | - |
| பதவியணியினரிற்கு வழங்கப்பட்ட கடன் | (19,468,250) | (15,392,460) |
| பதவியணியினர் கடன் அறவீடுகள் | 17,809,802 | 13,726,798 |
| செலுத்திய பங்கிலாபம் | (225,000,000) | (50,000,000) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **(273,679,281)** | **(88,827,162)** |
| **காசு மற்றும் காசிற்கு சமமானவற்றில் அதிகரிப்பு/(குறைவு).** | **(51,631,454)** | **3,584,523** |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவை | 66,682,758 | 63,098,236 |
| காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவை (குறிப்பு - அ) | 15,051,304 | 66,682,758 |
| **குறிப்பு - அ** | | |
| காசு மற்றும் காசிற்கு சமமானவை | **31.12.2023 Rs.** | **31.12.2022 Rs.** |
| 03 மாதங்களுக்குள் முதிர்ச்சியடையும் கால வைப்புக்கள் | | |
| இலங்கை வங்கி | | |
| மக்கள் வங்கி | | |
| தேசிய சேமிப்பு வங்கி | 234,000,000 | 83,000,000 |
| Repo | (223,618,296) | (20,689,449) |
| வங்கியிலுள்ள காசு | 4,650,240 | 4,357,467 |
| கையிலுள்ள காசு | 19,360 | 14,740 |
| தபால் / முத்திரைகள் | **15,051,304** | **66,682,758** |

**கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.**

கணக்கீட்டுக் கொள்கைகள்

## 01. பொது

### 1.1 அறிக்கையிடும் நிறுவனத்தின் சட்ட அந்தஸ்து

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனியானது (KPL) 1987 இன் 23 ஆம் இலக்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச உடைமையாக்கப்பட்ட வணிக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றும் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் இது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீளப் பதிவுசெய்யப்பட்டது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 80, தம்புள்ள வீதி, குருநாகல் எனும் முகவரியில் அமைந்துள்ளது.

கம்பனி தனியான பங்குதாரர் கம்பனியொன்றாக உள்ளது, இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியின் செயலாளர் அதன் தனியான பங்குதாரராக உள்ளார்.

### 1.2 முக்கிய செயற்பாடுகள் மற்றும் வணிகத்தின் தன்மை

ஆண்டின் போது, கம்பனியின் முக்கிய செயற்பாடுகள் தெங்கு, இறப்பர் மற்றும் ஏனைய விவசாய பொருட்களை பயிரிடுதல், உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகும். அதன் பெருந்தோட்டங்கள் குருநாகல், கம்பஹா மற்றும் அனுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் அமைந்துள்ளன, அவை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு 08 நடுகைப் பகுதி தோட்டங்களின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அத்தனகல்ல | தம்பதெனிய |
| தொடங்கஸ்லந்த | குருநாகல் |
| கடுகம்பொல | நாரம்மல |
| ஹிரியால | |

## 02. தயாரிப்பின் அடிப்படை

### 2.1 இணக்க கூற்று

விரிவான வருமான கூற்று, நிதி நிலைமை கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் ("நிதிக்கூற்றுக்கள்") இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் (CA Sri Lanka) வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/ LKAS) மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகள் என்பவற்றிற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 தொடர்ந்தியங்கும் தன்மை

பணிப்பாளர்கள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்வதற்கு கம்பனிக்கு உள்ள திறனைப் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளதுடன் அவர்கள் கலைக்கவோ அல்லது வணிகத்தை நிறுத்தவோ விரும்பவில்லை.

### 2.3 சமஉப்பிப்பின் அடிப்படை

நிதி நிலைமைக் கூற்றிலுள்ள பின்வரும் பொருண்மையான உருப்படிகளைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலும் வரலாற்று கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டன.

- குறிப்பு 11 இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட JEDB/ SLSPC இன் வெற்று நிலத்திற்கான குத்தகை உரிமை.
- குறிப்பு 14 நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் விற்பனை கிரயம் கழித்த நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன
- குறிப்பு 24 ஓய்வூதியப் நலன்களுக்கான கடப்பாடுகள் உண்மையான மதிப்பீட்டின் அடிப்படையில் இனங்காணப்பட்டன (LKAS - 19)
- உயிரியல் சொத்துக்களிலிருந்து அறுவடை செய்யப்படும் விவசாய உற்பத்திகள் தேறிய நிகரக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றன. தேறிய நிகரக்கூடிய பெறுமதியானது மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து அத்தகைய விற்பனையை செயற்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட கிரயங்களை கழித்து பெறப்படுகிறது.

நிதிக்கூற்றுக்களில் பணவீக்க காரணிகளுக்கு எந்த சீராக்கமும் செய்யப்படவில்லை.

### 2.4 செயற்பாட்டு மற்றும் சமஉப்பிப்பு நாணயம்

கம்பனியின் செயற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாயில் நிதிக்கூற்றுக்கள் வழங்கப்படுகின்றன. வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், இலங்கை ரூபாயில் வழங்கப்படும் அனைத்து நிதித் தகவல்களும் அருகிலுள்ள ரூபாய்க்கு மட்டந்தட்டப்படும்.

### 2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு, கணக்கீட்டு கொள்கைகளின் பயன்பாடு மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் ஆகியவற்றைப் பாதிக்கும் தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை முகாமை செய்ய வேண்டும்.

தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள் வரலாற்று அனுபவம், போக்குகள் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உட்பட ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். அதன் பிரகாரம் உண்மையான முடிவுகள் இந்த தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை எடுகோள்கள் அவற்றின் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்பட்ட காலத்திலும் மற்றும் தாக்கம் ஏற்படுத்தும் எந்த எதிர்கால காலங்களிலும் இனங்காணப்படுகின்றன. நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க விளைவைக் கொண்ட கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்துவதில்

முக்கியமான தீர்ப்புகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன:

குறிப்பு 12 – வெற்று நிலத்திற்கான குத்தகை உரிமையைத் தவிர அசையா குத்தகை சொத்துக்கள்

குறிப்பு 14 - நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்

குறிப்பு 24 - வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் அளவீடு.

குறிப்பு 26 – பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

## 2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

முன்னைய ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களின் விளக்ககாட்சி மற்றும் வகைப்படுத்தல் சிறந்த விளக்ககாட்சிக்கு பொருத்தமானதாகவும், நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடத்தக்கதாகவும் திருத்தப்பட்டுள்ளது.

## 03. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முதன்மை கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகள் வேறுவிதமாகக் கூறப்படாவிட்டால், வழங்கப்பட்ட அனைத்து ஆண்டுகளுக்கும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படை

நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்ட சொத்துக்கள் காசு, வங்கி மீதிகள் மற்றும் கம்பனியின் வணிகத்தின் இயல்பான இயக்க சுழற்சியின் போது அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் காசாக பெறப்படும் என எதிர்பார்க்கப்படும் சொத்துக்கள், அதில் எது குறைவாக இருந்தாலுமாகும். நடைமுறை சொத்துக்கள் தவிர மற்ற சொத்துக்கள், அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு அப்பால் கம்பனி வைத்திருப்பதற்கு உத்தேசித்துள்ளவையாகும்..

#### 3.1.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

#### 3.1.1.1 இனங்காணல் மற்றும் அளவீடு

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட நட்டக்கழிவு இழப்புக்கள் கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

இந்த நோக்கத்திற்கான கிரயத்தில் கையகப்படுத்துதலுக்கான கிரயம் மற்றும் சொத்தை அதன் செயற்படு நிலை அல்லது நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட நேரடியாக பங்களிக்கக்கூடிய செலவினம் ஆகியன உள்ளடங்குகிறது. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் கிரயமானது, மூலப்பொருட்களின் கிரயம், நேரடி உழைப்பு மற்றும் சொத்தை வேலை செய்யும் நிலைக்கு கொண்டு வருவதற்கு அல்லது அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய ஏனைய செலவினங்கள் ஆகியன உள்ளடங்குகிறது. ஏற்கனவே உள்ள சொத்தை இடித்து அகற்றுவதற்கு ஏற்படும் செலவினமும் இதில் உள்ளடங்குகிறது.

மூலதன நடைமுறைவேலையானது முதல் உபயோகத்தின் போது அல்லது சொத்து செயலறபடுத்தப்படும் நேரத்தில் அந்தந்த சொத்துக் கணக்குகளுக்கு மாற்றப்படுகிறது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வெவ்வேறு பயன்தரு ஆயுட்காலத்தை கொண்டிருக்கும் போது, அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தனித்தனி உருப்படிகளிற்காக (முக்கிய கூறுகள்) கணக்கீடு செய்யப்படுகின்றன.

நிரந்தர நில அபிவிருத்தி கிரயங்கள் என்பது நில வரையறைகளில் பெரிய மாற்றங்களைச் செய்வதற்கும், புதிய அணுகல் வீதிகளை அமைப்பதற்கும் மற்றும் ஏனைய முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் ஏற்படும் கிரயங்கள் ஆகும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியை அகற்றுவதில் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள், அப்புறப்படுத்துதலில் இருந்து கிடைக்கும் வருமானத்திற்கும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் தொகைக்கும் இடையே வேறுபட்டதாக தீர்மானிக்கப்படுகிறது, மேலும் விரிவான வருமான கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் இனங்காணப்படுகிறது.

எந்தவொரு மீள்மதிப்பீட்டு மிகையும் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட்டு, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உரிமை மூலதனத்தில் திரட்டப்படுகிறது, இது வருமான கூற்றில் முன்னர் இனங்காணப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டுக் குறைவை மாற்றியமைக்கும் அளவிற்குத் தவிர, இந்த அதிகரிப்பு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது. சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் இனங்காணப்பட்ட அதே சொத்தில் ஏற்கனவே உள்ள மிகையை ஈடுசெய்யும் அளவிற்கு தவிர, வருமான கூற்றில் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறை இனங்காணப்படுகிறது.

மீள்மதிப்பீட்டுத் திகதியில் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு சொத்தின் மொத்தச் கொண்டுசெல்லும் தொகைக்கு எதிராக நீக்கப்பட்டு, தேறிய தொகையானது, சொத்தின் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு மீண்டும் கணக்கிடப்படும். அகற்றப்பட்டவுடன், விற்கப்படும் குறிப்பிட்ட சொத்து தொடர்பான எந்த மீள்மதிப்பீட்டு ஒதுக்கமும் நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்களிற்கு மாற்றப்படுகிறது. ஒரு வெளிப்புற மதிப்பீட்டாளரால் மோட்டார் வாகனத்தை மீள்மதிப்பீடு செய்யும் கொள்கையை கம்பனி பின்பற்றியிருந்ததுடன் மோட்டார் வாகனத்தின் உள்ளக மதிப்பீட்டை குறைந்தது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டும்.

#### 3.1.1.2 அடுத்தடுத்த செலவினங்கள்

தற்போதுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீது ஏற்பட்ட செலவினங்கள் முதலில் மதிப்பிடப்பட்டதை விட அதிகமாக எதிர்கால பொருளாதார நன்மைகளை விளைவிக்கும் என்றும் அதன் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியும் என்றும் எதிர்பார்க்கப்படும் போது அத்தகைய செலவினங்கள். மூலதனமாக்கப்படுகின்றன, மாற்றப்பட்ட சொத்தின் கொண்டுசெல்லும் தொகை இனங்காணப்படுவதில்லை.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த சேவை.்.பராமரிப்புக்கான கிரயங்கள் விரிவான வருமான கூற்றில் இனங்காணப்படுகின்றன. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து அகற்றப்படும் போது மீள்மதிப்பீட்டு மிகை ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகை நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்திற்கு மாற்றப்படுகிறது.

#### 3.1.1.3 இனங்காணப்படாமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு உருப்படியின் கொண்டுசெல்லும் தொகை அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது இனங்காணப்படுவதில்லை. இனங்காணப்படாதமை தொடர்பாக ஏற்படும் ஆதாயங்கள் அல்லது இழப்புகள் விரிவான வருமான கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் இனங்காணப்படுகின்றன.

#### 3.1.1.4 கடன்பெறுதல் கிரயம்

ஒரு தகுதியான சொத்தை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாகக் காரணமான கடன் பெறுதல் கிரயங்கள், அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு தயாராகி வருவதற்கு கணிசமான கால அவகாசம் எடுக்கும், இது சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்படுகிறது. மூலதனமாக்கலுக்குத் தகுதியான கடன் பெறுதல் கிரயங்களின் தொகைகள் LKAS 23 - கடன் பெறுதல் கிரயங்களிற்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்றன.

மூலதனமாக்கப்படாத கடன் பெறுதல் கிரயங்கள், அவை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் செலவினங்களாக இனங்காணப்பட்டு, விரிவான வருமான கூற்றிற்கு அறவிடப்படுகிறது.

#### 3.1.1.5 பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு

பெறுமானத்தேய்வானது ஒரு சொத்தின் கிரயம் அல்லது அதன் இற்றைப் பெறுமதி கழிக்கப்பட்ட கிரயத்திற்காக பதிலீடு செய்யப்பட்ட ஏனைய தொகையில் கணிப்பிடப்படுகிறது. பெறுமானத்தேய்வு என்பது ஒவ்வொரு சொத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் விரிவான வருமான கூற்றில் இனங்காணப்படுகிறது, ஏனெனில் இது சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு முறையை மிக நெருக்கமாக பிரதிபலிக்கிறது.

குத்தகைக் காலத்தின் இறுதிக்குள் கம்பனி உரிமைத்துவத்தை பெறும் என்பது நியாயமான முறையில் உறுதியாகத் தெரியாவிட்டால், குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் குத்தகைக் காலத்தின் குறுகிய காலத்திலும் அவற்றின் பயன்தரு ஆயுட்காலத்திலும் பெறுமானத்தேய்விடப்படுகின்றன. நிலம் பெறுமானத்தேய்விடப்படுவதில்லை.

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிகளுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலங்கள் பின்வருமாறுள்ளன:

| சொத்து வகை | ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| கட்டிடங்கள் | 40 |
| மின்சாரமயமாக்கல் | 40 |
| சூரிய சக்தி மின்சார முறைமை | 10 |
| கிணறுகள் | 40 |
| வேலி | 03 |
| மோட்டார் வாகனங்கள் | 05 |
| இயந்திரங்கள் | 13 1/3 |
| தளபாடம் மற்றும் பொருத்துக்கள் | 10 |
| உபகரணங்கள் | 08 |
| நீர்ப்பாசனம் | 08 |
| கணனிகள் | 05 |
| நிலத்தை மேம்படுத்துதல் | 05 |

கம்பனி 2018 ஆம் ஆண்டு வரை பெறுமானத்தேய்விடப்பட்டதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்கியது ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பெறப்பட்ட ஒரு சொத்து அந்த ஆண்டிற்காக பெறுமானத்தேய்விடப்படாது அந்த குறிப்பிட்ட சொத்தின் பெறுமானத்தேய்வு அடுத்த நிதியாண்டிலிருந்து தொடங்குகிறது. அத்தகைய சொத்தை அகற்றும் போது, முழு ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு அந்தச் சொத்தை அப்புறப்படுத்திய ஆண்டில் மேற்கொள்ளப்படுகிறது.

எவ்வாறாயினும், LKAS 16 இன் பிரகாரம் ஒரு சொத்தின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்கு கிடைக்கும் போது தொடங்கும். எனவே, 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட சொத்தின் பெறுமானத்தேய்வு அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

#### 3.1.1.6 நில அபிவிருத்தி கிரயம்

வீதிகள் ரூ பாலங்கள், குளங்கள் போன்ற நில மேம்பாட்டிற்காக KPL மேற்கொண்ட செலவினம் 2018 வரை பெறுமானத்தேய்விடப்படவில்லை, ஆனால் 2018 முதல் அத்தகைய கிரயம் பெறுமானத்தேய்விடப்படுகிறது. 2018 இற்கு முன்னர் ஏற்பட்ட கிரயம் மீதமுள்ள பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் பெறுமானத்தேய்விடப்படுகிறது.

ஒரு சொத்தின் பெறுமானத்தேய்வு நிறுத்தப்படும் போது, சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது என வகைப்படுத்தப்பட்டு, மேலே உள்ள பெறுமானத்தேய்வுக் கொள்கைக்கு உட்பட்டு சொத்து இனங்காணப்படுவதில்லை. பெறுமானத்தேய்வு முறை, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இற்றைப் பெறுமதிகள் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மதிப்பாய்வு செய்யப்பட்டு, பொருத்தமானதாக இருந்தால் சீர்செய்யப்படும்.

குத்தகை சொத்துக்கள் பின்வரும் காலப்பகுதிகளில் சம தொகைகளில் காலக்கழிவிடப்படுகின்றன.

| சொத்து வகை | ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| வெற்று நிலம் | 53 |
| கட்டிடங்கள் | 25 |
| இயந்திரங்கள் | 15 |
| முதிர்ந்த தோட்டங்கள் | 30 |
| நில அபிவிருத்தி கிரயம் | 30 |

#### 3.1.1.7 குத்தகை சொத்துக்கள்

நிதி குத்தகையின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள், கணிசமான அளவிற்கு கம்பனிக்கு மாற்றப்படுகின்றன, குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் உரிமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து அபாயங்கள் மற்றும் நலன்கள், அவை நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டதாக கருதப்பட்டு அவற்றின் பண விலையில் மூலதனமாக்கப்படுகின்றன. நிதி குத்தகை மூலம் பெறப்பட்ட சொத்துக்கள், அவற்றின் நியாயமான பெறுமதியின் கீழ் மற்றும் தொடக்கத்தில் குறைந்தபட்ச குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதி, இதில் குறைவானதில் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட நட்டக்கழிவு இழப்புகளுக்களை கழித்து பெறப்படும் தொகைக்கு சமமான தொகையில் அளவிடப்படுகிறது. குத்தகைதாரருக்குச் செலுத்த வேண்டிய முதன்மை.்.மூலதனக் கூறுகள் பொறுப்பு.்.கடப்பாடாகக் காட்டப்படுகின்றன.

நிதி குத்தகையின் கீழ் வைத்திருக்கும் சொத்துக்கள் குத்தகைக் காலத்தின் குறுகிய காலத்தில் அல்லது குத்தகைக் காலத்தின் முடிவில் உரிமை மாற்றப்படாவிட்டால், அதற்கு சமமான சொந்தமான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் காலக்கழிவிடப்படுகிறது.

குத்தகைதாரர் குத்தகைக்கு விடப்பட்ட காலத்தில் உரிமைத்துவத்தின் அனைத்து அபாயங்கள் மற்றும் நன்மைகளை கணிசமாகத் தக்கவைத்துக்கொள்ளும் குத்தகைகள் செயற்பாட்டு குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. செயற்பாட்டுக் குத்தகைகளின் கீழ் செலுத்தப்படும் குத்தகைக் கொடுப்பனவுகள் (காப்புறுதி மற்றும் பராமரிப்பு போன்ற சேவைகளுக்கான கிரயங்களை தவிர்த்து) குத்தகைக் காலத்தின் மீது நேர்கொட்டு அடிப்படையில் விரிவான வருமான கூற்றில் ஒரு செலவினமாக இனங்காணப்படுகிறது.

#### 3.1.1.8 நிதியல்லாத சொத்துகளின் நட்டக்கழிவு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், ஒரு சொத்து நட்டக்கழிவிடக்கூடும் என்பதற்கான அறிகுறி உள்ளதா என்பதை கம்பனி மதிப்பிடுகிறது. அத்தகைய அறிகுறி ஏதேனும் இருந்தால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த நட்டக்கழிவு சோதனை தேவைப்படும்போது, கம்பனி சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகையை மதிப்பீடு செய்கிறது.

ஒரு சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகையானது, பயன்பாட்டில் உள்ள ஒரு சொத்தின் பெறுமதியை விட அதிகமாகும். மேலும் அதன் நியாயமான பெறுமதி விற்பனை கிரயம் கழிக்கப்பட்டு தனிப்பட்ட சொத்திற்குத் தீர்மானிக்கப்படுகிறது, ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக்களின் குழுவிலிருந்து பெரும்பாலும் சுயாதீனமான காசுப்பாய்ச்சல்களை சொத்து உருவாக்கவில்லை என்றால் தவிர ஒரு சொத்தின் கொண்டுசெல்லும் தொகை அதன் அறவிடப்படக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால், சொத்துக்கள் நட்டக்கழிவிடப்பட்டதாக கருதப்பட்டு, அதன் அறவிடப்படக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படும்.

பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு முந்தைய வரி கழிவு விகிதங்களைப் பயன்படுத்தி கழிவிடப்படுகின்றன, இது பணத்தின் நேர பெறுமதி மற்றும் சொத்துக்கான ஆபத்து ஆகியவற்றின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கிறது. நியாயமான மதிப்பை நிர்ணயிப்பதில் குறைந்த விலையில் விற்கப்படும், சமீபத்திய சந்தை கொடுக்கல்வாங்கல்கள் இருந்தால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அத்தகைய கொடுக்கல்வாங்கல்களை இனங்காண முடியாவிட்டால், பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகிறது.

தொடர்ச்சியான செயற்பாடுகளின் நட்டக்கழிவு நட்டக்கழிவிடப்பட்ட சொத்தின் செயற்பாட்டிற்கு இணங்க அந்த செலவின வகைகளில் விரிவான வருமான கூற்றில் இனங்காணப்படுகிறது. கடந்த நட்டக்கழிவு இனங்காணப்பட்டால் சொத்துகளின் அறவிடப்படக்கூடிய தொகையைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே முன்னைய இனங்காணப்பட்ட நட்டக்கழிவு மாற்றியமைக்கப்படும். அப்படியானால், சொத்தின் கொண்டுசெல்லும் தொகை அதன் அறவிடப்படக்கூடிய தொகை வரை அதிகரிக்கப்படுகிறது. முன்னைய ஆண்டுகளில் சொத்துக்கான நட்டக்கழிவு எதுவும் இனங்காணப்படாவிட்டால், பெறுமானத்தேய்வின் தேறியது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கொண்டுசெல்லும் தொகையை அந்த அதிகரித்த தொகையானது “விஞ்ச” முடியாது. இத்தகைய தலைகீழ் மாற்றம் விரிவான வருமான கூற்றில் இனங்காணப்படுகிறது.

### 3.1.2 உயிரியல் சொத்துக்கள்

உயிரியல் சொத்துக்கள் முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் மற்றும் முதிர்ச்சியடையாத உயிரியல் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. முதிர்ந்த உயிரியல் சொத்துக்கள் என்பது அறுவடை செய்யக்கூடிய விவரக்குறிப்புகள் அல்லது வழக்கமான அறுவடைகளைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடியவையாகும். முதிர்ச்சியடையாத உயிரியல் சொத்துக்கள் இன்னும் அறுவடை செய்யக்கூடிய விவரக்குறிப்புகளை அடையவில்லை.

உயிரியல் சொத்துக்கள் மேலும் பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள் மற்றும் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. பயன்பாட்டு உயிரியல் சொத்துக்களில் தென்னை மற்றும் இறப்பர் மரங்கள் உள்ளடங்குகின்றன. அவை விற்பனை செய்யப்படவோ அல்லது அறுவடை செய்யவோ திட்டமிடப்படவில்லை, ஆனால் அத்தகைய உயிரியல் சொத்துக்களிலிருந்து விவசாய விளைபொருட்களை அறுவடை செய்வதற்காக வளர்க்கப்படுகின்றன. நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள், தேக்கு, மஹோகனி, ஹல்மில்லா, மில்லா போன்ற வணிக அயல்நாட்டு மர வகைகளைக் கொண்ட தோட்டங்களில் திட்டமிடப்படாத காடுகளை உள்ளடக்ககுகிறது.

#### 3.1.2.1 பயன்பாட்டு தாவரங்கள்

ஊயுளுடு வழங்கிய தீர்ப்பின்படி, LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பிரகாரம் பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள், ஏதேனும் இருந்தால், கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் நட்டக்கழிவுகள் கழிக்கப்பட்டு அளவிடப்படுகிறது.

நிலம் தயாரித்தல், மறுசீரமைப்பு, புதிய நடுகை, மீள்நடுகை, பயிர் பல்வகைப்படுத்தல், இடை நடுகை, உரமிடுதல் போன்றவற்றுக்கு, வணிக அறுவடை வரை ஏற்படும் கிரயம் முதிர்ச்சியடையாத பேருந்தாட்டங்கள்∴ முதிர்ச்சியடையாத உயிரியல் சொத்துக்கள்ாக வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றிற்கு பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படுவதில்லை. இந்த முதிர்ச்சியடையாத தோட்டங்கள் முதிர்ச்சியடையாத தோட்டங்களுக்கு நிதியளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நீண்ட கால கடன்களுக்கான வட்டி உட்பட, நேரடி கிரயங்களுடன் பங்களிக்க்கூடிய மேந்தலைக் கிரயங்களை சேர்த்து காட்டப்படுகின்றன.

ஆண்டின் போது பயன்பாட்டிற்கு வருகின்ற முதிர்ச்சியடையாத தோட்டங்கள் தொடர்பாக செலவிடப்பட்ட செலவினம், ஆண்டின் இறுதியில் முதிர்ந்த தோட்டங்களுக்கு மாற்றப்பட்டு, அவற்றின் பயன்தரு ஆயுட்காலங்களில் பின்வருமாறு பெறுமானத்தேய்விடப்படுகிறது.

| சொத்து | முதிஉச்சி காலம் (ஆண்டுகள்) | | பொருளாதார |
|---|---|---|---|
| வகை | தனியான பயிஉ ஆயுட்காலம் (பயிஉ) (ஆண்டுகள்) | | இடைப் பயிஉ |
| தெங்கு | 10 | இல்லை | 50 |
| இறப்பர் | 06 | இல்லை | 20 |
| முந்திரிகை | 06 | 08 | 20 |
| இலவங்கப்பட்டை | 06 | 06 | 20 |
| டிராகன் பழம் | 03 | 04 | 20 |
| கொக்கோ | 05 | 06 | 20 |
| தேசி | 05 | 06 | 20 |
| மாம்பழம் | 06 | 08 | 20 |
| மிளகு | 06 | 07 | 20 |
| றம்புட்டான் | 06 | 08 | 20 |
| கோப்பி | 07 | 08 | 20 |
| அரிக்காநட் | 08 | 10 | 20 |
| அவகோடோ | 08 | 10 | 20 |
| துரியன் | 08 | 10 | 20 |
| கொய்யா | 04 | 06 | 06 |

பயன்பாட்டு உயிரியல் சொத்துக்களுக்கான நிரந்தர நட்டக்கழிவுகள் முழுமையாக விரிவான வருமானக் கூற்றிற்கு அறவிடப்படுகிறதுடன் இழப்பை உறுதிசெய்த பின்னர் ஏற்படும் ஆண்டில் அத்தகைய சொத்துக்களின் தேறிய கொண்டு செல்லும் தொகைகளில் இருந்து குறைக்கப்படும்.

மரங்களை அப்புறப்படுத்துதல் FIFO அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

**3.1.2.2 பயன்பாட்டு தாவரங்களில் நிரப்புதல் கிரயம**

முன்னர் மதிப்பிடப்பட்ட செயற்திறன் மற்றும் நிரப்புதல் கிரயங்களிற்கு அப்பால் சம்பந்தப்பட்ட துறையின் பொருளாதார ஆயுட்கால அதிகரிப்பை விளைவிக்கும் போது, நிரப்புதல் வடிவத்தில் ஏற்படும் காணி அபிவிருத்தி கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன, முதிர்ந்த தோட்டத்தின் புதிதாக மதிப்பிடப்பட்ட மீதமுள்ள பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் அல்லது காலாவதியாகாத குத்தகைக் காலம் இதில் குறைவாக உள்ளதற்கு அவ்வாறு மூலதனமாக்கப்படும் நிரப்புதல் கிரயங்கள் பெறுமானத்தேய்விடப்படுகின்றன.

மூலதனமாக்கப்படாத நிரப்புதல் கிரயங்கள் அவை ஏற்பட்ட ஆண்டில் விரிவான வருமான கூற்றிற்கு அறவிடப்படுகின்றன.

**3.1.2.3 நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்**

நுகரத்தக்க பலகை மரங்கள் ஆரம்ப இனங்காணலின் அடிப்படையில் அளவிடப்படுகின்றன, மேலும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் அதன் நியாயமான பெறுமதியில் LKAS 41 இன் பிரகாரம் விற்பனை செய்யப்படுகிறது. இந்த காலப்பகுதியில் தாவரங்களின் விலைக்கு உயிரியல் மாற்றத்தில் ஏற்படும் தாக்கம் முக்கியமற்றது என்பதால் இந்த கிரயமானது இளம் தாவரங்களின் நியாயமான பெறுமதியின் அண்ணளவாக கருதப்படுகிறது. பலகை மரங்களின் நியாயமான பெறுமதி நுஊகு முறையைப் பயன்படுத்தி மரத்தின் தற்போதைய சந்தை விலைகளைக் கருத்தில் கொண்டு அளவிடப்படுகிறது, இது ஒரு சுயாதீனமான தொழில்முறை மதிப்பீட்டாளரால் முதிர்ச்சியடைந்த மரத்தின் எதிர்பார்க்கப்படும் மர உள்ளடக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனைக் கிரயத்தை கழித்து இனங்காண்பதன் மூலம் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றத்திலிருந்து நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை விற்பதற்கான கிரயத்ததை கழித்து அது இடம்பெறும் காலப்பகுதிக்கான விரிவான வருமான கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பு 14 இல் ஏனைய எடுகோள்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளன.

DCF மாதிரி எண்ணக்கருவில் முக்கிய மாறிகள்

| மாறி | கருத்துரை |
|---|---|
| ------ | ------------- |
| நாணய மதிப்பீடு | ரூபா. |
| மர உள்ளடக்கம் | சுற்றளவு, உயரம் ஆகியவற்றின் அடிப்படையில் பௌதீக சரிபார்ப்பு மற்றும் வெவ்வேறு புவியியல் பகுதிகளில் ஒவ்வொரு இனத்தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு மதிப்பீடு.<br>மரங்களை அறுவடை செய்வதற்கு நடைமுறையில் உள்ள அனைத்து சட்ட விதிமுறைகளையும் கம்பனியின் வனவியல் திட்டத்துடன் இணைத்தல். |
| பொருளாதார பயன்தரு ஆயுட்காலம | கம்பனியின் வனவியல் திட்டத்தை காரணியாக்குவதன் மூலம் ஒவ்வொரு சந்தைப் பொருட்களின் இயல்பான ஆயுட்காலத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. |
| விற்பனை விலை | இலங்கை சந்தை விலையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. மரங்களை விற்பனை செய்யக்கூடிய நிலைக்கு கொண்டு வருவதற்கு அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் |
| கழிவு விகிதம் | எதிர்கால காசுப்பாய்ச்சல்கள் பின்வரும் கழிவு விகிதங்களில் கழிவிடப்படுகின்றன: பலகை மரங்கள் 14% |

**3.1.2.4 இனங்காணல் மற்றும் அளவீடு**

ஒரு கடந்த நிகழ்வின் விளைவாக சொத்துக்களை நிறுவனம் கட்டுப்படுத்தும் போதும் அதன் போது மாத்திரமே உயிரியல் சொத்துக்களை அந்த நிறுவனம் இனங்காணுகிறது. சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்திற்குப் பாயும். சொத்துகளின் நியாயமான பெறுமதி அல்லது கிரயம் நம்பகத்தன்மையுடன் அளவிடப்பட முடியும்.

ஊயுளுடு வழங்கிய தீர்ப்பின்படி, LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அடிப்படையில், பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள், ஏதேனும் இருந்தால், கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட நட்டக்கழிவு இழப்புக்களில் அளவிடப்படுகிறது.

நுகரத்தக்க பலகை மரங்கள் ஆரம்ப இனங்காணலின் அடிப்படையில் அளவிடப்படுகிறதுடன் ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் LKAS 41 இன் பிரகாரம் அதன் நியாயமான பெறுமதியிலிருந்து கிரயம் கழிக்கப்படுகிறது. இந்த காலப்பகுதியில் விலைக்கு அத்தகைய தாவரங்களின் உயிரியல் மாற்றத்தின் மீதான தாக்கம் முக்கியமற்றது என்பதால் கிரயமானது இளம் தாவரங்களின் (5 ஆண்டு வயதுக்குக் குறைவான) நியாயமான பெறுமதியின் அண்ணளவாகக் கருதப்படுகிறது.

**3.1.2.5 பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள் தொடஉபான உற்பத்தி வளஉச்சி**

LKAS 41 இற்கு இணங்க, கம்பனி பயன்பாட்டு தாவரங்கள் தொடர்பாக வளரும் விவசாய விளைபொருட்களை நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனை கிரயத்தை கழித்து இனங்காணுகிறது. ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் அத்தகைய விவசாயப் பொருட்களின் நியாயமான பெறுமதியில் மாற்றம் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டது.

இந்த நோக்கத்திற்காக, அறுவடை செய்யக்கூடிய விவசாய விளைபொருட்களின் அளவு ஒவ்வொரு பயிர் வகையின் அறுவடை சுழற்சியின் அடிப்படையில் உடனடியாக முந்தைய சுழற்சியில் அறுவடையின் கடைசி நாளின் அடிப்படையில் ஒரு அறுவடை சுழற்சிக்கு வரம்பிடப்படுகிறது. மேலும், அந்த அறுவடை சுழற்சியில் 50மூ பயிரானது மதிப்பீட்டிற்குக் கருதப்படுகிறது.

அறுவடை செய்யக்கூடிய விவசாய விளைபொருட்களின் மதிப்பீட்டிற்கு, கம்பனி பின்வரும் விலை சூத்திரங்களைப் பயன்படுத்துகிறது.

இறப்பர் - லேடெக்ஸ் விலையிலிருந்து (தற்போதைய RSS1 விலையில் 95%) கழி

வடித்தல் மற்றும் போக்குவரத்து கிரயம்

தேங்காய் - தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் ஏல விலையிலிருந்து கழி

பிடுங்கி போக்குவரத்துசெய்வதற்கான கிரயம்

**3.1.3 நிதிக் கருவிகள்**

**(அ) இனங்காணல் மற்றும் ஆரம்ப அளவீடு**

வியாபார பெறவேண்டியவைகள் ஆரம்பத்தில் அவை தோற்றுவிக்கப்படும்போது இனங்காணப்படுகின்றன. மற்ற அனைத்து நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள், கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு கம்பனி ஒரு கட்சியாக மாறும் போது ஆரம்பத்தில் இனங்காணப்படுகிறது.

ஒரு நிதிச் சொத்து (குறிப்பிடத்தக்க நிதியுதவி கூறு இல்லாமல் வியாபார பெறவேண்டியதாக இல்லாவிட்டால்) அல்லது நிதிப் பொறுப்பு ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியுடன் FVTPL இல் இல்லாத ஒரு உருப்படிக்காக, அதன் கையகப்படுத்தல் அல்லது வழங்கலிற்கு நேரடியாகக் காரணமான கொடுக்கல் வாங்கல் கிரயங்கள். சேர்க்கப்பட்டு அளவிடப்படுகிறது, குறிப்பிடத்தக்க நிதியுதவி கூறு இல்லாமல் வியாபார பெறவேண்டியவை ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகிறது.

**(ஆ) வகைப்படுத்தல் மற்றும் அடுத்தடுத்த அளவீடு**

நிதி சொத்துக்கள் - 2018 சனவரி 1 முதல் பொருந்தும் கொள்கை

ஆரம்ப இனங்காணலில், ஒரு நிதிச் சொத்து பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது: காலக்கழிவிடப்பட்ட கிரயம் FVOCI - கடன் முதலீடு FVOCI - பங்கு முதலீடு அல்லது FVTPL.

நிதிச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான அதன் வணிக மாதிரியை கம்பனி மாற்றாத வரையில், நிதிச் சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப இனங்காணலிற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாது, இதில் பாதிக்கப்பட்ட அனைத்து நிதிச் சொத்துக்களும் வணிக மாதிரியில் மாற்றத்தைத் தொடர்ந்து முதல் அறிக்கையிடல் காலத்தின் முதல் நாளில் மீள்வகைப்படுத்தப்படுகிறது.

ஒரு நிதிச் சொத்து பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து FVTPL இல் உள்ளவாறு குறிப்பிடப்படவில்லை எனில், காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகிறது:

- இது ஒரு வணிக மாதிரிக்குள் நடாத்தப்படுகிறது, அதன் நோக்கம் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்கு சொத்துக்களை வைத்திருப்பது மற்றும்
- அதன் ஒப்பந்த விதிமுறைகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கும், அவை அசல் மற்றும் அசல் நிலுவைத் தொகைக்கான வட்டி மாத்திரமேயாகும்.

கடன் முதலீடு FVOCI இல் அளவிடப்படும், அது பின்வரும் இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து FVTPL இல் உள்ளவாறு குறிப்பிடப்படவில்லை என்றால்:

- இது ஒரு வணிக மாதிரிக்குள் நடத்தப்படுகிறது, இதன் நோக்கம் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பது மற்றும் நிதி சொத்துக்களை விற்பது ஆகிய இரண்டின் மூலமும் அடையப்படுகிறது மற்றும்
- அதன் ஒப்பந்த விதிமுறைகள் குறிப்பிட்ட திகதிகளில் காசுப்பாய்ச்சல்களுக்கு வழிவகுக்கும், அவை அசல் மற்றும் அசல் தொகைக்கான வட்டியை மாத்திரமே செலுத்துகின்றன.

வர்த்தகத்திற்காக வைத்திருக்காத ஒரு பங்கு முதலீட்டின் ஆரம்ப இனங்காணலில், OCI இல் முதலீட்டின் நியாயமான பெறுமதியில் அடுத்தடுத்த மாற்றங்களை முன்வைப்பதற்கு கம்பனி திரும்பப்பெறமுடியாமல் தேர்ந்தெடுக்கலாம். இந்தத் தெரிவு முதலீட்டு அடிப்படையில் நடாத்தப்படுகிறது.

அனைத்து நிதிச் சொத்துக்களும் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு காலக்கழிவிடப்பட்ட கிரயம் அல்லது FVOCI என வகைப்படுத்தப்படாதவை FVTPL இல் அளவிடப்படுகின்றன. இதில் அனைத்து வழித்தோன்றல் நிதி சொத்துகளும் உள்ளடங்குகிறது. ஆரம்ப இனங்காணலின் பேரில், கம்பனி ஒரு நிதிச் சொத்தை மாற்றமுடியாமல் குறிப்பிடலாம். இல்லையெனில் FVTPL இல் உள்ளவாறு FVOCI இல் அல்லது காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிட வேண்டிய தேவைகளை பூர்த்தி செய்கிறது. அவ்வாறு செய்வது கணக்கீட்டு பொருத்தமின்மையை நீக்குகிறது அல்லது கணிசமாகக் குறைக்கிறது.

**நிதி சொத்துக்கள் - வணிக மாதிரி மதிப்பீடு:**

ஒரு போர்ட்போலியோ அளவில் நிதிச் சொத்தை வைத்திருக்கும் வணிக மாதிரியின் நோக்கத்தை கம்பனி மதிப்பீடு செய்கிறது, ஏனெனில் இது வணிகம் நிர்வகிக்கப்படும் விதத்தை பிரதிபலிப்பதுடன் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்கப்படுகிறது. கருத்தில் கொள்ளப்பட்ட தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- போர்ட்போலியோவிற்குக் கூறப்பட்ட கொள்கைகள் மற்றும் நோக்கங்கள் மற்றும் நடைமுறையில் அந்தக் கொள்கைகளின் செயற்பாடு. முகாமைத்துவத்தின் மூலோபாயம் ஒப்பந்த வட்டி வருமானத்தை ஈட்டுவதில் கவனம் செலுத்துகிறதா, ஒரு குறிப்பிட்ட வட்டி விகித விவரத்தை பராமரித்தல், நிதிச் சொத்துகளின் கால அளவை தொடர்புடைய பொறுப்புக்கள் அல்லது எதிர்பார்க்கப்படும் காசுவெளிப்பாய்ச்சல்கள் அல்லது சொத்துக்களின் விற்பனையின் மூலம் தேறும் காசுப்பாய்ச்சல்கள் ஆகியவை உள்ளடங்குகிறது.
- போர்ட்போலியோவின் செயற்திறன் எவ்வாறு மதிப்பிடப்பட்டு கம்பனியின் முகாமைத்துவத்திற்கு தெரிவிக்கப்படுகிறது.
- வணிக மாதிரியின் செயல்திறனைப் பாதிக்கும் அபாயங்கள் (மற்றும் அந்த வணிக மாதிரிக்குள் இருக்கும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் அந்த அபாயங்கள் எவ்வாறு முகாமை செய்யப்படுகின்றன.
- வணிகத்தின் முகாமையாளர்கள் எவ்வாறு ஈடுசெய்யப்படுகிறார்கள் - எ.கா., நிர்வகிக்கப்படும் சொத்துகளின் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படுகிறதா அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்தப் காசுப்பாய்ச்சல்கள் மற்றும்
- முன்னைய காலங்களில் நிதிச் சொத்துக்களின் விற்பனையின் அதிர்வெண், அளவு மற்றும் நேரம், அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை செயற்பாடு குறித்த எதிர்பார்ப்புகள்.

அங்கீகாரம் பெறத் தகுதி பெறாத கொடுக்கல்வாங்கல்களில் நிதிச் சொத்துக்களை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றுவது, இந்த நோக்கத்திற்காக விற்பனையாகக் கருதப்படாது, இது நிறுவனத்தின் சொத்துக்களின் தொடர்ச்சியான இனங்காணலுடன் ஒத்துப்போகிறது. வர்த்தகத்திற்காக வைத்திருக்கும் அல்லது நிர்வகிக்கப்படும் மற்றும் அதன் செயற்திறன் நியாயமான பெறுமதி அடிப்படையில் மதிப்பிடப்படும் நிதி சொத்துக்கள் FVTPL இல் அளவிடப்படுகின்றன.

**நிதிச் சொத்துக்கள் - ஒப்பந்த காசுப்பாய்ச்சல்கள் அசல் மற்றும் வட்டிக்கு மாத்திரமே செலுத்தப்படுகிறதா என்பதை மதிப்பீடு செய்தல்: கொள்கை 2018 சனவரி 1 முதல் பொருந்தும்**

இந்த மதிப்பீட்டின் நோக்கங்களுக்காக, “அசல்“ என்பது ஆரம்ப இனங்காணல் மீதான நிதிச் சொத்தின் நியாயமான பெறுமதியாக வரையறுக்கப்படுகிறது. “வட்டி“ என்பது பணத்தின் நேர மதிப்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலுவையாக உள்ள அசல் தொகையுடன் தொடர்புடைய கடன் ஆபத்து மற்றும் ஏனைய அடிப்படை கடன்வழங்கல் அபாயங்கள் மற்றும் கிரயங்கள் (எ.கா. திரவத்தன்மை ஆபத்து மற்றும் நிர்வாக கிரயங்கள்), அத்துடன் ஒரு இலாப வரம்பு. ஒப்பந்தப் காசுப்பாய்ச்சல்கள் அசல் மற்றும் வட்டிக்கான கொடுப்பனவுகளா என்பதை மதிப்பிடுவதில், கம்பனி கருவியின் ஒப்பந்த விதிமுறைகளைக் கருத்தில் கொள்கிறது. நிதிச் சொத்தில் ஒப்பந்த கால அளவு உள்ளதா என்பதை மதிப்பிடுவது இதில் உள்ளடங்குகிறது, அது இந்த நிபந்தனையை பூர்த்தி செய்யாத வகையில் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களின் நேரத்தை அல்லது அளவை மாற்றலாம்.

இந்த மதிப்பீட்டைச் செய்வதில், கம்பனி பின்வருவனவற்றை கருத்தில் கொள்கிறது:

- காசுப்பாய்ச்சல்களின் அளவு அல்லது நேரத்தை மாற்றும் தற்செயல் நிகழ்வுகள்
- மாறக்கூடிய-விகித அம்சங்கள் உட்பட ஒப்பந்த கூப்பன் விகிதத்தை சரிசெய்யக்கூடிய விதிமுறைகள்
- முன்கூட்டியே செலுத்துதல் மற்றும் நீடிப்பு அம்சங்கள் மற்றும்
- குறிப்பிட்ட சொத்துக்களிலிருந்து (எ.கா., திரும்பப் பெறாத அம்சங்கள்) காசுப்பாய்ச்சல்களுக்கான கம்பனியின் உரிமைகோரலைக் கட்டுப்படுத்தும் விதிமுறைகள்.

முன்கொடுப்பனவு அம்சமானது அசல் மற்றும் வட்டி அளவுகோல்களை மாத்திரமே செலுத்துவதுடன் ஒத்துப்போகும், முற்கொடுப்பனவு தொகையானது அசல் மற்றும் அசல் தொகையின் மீதான வட்டியை கணிசமாகக் குறிக்கிறது, இதில் ஒப்பந்தத்தை முன்கூட்டியே முடிவுறுத்துவதற்கான நியாயமான மேலதிக இழப்பீடு உள்ளடங்குகிறது. மேலும் ஒரு நிதிச் சொத்துக்கு, அதன் ஒப்பந்தத் தொகைக்கு கழிவு அல்லது கட்டுப்பணத்தில் பெறப்பட்ட ஒரு அம்சம், ஒப்பந்தத் தொகையுடன் அட்டுறு (ஆனால் செலுத்தப்படாத) ஒப்பந்த வட்டியை (முன்கூட்டிய முடிவுறுத்தலிற்காக நியாயமான மேலதிக இழப்பீட்டையும் உள்ளடக்கக்கூடும்) கணிசமாகக் குறிக்கும் ஒரு தொகையில் முற்கொடுப்பனவை அனுமதிக்கும் அல்லது தேவைப்படும் அம்சம். ஆரம்ப இனங்காணலில் முற்கொடுப்பனவு அம்சத்தின் நியாயமான பெறுமதி சிறியதாக இருந்தால், இந்த அளவுகோலுக்கு இசைவாகக் கருதப்படுகிறது.

**நிதிச் சொத்துக்கள் - அடுத்தடுத்த அளவீடுகள் மற்றும் ஆதாயங்கள் மற்றும் இழப்புகள்: கொள்கை 2018 சனவரி 1 முதல் பொருந்தும்**

**FVTPL இல் உள்ள நிதி சொத்துக்கள்**

இந்த சொத்துக்கள் பின்னர் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. வட்டி அல்லது பங்கிலாப வருமானம் உட்பட தேறிய ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் நிதி சொத்துக்கள்

இந்த சொத்துக்கள் பின்னர் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன. நட்டக்கழிவு இழப்புகளால் காலக்கழிவிடப்பட்ட கிரயம் குறைக்கப்படுகிறது. வட்டி வருமானம், அந்நிய செலாவணி ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் மற்றும் நட்டக்கழிவு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. இனங்காணப்படாததால்

ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகிறது.

**FVOCI இல் கடன் முதலீடுகள்**

இந்த சொத்துக்கள் பின்னர் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படும் வட்டி வருமானம், அந்நியச் செலாவணி ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் மற்றும் நட்டக்கழிவு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. ஏனைய தேறிய இலாபங்கள் மற்றும் நட்டங்கள் OCI இல் இனங்காணப்படுகின்றன. இனங்காணப்படாதமை தொடர்பாக OCI இல் திரட்டப்பட்ட ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் இலாபம் அல்லது நட்டம் என மீளவகைப்படுத்தப்படுகின்றன.

**FVOCI இல் பங்கு முதலீடுகள்**

இந்த சொத்துக்கள் பின்னர் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன. பங்கிலாபமானது முதலீட்டுச் செலவின் ஒரு பகுதியை அறவிடுவதைத் தெளிவாகக் குறிக்கும் வரை, பங்கிலாபம் இலாபம் அல்லது நட்டத்தில் வருமானமாக இனங்காணப்படும். ஏனைய தேறிய ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் OCI இல் இனங்காணப்படுகின்றன, மேலும் அவை ஒருபோதும் இலாபம் அல்லது நட்டம் என மீளவகைப்படுத்தப்படுவதில்லை.

நிதிச் சொத்துக்கள் - 2018 சனவரி 1 இற்கு முன்னர் பொருந்தக்கூடிய கொள்கை, கம்பனி அதன் நிதிச் சொத்துக்களை பின்வரும் வகைகளில் ஒன்றாக வகைப்படுத்தியது:

- கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்
- முதிர்ச்சி அடையும்
- விற்பனைக்கு கிடைக்கும் மற்றும்
- FVTPL இல், மற்றும் இந்த வகைக்குள்:
  - வர்த்தகத்திற்காக நடாத்தப்பட்டது
  - வழித்தோன்றல் ஹெட்ஜிங் கருவிகள் அல்லது
  - குஏவீடு இல் நியமிக்கப்பட்டது

**நிதிச் சொத்துக்கள் - அடுத்தடுத்த அளவீடுகள் மற்றும் ஆதாயங்கள் மற்றும் இழப்புகள்: 2018 சனவரி 1 இற்கு முன்னஉ பொருந்தும் கொள்கை**

**FVTPL இல் உள்ள நிதி சொத்துக்கள்**

நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு, அதில் ஏதேனும் வட்டி அல்லது பங்கிலாப வருமானம் உட்பட மாற்றங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டன.

**முதிர்வு வரை வைத்திருக்கும் நிதி சொத்துக்கள்**

செயற்திறனான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டது.

**கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள்**

செயற்திறனான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டது.

**விற்பனைக்குக் கிடைக்கும் நிதிச் சொத்துக்கள்**

நட்டக்கழிவு இழப்புக்கள், வட்டி வருமானம் மற்றும் கடன் கருவிகள் மீதான வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் தவிர, நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டு அதில் ஏற்படும் மாற்றங்கள் OCI இல் இனங்காணப்பட்டு நியாயமான பெறுமதி ஒதுக்கத்தில் திரட்டப்பட்டது. இந்த சொத்துக்கள் இனங்காணப்படாத போது, மூலதனத்தில் திரட்டப்பட்ட ஆதாயம் அல்லது இழப்பு இலாபம் அல்லது நட்டம் என மீளவகைப்படுத்தப்பட்டது.

**நிதிப் பொறுப்புக்கள் - வகைப்படுத்தல், அடுத்தடுத்த அளவீடுகள் மற்றும் ஆதாயங்கள் மற்றும் இழப்புகள்**

நிதிப் பொறுப்புகள், காலக்கழிவிடப்பட்ட கிரயம் அல்லது FVTPL என வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு நிதிப் பொறுப்பு FVTPL என வகைப்படுத்தப்படுகிறது, அது வர்த்தகத்திற்காக இடம்பெற்றதாக வகைப்படுத்தப்பட்டால், அது ஒரு வழித்தோன்றல் அல்லது ஆரம்ப இனங்காணலின் அடிப்படையில் அது நியமிக்கப்பட்டது. FVTPL இல் உள்ள நிதிப் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றதுடன் தேறிய ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள், வட்டிச் செலவினம் உட்பட, இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. ஏனைய நிதிப் பொறுப்புகள் பின்னர் பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வட்டி செலவினம் மற்றும் அந்நிய செலாவணி ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. இனங்காணப்படாததால் ஏற்படும் எந்த ஆதாயமும் அல்லது இழப்பும் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகிறது.

**(இ) இனங்காணப்படாமை**

**நிதிச் சொத்துக்கள்**

நிதிச் சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது கம்பனி நிதிச் சொத்தை இனங்காண்பதில்லை அல்லது நிதிச் சொத்தின் உரிமையின் அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தும் கணிசமாக மாற்றப்படும் ஒரு கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்தப் காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகளை இது மாற்றுகிறது. இல்லது அதில் கம்பனி உரிமையின் அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமாக மாற்றாது அல்லது தக்க வைத்துக் கொள்வதில்லை மற்றும் நிதிச் சொத்தின் கட்டுப்பாட்டை அது தக்கவைத்துக்கொள்வதில்லை.

கம்பனி கொடுக்கல்வாங்கல்களில் நுழைகிறது, அதன் மூலம் அதன் நிதி நிலைமை கூற்றில் இனங்காணப்பட்ட சொத்துக்களை மாற்றுகிறது, ஆனால் மாற்றப்பட்ட சொத்துகளின் அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் அல்லது கணிசமாகத் தக்க வைத்துக் கொள்கிறது. இந்த சந்தர்ப்பங்களில், மாற்றப்பட்ட சொத்துக்கள் இனங்காணப்படாது.

**நிதி பொறுப்புகள்**

கம்பனி அதன் ஒப்பந்தக் கடப்பாடுகள் வெளியேற்றப்படும் போது அல்லது இரத்து செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது நிதிப் பொறுப்பை இனங்காண்பதில்லை. அதன் விதிமுறைகள் மாற்றியமைக்கப்படுவதுடன் மாற்றியமைக்கப்பட்ட பொறுப்பின் காசுப்பாய்ச்சல்கள் கணிசமாக வேறுபடும் போது, கம்பனி ஒரு நிதிப் பொறுப்பை இனங்காணுகிறது.

நிதிப் பொறுப்பை இனங்காணாமல், நீக்கப்பட்ட கொண்டுசெல்லும் தொகைக்கும் செலுத்தப்பட்ட பரிசீலனைக்கும் இடையே உள்ள வேறுபாடு (ஏதேனும் மாற்றப்பட்ட பணமற்ற சொத்துக்கள் அல்லது கருதப்பட்ட பொறுப்புக்கள் உட்பட) இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

**எதிரீடு செய்தல்**

நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புகள் ஈடுசெய்யப்படுகின்றதுடன் நிதி நிலைமை கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட தேறிய தொகையானது, அந்தத் தொகைகளை ஈடுசெய்வதற்கு சட்டப்பூர்வமாக அமலாக்கக்கூடிய உரிமையை கம்பனி பெற்றிருக்கும் போது மாத்திரமே, அவற்றை தேறிய அடிப்படையில் தீர்க்கிறது அல்லது சொத்தை காசாக்கி பொறுப்புகளை ஒரே நேரத்தில் தீர்க்கிறது.

**நட்டக்கழிவு கொள்கை: 2018 சனவரி 1 இல் இருந்து பயன்படுத்தப்படும் வழித்தோன்றல்லாத நிதிச்சொத்துக்கள்**

**நிதி கருவிகள் மற்றும் ஒப்பந்த சொத்துக்கள்**

வியாபார பெறவேண்டியவைகளுக்கான இழப்பு கொடுப்பனவுகள் எப்போதும் வாழ்நாள் முழுவதும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பிற்கு (ECL) சமமான தொகையில் அளவிடப்படுகிறது.

ஆரம்ப இனங்காணலிலிருந்து நிதிச் சொத்தின் கடன் ஆபத்து கணிசமாக அதிகரித்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் போது மற்றும் ECLs ஐ மதிப்பிடும் போது, கம்பனி நியாயமான மற்றும் ஆதரவான தகவலைக் கருத்தில் கொள்கிறது. இதில், கம்பனியின் வரலாற்று அனுபவம் மற்றும் தகவலறிந்த கடன் மதிப்பீடு மற்றும் முன்னோக்கிய தகவல் உட்பட, அளவு மற்றும் தரமான தகவல் மற்றும் பகுப்பாய்வு ஆகியவை உள்ளடங்குகின்றன.

ஒரு நிதிச் சொத்தின் மீதான கடன் அபாயம் 365 நாட்களுக்கு மேல் இருந்தால், அதன் மீதான கடன் ஆபத்து கணிசமாக அதிகரித்துள்ளது என்று கம்பனி கருதுகிறது.

ஒரு நிதிச் சொத்தை பின்வரும் சந்தர்ப்பங்களில் தவணைகடந்துள்ளதாக கம்பனி கருதுகிறது:

- கடனாளி தனது கடன் கடப்பாடுகளை கம்பனிக்கு முழுமையாகச் செலுத்த வாய்ப்பில்லை, கம்பனியால் பிணையை காசாக்குதல் போன்ற செயற்பாடுகளுக்கு (ஏதேனும் இருந்தால்) அல்லது
- நிதிச் சொத்து 180 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ளது.

ஆயுட்காலம் ECLs என்பது ஒரு நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்படும் ஆயுளில் சாத்தியமான அனைத்து தவணைகடந்த நிகழ்வுகளின் விளைவான நுஊடுள ஆகும்.

12-மாத ECLs ஆனது ECLs இன் பகுதியாகும், அவை அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் 12 மாதங்களுக்குள் சாத்தியமாகும் தவணைகடந்த நிகழ்வுகளின் விளைவாகும் (அல்லது கருவியின் எதிர்பார்க்கப்படும் ஆயுள் 12 மாதங்களுக்கும் குறைவாக இருந்தால் குறுகிய காலம்).

ECLs ஐ மதிப்பிடும் போது கருதப்படும் அதிகபட்ச காலம், கம்பனி கடன் அபாயத்திற்கு வெளிப்படும் அதிகபட்ச ஒப்பந்த காலப்பகுதியாகும்.

**ECLs இன் அளவீடு**

ECLs என்பது கடன் இழப்புகளின் நிகழ்தகவு-நிறையிடப்பட்ட மதிப்பீடாகும். கடன் இழப்புக்கள் அனைத்து பணப் பற்றாக்குறையின் தற்போதைய பெறுமதியாக அளவிடப்படுகிறது (அதாவது ஒப்பந்தத்தின் பிரகாரம் நிறுவனத்திற்கு கிடைக்கவேண்டிய காசுப்பாய்ச்சல்களிற்கும் கம்பனி பெற எதிர்பார்க்கும் காசுப்பாய்ச்சல்களுக்கும் இடையேயான வேறுபாடு).

நிதிச் சொத்தின் பயனுள்ள வட்டி விகிதத்தில் ECLs கழிவிடப்படுகின்றன.

**கடன் - நட்டக்கழிவிடப்பட்ட நிதி சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், FVOCI இல் உள்ள கடன் பிணைகள் மற்றும் காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் மேற்கொள்ளப்படும் நிதிச் சொத்துக்கள் கடன் நட்டக்கழிவிடப்பட்டுள்ளதா என்பதை கம்பனி மதிப்பிடுகிறது. நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் தீங்கான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் நிகழும்போது, நிதிச் சொத்து “கடன் நட்டக்கழிவிடப்பட்டது“ ஆகும்.

ஒரு நிதிச் சொத்து கடன் நட்டக்கழிவிடப்பட்டது என்பதற்கான சான்று பின்வரும் அவதானிக்கக்கூடிய தரவுகளை உள்ளடக்கியது:

- கடன் வாங்குபவர் அல்லது வழங்குபவரின் குறிப்பிடத்தக்க நிதி சிரமம்
- தவணைகடந்த அல்லது 180 நாட்களுக்கு மேல் கடந்த நிலுவை போன்ற ஒப்பந்தத்தை மீறுதல்
- கம்பனி வேறுவிதமாகக் கருதாத நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் அல்லது முற்பணத்தை மறுசீரமைத்தல்
- கடன் வாங்கியவர் திவால் அல்லது பிற நிதி மறுசீரமைப்பில் நுழைவது சாத்தியம் அல்லது
- நிதிச் சிக்கல்கள் காரணமாக ஒரு செயலில் உள்ள சந்தை காணாமல் போனது.

நிதி நிலைமை கூற்றில் ECL இற்கான கொடுப்பனவை வழங்குதல்

காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துகளுக்கான இழப்புக் கொடுப்பனவுகள் சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லும் தொகையிலிருந்து கழிக்கப்படுகிறது.

**பதிவழிப்பு**

ஒரு நிதிச் சொத்தை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ அறவிடுவதற்கான நியாயமான எதிர்பார்ப்புகள் கம்பனிக்கு இல்லாதபோது, நிதிச் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகை பதிவழிக்கப்படுகிறது. தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு, இதே போன்ற சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில் நிதிச் சொத்து 180 நாட்கள் கடந்திருக்கும் போது, மொத்த கொண்டுசெல்லும் தொகையை பதிவழிப்பு செய்யும் கொள்கையை கம்பனி கொண்டுள்ளது. நிறுவன வாடிக்கையாளர்களுக்கு, கம்பனி தனித்தனியாக மதிப்பீட்டைச் செய்கிறது, அது திரும்பப் பெறுவதற்கான நியாயமான எதிர்பார்ப்பு உள்ளதா என்பதன் அடிப்படையில் பதிவழிப்பு செய்யப்படும் நேரம் மற்றும் அளவு ஆகியவற்றைப் பொறுத்து. பதிவழிப்பு செய்யப்பட்ட

தொகையிலிருந்து குறிப்பிடத்தக்க மீட்சியை கம்பனி எதிர்பார்க்கவில்லை. எவ்வாறாயினும், பதிவழிப்பு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள், செலுத்த வேண்டிய தொகைகளை அறவிடுவதற்கான கம்பனியின் நடைமுறைகளுக்கு இணங்க, அமலாக்க நடவடிக்கைகளுக்கு உட்பட்டதாக இருக்கலாம்.

**நட்டக்கழிவு கொள்கை: 2018 சனவரி 1 இற்கு முன்னஉ பொருந்தும்**

**நிதி சொத்துக்கள் (பெறவேண்டியவைகள் உட்பட)**

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமதியில் எடுத்துச் செல்லப்படாத நிதிச் சொத்து, ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அது நட்டக்கழிவிடப்பட்டதற்கான புறநிலை ஆதாரம் உள்ளதா என்பதைத் தீர்மானிக்க மதிப்பிடப்படுகிறது. சொத்தின் ஆரம்ப இனங்காணலிற்குப் பின்னர் ஒரு இழப்பு நிகழ்வு நிகழ்ந்ததாக புறநிலைச் சான்றுகள் சுட்டிக்காட்டினால் நிதிச் சொத்து நட்டக்கழிவிடப்படுகிறது. மேலும் இழப்பு நிகழ்வு நம்பகத்தன்மையுடன் மதிப்பிடக்கூடிய அந்த சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியது.

நிதிச் சொத்துக்கள் (மூலதன பிணைகள் உட்பட) நட்டக்கழிவிடப்படுகின்றன என்பதற்கான புறநிலை சான்றுகள் கடன்பட்டோரின் தவணை கடந்தமை அல்லது கடன் தவறுதல், கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகையை மறுசீரமைத்தல், இல்லையெனில் கம்பனி கருத்தில் கொள்ளாது, கடன்பட்டோர் அல்லது வழங்குபவர் திவால்நிலையில் நுழைவார் என்பதற்கான அறிகுறிகள் அல்லது ஒரு பாதுகாப்புக்கான செயலில் உள்ள சந்தையின் மறைவு என்பவற்றை உள்ளடக்கலாம். மேலும் மூலதன பிணைகளில் முதலீடு செய்வதற்கு, அதன் கிரயத்திற்கு கீழான அதன் நியாயமான பெறுமதியில் குறிப்பிடத்தக்க அல்லது நீடித்த சரிவு நட்டக்கழிவின் புறநிலை சான்றாகும்.

ஒரு குறிப்பிட்ட சொத்து மற்றும் கூட்டு நிலை ஆகிய இரண்டிலும் பெறவேண்டியவைகளுக்கான நட்டக்கழிவிற்கான சான்றுகளை கம்பனி கருத்தில் கொள்கிறது. அனைத்து தனித்தனியாக குறிப்பிடத்தக்க பெறவேண்டியவைகள் குறிப்பிட்ட நட்டக்கழிவிற்காக மதிப்பிடப்படுகின்றன. தனித்தனியாக குறிப்பிடத்தக்க அனைத்து பெறவேண்டியவைகள் குறிப்பாக நட்டக்கழிவிடப்படவில்லை என்று கண்டறியப்பட்ட பின்னர், ஏற்பட்டுள்ள ஆனால் இன்னும் அடையாளம் காணப்படாத எந்தவொரு நட்டக்கழிவிற்கும் கூட்டாக மதிப்பிடப்படுகிறது. தனித்தனியாக முக்கியத்துவம் இல்லாத பெறவேண்டியவைகள், ஒரே மாதிரியான இடர் குணாதிசயங்களைக் கொண்ட பெறவேண்டியவைகளை ஒன்றிணைப்பதன் மூலம் நட்டக்கழிவிற்காக ஒட்டுமொத்தமாக மதிப்பிடப்படுகின்றன.

கூட்டு நட்டக்கழிவை மதிப்பிடுவதில், தற்போதைய பொருளாதார மற்றும் கடன் நிலைமைகள் வரலாற்றுப் போக்குகளால் பரிந்துரைக்கப்பட்டதை விட உண்மையான இழப்புகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உள்ளதா என முகாமைத்துவத்தின் தீர்ப்புக்காக சீர்செய்தல், தவணைகடத்தல் நிகழ்தகவு, அறவீட்டுக் காலம் மற்றும் ஏற்பட்ட இழப்பின் அளவு ஆகியவற்றின் வரலாற்றுப் போக்குகளைப் பயன்படுத்துகிறது.

ஒரு நிதிச் சொத்தைப் பொறுத்தமட்டில், காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்படும் நட்டக்கழிவு இழப்பு, அதன் கொண்டு செல்லும் தொகைக்கும், சொத்தின் அசல் பயனுள்ள வட்டி விகிதத்தில் கழிவிடப்படும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் உள்ள வித்தியாசமாக கணிப்பிடப்படுகிறது. இழப்புகள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டு, பெறவேண்டியவைகளுக்கு எதிராக படிக் கணக்கில் பிரதிபலிக்கின்றன. நட்டக்கழிவிடப்பட்ட சொத்தின் மீதான வட்டி கழிவின் மூலம் தொடர்ந்து இனங்காணப்படுகிறது. ஒரு அடுத்தடுத்த நிகழ்வு நட்டக்கழிவு இழப்பின் அளவைக் குறைக்கும் போது, நட்டக்கழிவு இழப்பு குறைவது இலாபம் அல்லது நட்டம் மூலம் மாற்றியமைக்கப்படுகிறது.

**நட்டக்கழிவு கொள்கை: நிதி அல்லாத சொத்துக்கள்**

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் தவிர, கம்பனியின் நிதி அல்லாத சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகைகள், ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் நட்டக்கழிவின் அறிகுறி உள்ளதா என்பதைத் தீர்மானிக்க மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய அறிகுறி ஏதேனும் இருந்தால், சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகை மதிப்பிடப்படும். காலவரையற்ற பயனுள்ள ஆயுளைக் கொண்ட அல்லது பயன்பாட்டிற்கு இன்னும் கிடைக்காத அருவ சொத்துக்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் ஒரே நேரத்தில் அறவிடப்படக்கூடிய தொகை மதிப்பிடப்படுகிறது.

ஒரு சொத்தின் அறவிடப்படக்கூடிய அளவு அதன் பயன்பாட்டில் உள்ள பெறுமதியை விட அதிகமாக உள்ளதுடன் அதன் நியாயமான பெறுமதியிலிருந்து விற்பனை கிரயம் கழிக்கப்படுகிறது. பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்கள், வரிக்கு முந்தைய கழிவு விகிதத்தைப் பயன்படுத்தி அவற்றின் தற்போதைய பெறுமதிபில் கழிவிடப்படுகிறது, இது பணத்தின் நேர மதிப்பு மற்றும் சொத்துக்கான குறிப்பிட்ட அபாயங்களின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கிறது. நட்டக்கழிவு சோதனையின் நோக்கத்திற்காக, தனித்தனியாகச் சோதிக்க முடியாத சொத்துக்கள், ஏனைய சொத்துக்களின் காசு உட்பாய்ச்சல்களிலிருந்து பெரும்பாலும் சுயாதீனமான தொடர்ச்சியான பயன்பாட்டிலிருந்து காசு உட்பாய்ச்சல்களை உருவாக்கும் சிறிய சொத்து தொகுதிக்கு ஒன்றாக தொகுக்கப்படுகின்றன.

ஒரு சொத்தின் கொண்டுசெல்லும் தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்படக்கூடிய தொகையை விட அதிகமாக இருந்தால் நட்டக்கழிவு இழப்பு இனங்காணப்படும். குறைபாடு இழப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

முன்னைய காலங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய சொத்துக்களைப் பொறுத்தமட்டில் ஒரு நட்டக்கழிவு இழப்பு, இழப்பு குறைந்துவிட்டதா அல்லது இனி இல்லை என்பதற்கான அறிகுறிகளுக்கு ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடப்படுகிறது. அறவிடப்படக்கூடிய தொகையைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட்டால், ஒரு நட்டக்கழிவு இழப்பு மாற்றியமைக்கப்படுகிறது. நட்டக்கழிவு இழப்பு இனங்காணப்படவில்லை எனில், சொத்தின் கொண்டுசெல்லும் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கும், பெறுமானத்தேய்வு அல்லது காலக்கழிவு தொகையை விட அதிகமாக இல்லாத அளவிற்கு மாத்திரமே மாற்றப்படும்.

**நிதி இடர் முகாமைத்துவம்**

**கடன் இடஉ**

கடன் இடர் என்பது ஒரு வாடிக்கையாளர் அல்லது நிதிக் கருவியின் எதிர் தரப்பினர் அதன் ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றத் தவறினால், மேலும் முக்கியமாக வாடிக்கையாளர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து கம்பனியின் பெறவேண்டியவைகளிலிருந்து எழும் போது கம்பனிக்கு நிதி இழப்பு ஏற்படும் அபாயமாகும்.

வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் மற்றும் முதலீடுகள் தொடர்பாக ஏற்படும் இழப்புகளின் மதிப்பீட்டைக் குறிக்கும் நட்கழிவிற்கான கொடுப்பனவை கம்பனி நிறுவுகிறது.

**திரவத்தன்மை இடஉ**

பணப்புழக்க இடர் என்பது கம்பனி அதனது நிதிப் பொறுப்புக்களுடன் தொடர்புடைய கடப்பாடுகளைச் சந்திப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும் அபாயம் ஆகும், அது பணம் அல்லது மற்றொரு நிதிச் சொத்தை வழங்குவதன் மூலம் தீர்க்கப்படுகிறது. திரவத்தன்மையை நிர்வகிப்பதற்கான கம்பனியின் அணுகுமுறையானது, ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புகளை ஏற்படுத்தாமல் அல்லது கம்பனியின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்காமல், இயல்பான மற்றும் அழுத்தமான நிலைமைகளின் கீழ், அதன் பொறுப்புகளைச் சந்திக்க போதுமான திரவத்தன்மையை எப்போதும் வைத்திருப்பதை உறுதி செய்வதாகும்.

**வட்டி விகித இடஉ**

சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் அபாயத்திற்கு கம்பனியின் வெளிப்பாடு முதன்மையாக கம்பனியின் நீண்ட கால கடன் பொறுப்புக்கள் மிதக்கும் வட்டி விகிதங்களுடன் தொடர்புடையதாகும். நிலையான மற்றும் மாறக்கூடிய விகிதக் கடன்கள் மற்றும் கடன்களின் சமநிலையான போர்ட்போலியோ மூலம் கம்பனி அதன் வட்டி விகித இடரை முகாமை செய்கிறது.

**3.1.4 சரக்குகள்**

**உயிரியல் சொத்துக்களிலிருந்து அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்தி**

அறுவடை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்கள், அறிக்கையிடப்பட்ட திகதிக்குப் பின்னர் விற்கப்படும் போது, விற்பனை ஒப்பந்தங்களில் உள்ள விற்பனை கிரயத்தின் தேறிய விலையில் மதிப்பிடப்படுகிறதுடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் நேரம் வரை விற்பனை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாதபோது சராசரியாக மதிப்பிடப்பட்ட தேறிய விற்பனை விலையில் மதிப்பிடப்படுகிறது.

தேங்காய்களைப் பொறுத்த வரையில், சந்தையில் நிச்சயமற்ற தன்மை நிலவும் போது, கொப்பரையாக மாற்றப்பட்ட பின்னர் தேறிய நிகரத்தக்க பெறுமதி மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**மேலதிக செயன்முறையின் பின்னஉ விவசாய உற்பத்தி**

காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் பொருட்களுக்கு உரிய கொடுப்பனவுகளைச் செய்த பின்னர் விவசாய உற்பத்தியின் மேலும் செயன்முறைப்படுத்தப்பட்ட வெளியீடு கிரயம் மற்றும் தேறக்கூடிய நிகர பெறுமதியில் குறைந்தில் மதிப்பிடப்படுகிறது. தேறிய நிகர பெறுமதி என்பது கையிருப்புக்களை சாதாரண வணிகப் போக்கில் விற்க கூடிய மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து பூர்த்தி செய்ய மதிப்பிடப்பட்ட கிரயம் மற்றும் விற்பனை செய்யத் தேவையான மதிப்பிடப்பட்ட கிரயம் என்பவற்றை கழித்து பெறப்படுகிறது.

**உள்ளீட்டுப் மூலப்பொருள், நுகர்பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள்**

உள்ளீட்டு மூலப்பொருட்கள், உதிரிபாகங்கள் மற்றும் நுகர்பொருட்களின் இருப்புக்கள் FIFO அடிப்படையில் உண்மையான கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன.

**வளரும் பயிர் நாற்றுக்கள்**

நாற்று கிரயத்தில் நேரடி மூலப் பொருட்களின் கிரயம், நேரடி உழைப்பு மற்றும் நேரடியாகப் பங்களிக்கக்கூடிய மேந்நலைகளின் பொருத்தமான விகிதம், அதிகமாக வளர்ந்த தாவரங்களுக்கு குறைவான ஒதுக்கீடு ஆகியன உள்ளடங்குகின்றது.

**3.1.5 காசு மற்றும் காசிற்கு சமமானவை**

காசு மற்றும் காசிற்கு சமமானவை காசு மீதி, அழைப்பு வைப்புக்கள், கேள்வி வைப்புக்கள் மற்றும் உடனடியாக அறியப்பட்ட பணமாக மாற்றக்கூடிய குறுகிய கால உயர் திரவ முதலீடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படும் வங்கி மேலதிகப்பற்றுக்களின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களின் அபாயத்திற்கு உட்பட்டவை என்பன உள்ளடங்குகின்றன.

**3.2 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்**

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புகள் என வகைப்படுத்தப்பட்ட பொறுப்புகள், கோரிக்கையின் பேரில் அல்லது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவையாகும். நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் என்பது அறிக்கையிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தப்பட வேண்டிய நிலுவைகளாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கிடப்பட்டுள்ளன.

கடந்த கால நிகழ்வின் விளைவாக, கம்பனிக்கு தற்போதைய சட்டப்பூர்வ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு இருந்தால், அது நம்பகத்தன்மையுடன் மதிப்பிடப்பட்டால், ஒரு ஏற்பாடு இனங்காணப்படுகிறது, மேலும் கடப்பாட்டை தீர்ப்பதற்கு பொருளாதார நன்மையின் வெளிச்செல்லும் தேவைப்படலாம்.

**3.2.1 ஊழியஉ நலன்கள்**

**வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - EPF & ETF**

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது வேலைவாய்ப்புக்குப் பிந்தைய நன்மைத் திட்டமாகும், இதன் கீழ் ஒரு கம்பனி நிலையான பங்களிப்புகளை ஒரு தனி நிறுவனத்திற்கு செலுத்துகிறது மேலும் மேலும் தொகைகளை செலுத்த சட்டப்பூர்வ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகள் இருக்காது. வரையறுக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள், ஊழியர்களால் சேவைகள் வழங்கப்படும் காலகட்டங்களில் நிதி நிலைமை கூற்றில் ஊழியர் நலன் செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியம் (EPF)/ தோட்ட பதவியணியினர் சேமலாப சங்கம் (ESPS) என்பவற்றிற்கு கம்பனி ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் 12% ஐ பங்களிக்கிறது.

அனைத்து ஊழியர்களும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு தகுதியுடையவர்கள், அத்தகைய ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் கம்பனி 3% ஐ பங்களிக்கிறது.

**வரையறுக்கப்பட்ட நலன் திட்டம் - ஓய்வூதியப் பணிக்கொடை**

வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் ஒரு ஊழியர் ஓய்வு பெறும்போது பெறும் நன்மையின் அளவை வரையறுக்கிறது, பொதுவாக வயது, சேவை ஆண்டுகள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளில் தங்கியுள்ளது.

தகுதியுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட நலன் திட்டத்தை கம்பனி பின்பற்றியிருந்தது. முழு நலன் திட்டமும் உள்நாட்டில் நிதியளிக்கப்படுகிறது. ஒரு சுயாதீனமான தகுதி வாய்ந்த யஉவரயசநைள நிறுவனத்தின் பரிந்துரையை கணக்கில் எடுத்துக்கொண்டு கம்பனியால் பணிக்கொடைக்கான ஏற்பாடு செய்யப்படுகிறது.

வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்பட்ட பொறுப்பு என்பது, இனங்காணப்படாத கடந்தகால சேவை கிரயத்திற்கான சீராக்கங்களுடன் அறிக்கையிடும் திகதியில் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாகும். இலங்கை கணக்கீட்டு நியமம் 19 ஊழியர் நலன்களில் பரிந்துரைக்கப்பட்ட எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் முறையைப் பயன்படுத்தி வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடானது கம்பனியால் வருடாந்தம் கணிப்பிடப்படுகிறது. வரையறுக்கப்பட்ட நலன் கடமையின் தற்போதைய பெறுமதி, நலன்கள் செலுத்தப்படும் நாணயத்தில் குறிப்பிடப்படும் அரசாங்கப் பிணைமுறிகளின் வட்டி விகிதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களைத் கழிவிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. மேலும் அவை தொடர்புடைய ஓய்வூதியப் பொறுப்பின் விதிமுறைகளுக்கு முதிர்ச்சிக்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளன.

அனுபவச் சீராக்கங்கள் மற்றும் நடைமுறை எடுகோள்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றால் ஏற்படும் ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் அவை எழும் காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானங்களுக்கு அறவிடப்படுகின்றன அல்லது செலவு வைக்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு (அதிகார கையளிப்பு காலம்) பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு திட்டத்திற்கான மாற்றங்கள் நிபந்தனைக்குட்பட்டதாக இல்லாவிட்டால், கடந்த கால சேவைக் கிரயங்கள் விரிவான வருமான கூற்றில் உடனடியாக இனங்காணப்படும். இந்த விடயத்தில், கடந்த கால சேவை கிரயங்கள், அதிகார கையளிப்பு காலத்தில் நேர்கோட்டு அடிப்படையில் காலக்கழிவிடப்படுகின்றன.

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஒரு பணியாளருக்கு 5 ஆண்டுகள் தொடர்ந்து சேவை செய்த பின்னர் மாத்திரமே பொறுப்பு எழுகிறது.

ஓய்வூதிய நலன் கடப்பாடுகளை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள் குறிப்பு 24 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3.3 மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்கவைகள்

நிகழத்தக்கவைகள் என்பது கடந்த கால நிகழ்விலிருந்து எழும் சாத்தியமான சொத்துக்கள் அல்லது கடப்பாடுகளாகும். மேலும் கம்பனியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் நிகழ்வு அல்லது நிகழாத நிலையில் மாத்திரமே உறுதிப்படுத்தப்படும்.

அனைத்து மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புக்கள் குறிப்பு 29 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 3.4 பிற்போடப்பட்ட வருமானம்

### 3.4.1 அரசாங்க மானியங்கள் மற்றும் உதவுதொகைகள்

மானியம் பெறப்படும் மற்றும் இணைக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகளும் கடைபிடிக்கப்படும் என்ற நியாயமான உத்தரவாதம் இருந்தால், அரசாங்க மானியங்கள் இனங்காணப்படுகின்றன. மானியம் ஒரு சொத்துடன் தொடர்புடையதாக இருந்தால், சொத்தின் பராமரிப்புத் தொகையை வரவழைப்பதில் மானியம் கழிக்கப்படுகிறது. ஒரு செலவின விடயத்துடன் தொடர்புடைய மானியங்கள், ஈடுசெய்யும் நோக்கமுள்ள கிரயங்களுடன் முறையான அடிப்படையில் மானியத்தைப் பொருந்தச் செய்வதற்குத் தேவையான காலப்பகுதியில் வருமானமாக இனங்காணப்படுகிறது.

## 3.5 விரிவான வருமான கூற்று

விரிவான வருமான கூற்றை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, செலவின முறையின் செயற்பாடு கம்பனியின் செயலாற்றலின் கூறுகளை நியாயமான முறையில் சமா்ப்பிக்கிறது என மதிப்பாளர்கள் கருதுகின்றனர், எனவே அத்தகைய சமா்ப்பிப்பு முறை LKAS 1 – நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் ஏற்பாடுகளின் பிரகாரம் பின்பற்றப்படுகிறது.

### 3.5.1 வருமான இனங்காணல்

**பொருட்களின் விற்பனை**

SLFRS 15 ஆனது வருமான இனங்காணல் வழிகாட்டலை மாற்றியமைக்கிறது, இதில் "வருமானம்" தொடர்பான LKAS 18, "நிர்மாண ஒப்பந்தங்கள்" தொடர்பான LKAS 11 மற்றும் "வாடிக்கையாளர் விசுவாசத் நிகழ்ச்சித்திட்டங்களி" தொடர்பான IFRIC 13 ஆகியவை உள்ளடங்குகிறது, மேலும் இது 2018 சனவரி 1 அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருடாந்த அறிக்கையிடல் காலங்களுக்குச் செல்லுபடியாகும்.

SLFRS 15 வருமானம் இனங்காணப்படுகிறதா, எவ்வளவு, எப்போது என்பதைத் தீர்மானிப்பதற்கான ஒரு விரிவான கட்டமைப்பை வழங்குகிறது. SLFRS 15 இற்கு புதிய தரம் மற்றும் அளவு வெளிப்படுத்தல் தேவைப்படுகிறது. இது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்து எழும் வருமானம் மற்றும் காசுப்பாய்ச்சல்களின் தன்மை, அளவு, நேரம் மற்றும் நிச்சயமற்ற தன்மையைப் புரிந்துகொள்வதை நோக்கமாகக் கொண்ட நிதி கூற்றுக்களைப் பயன்படுத்துபவர்களுக்கு உதவுகிறது.

வருமானத்தை எப்போது இனங்காண வேண்டும் மற்றும் எந்தத் தொகையில் என்பதைத் தீர்மானிக்க நிறுவனங்கள் ஐந்து-படிமுறை மாதிரியைப் பயன்படுத்த வேண்டும். ஒரு நிறுவனம் வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டுப்பாட்டை அந்த நிறுவனம் எதிர்பார்க்கும் தொகைக்கு மாற்றும் போது வருமானம் இனங்காணப்படும் என்று மாதிரி குறிப்பிடுகிறது.

2018 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்த SLFRS 15 இன் பிரகாரம் கம்பனி வருமான இனங்காணலிற்கான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஐந்து படிமுறை மாதிரியை ஏற்றுக்கொள்கிறது. அதன் பிரகாரம் பின்வரும் அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமே வருமானம் இனங்காணப்படுகிறது.

- ஒப்பந்தத்தின் தரப்பினர் ஒப்பந்தம்∴களை இனங்கண்டுள்ளனர்
- மாற்றப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான ஒவ்வொரு தரப்பினரின் உரிமைகளையும் நிறுவனம் இனங்காண முடியும்
- பரிமாற்றம் செய்யப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான கொடுப்பனவு விதிமுறைகளை நிறுவனம் இனங்காண முடியும்
- ஒப்பந்தம் வணிகப் பொருளை கொண்டுள்ளது
- வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கு ஈடாக அந்த நிறுவனம் தனக்குத் தேவையான பரிசீலனையைச் சேகரிக்கும் சாத்தியம் உள்ளது.

SLFRS 15 ஐப் பயன்படுத்துவதன் விளைவாக கம்பனியின் நிதிக்கூற்றில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதுவும் இல்லை.

**வட்டி வருமானம்**

சேகரிக்கும் தன்மை சந்தேகத்திற்கு இடமில்லாமல் இருக்கும் வரை வட்டி வருமானம் சேகரிக்கப்படும் வட்டியாக இனங்காணப்படுகிறது (சொத்தின் மீதான பயனுள்ள விளைச்சலை கணக்கில் எடுத்துக்கொள்ளுதல்)

**கைதவிஉப்பு செய்தல் தொடஉபான இலாபம் அல்லது நட்டம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளை அகற்றுவதில் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் தேறிய விற்பனை பெறுவனவுகளை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் தொகைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறதுடன் விரிவான வருமான கூற்றில் “ஏனைய வருமானத்தில்“ இனங்காணப்படுகிறது.

**3.5.2 செலவினத்தை இனங்காணுதல்**

**செயற்பாட்டு செலவினங்கள்**

வணிகத்தின் அன்றாடச் செயற்பாடுகள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை திறமையான நிலையில் பராமரிப்பதில் ஏற்படும் அனைத்துச் செலவினங்களும் ஆண்டிற்கான இலாபம்∴ நட்டம்) வருவதற்கான விரிவான வருமான கூற்றிற்கு அறவிடப்பட்டுள்ளன. நிதியல்லாத சொத்துக்கள், மெதுவாக நகரும் இருப்புக்கள், அதிகமாக வளர்ந்த நாற்றுக்கள், அறியப்பட்ட அனைத்து பொறுப்புக்கள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதான பெறுமானத்தேய்வு ஆகியவற்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

**நிதி கிரயம்**

நிதி கிரயங்கள் வெளிப்புறக் கடன்களுக்கான வட்டிச் செலவினங்கள் மற்றும் செயற்பாட்டு குத்தகைகளின் கீழ் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி நிதி நிலைமை கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட தகுதிச் சொத்தின் கையகப்படுத்தல், நிர்மாணம் அல்லது உற்பத்தி ஆகியவற்றிற்கு நேரடியாகக் காரணமில்லாத கடன்பெறல் கிரயங்கள். செயற்பாட்டு குத்தகைகளின் கீழ் செய்யப்படும் கொடுப்பனவுகள், குத்தகைக் காலத்தின் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

**வரி செலவினம்**

வருமான வரிச் செலவினம் நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியை உள்ளடக்கியது. வருமான வரிச் செலவினமானது, மூலதனத்தில் இனங்காணப்படும் போது, மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட உருப்படிகளுடன் தொடர்புடையது தவிர, விரிவான வருமான கூற்றில் இனங்காணப்படுகிறது.

**நடைமுறை வரிகள்**

நடைமுறை மற்றும் ஒப்பீட்டு காலப்பகுதிகளுக்கான நடைமுறை வரிச் செலவினமானது அறிக்கையிடல் திகதியளவில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணிப்பிடப்பட்ட உரிய மதிப்பீட்டு ஆண்டிற்கான வரிவிதிக்கத்தக்க வருமானத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்படும் அல்லது செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுகிறது.

2019 ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தில் அறிமுகப்படுத்தப்படும் புதிய திருத்தங்களுக்கு உட்பட்டு, விவசாயப் பண்ணைக்கான வரி விலக்குக்கு கம்பனி உரித்துடையது.

**பிற்போடப்பட்ட வரிவிதிப்பு**

நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் கொண்டுசெல்லும் தொகைகள் மற்றும் வரிவிதிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் தொகைகள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக, பிற்போடப்பட்ட வரிவிதிப்பு நிதி நிலைமை கூற்று பொறுப்பு முறையைப் பயன்படுத்தி இனங்காணப்படுகிறது.

பிற்போடப்பட்ட வரி பின்வரும் தற்காலிக வேறுபாடுகளுக்கு இனங்காணப்படுவதில்லை: ஒரு வணிக சேர்க்கை அல்லாத ஒரு கொடுக்கல்வாங்கலில் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் ஆரம்ப இனங்காணல் மற்றும் கணக்கீடு செய்யக்கூடிய அல்லது வரிவிதிக்கக்கூடிய நிதி நிலைமை கூற்றை பாதிக்காதவை மற்றும் துணைக்கம்பனிகள் மற்றும் கூட்டாக கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களில் உள்ள முதலீடுகள் தொடர்பான வேறுபாடுகள் எதிர்காலத்தில் அவை தலைகீழாக மாறாது என்பது சாத்தியமாக காணப்படுகிறது. மேலும் நன்மதிப்பின் ஆரம்ப இனங்காணலில் எழும்

வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு பிற்போடப்பட்ட வரி இனங்காணப்படுவதில்லை. பிற்போடப்பட்ட வரியானது, அறிக்கையிடல் திகதியால் இயற்றப்பட்ட அல்லது கணிசமான முறையில் இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில், தற்காலிக வேறுபாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் வரி விகிதங்களில் அளவிடப்படுகிறது. பிற்போடப்பட்ட வரிச் சொத்து பயன்படுத்தப்படாத வரி இழப்புகள், வரிக் கடன்கள் மற்றும் விலக்கு அளிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு இனங்காணப்படுகிறது, எதிர்காலத்தில் வரி விதிக்கக்கூடிய இலாபங்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு அவை பயன்படுத்தப்படலாம். ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அது தொடர்பான வரி நலன்கள் இனி கிடைக்க வாய்ப்பில்லாத அளவிற்கு குறைக்கப்படுகின்றன.

நடைமுறை வரிப் பொறுப்புகளுக்கு எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களை ஈடுசெய்வதற்கு சட்டப்பூர்வமாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருந்தால் மற்றும் பிற்போடப்பட்ட வரிகள் அதே வரி விதிக்கக்கூடிய நிறுவனம் மற்றும் அதே வரிவிதிப்பு அதிகாரத்துடன் தொடர்புடையதாக இருந்தால் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்படுகின்றன.

தொடர்புடைய விவரங்கள் நிதிக்கூற்றுக்களுக்கான அந்தந்த குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 3.6 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று "நேரில் முறை" ஐ பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. செலுத்திய குத்தகை வாடகை, செலுத்தப்பட்ட பங்கிலாபம் மற்றும் பெறப்பட்ட மானியங்கள் நிதியுதவி பணப்புழக்கங்களாக வகைப்படுத்தப்படுகின்றன, அதே நேரத்தில் பெறப்பட்ட வட்டி மற்றும் பெறப்பட்ட பங்கிலாபங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றை வழங்கும் நோக்கத்திற்காக முதலீட்டு காசுப்பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### 3.7 பங்கொன்றிற்கான உழைப்பு

கம்பனி அதன் சாதாரண பங்குகளுக்கான அடிப்படை பங்கொன்றிற்கான உழைப்பு (EPS) தரவுகளை வழங்குகிறது. EPS என்பது, கம்பனியின் சாதாரண பங்குதாரர்களுக்கு பங்களிக்கக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தை அந்தக் காலப்பகுதியில் நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் சராசரி எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் கணிப்பிடுகிறது.

### 3.8 அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதி மற்றும் நிதிக்கூற்றுக்கள் வெளியீட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட திகதிக்கு ஆகியவற்றிற்கு இடையில் நிகழும் சாதகமான மற்றும் சாதகமற்ற நிகழ்வுகளாகும். அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் நிகழும் நிகழ்வுகளின் பொருண்மைத்தன்மை பரிசீலிக்கப்பட்டு, தேவையான இடங்களில் நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றன.

| திசெம்பஉ 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|
| **4 வருமானம்** | | |
| தேங்காய் (குறிப்பு 4.1) | 811,898,229 | 975,075,681 |
| இறப்பர் (குறிப்பு 4.2) | 43,122,134 | 54,570,949 |
| தேங்காய் மட்டை | 12,680,048 | 8,756,502 |
| றம்புட்டான் | 11,014,137 | 8,868,953 |
| மிளகு | 5,416,347 | 7,860,486 |
| முந்திரிகை | 27,092,706 | 25,752,625 |
| மா | 15,549,967 | 12,721,393 |
| பசுமை மற்றும் அலங்கார செடிகள் | - | - |
| விற்பனை நிலையம் | 20,356,637 | - |
| தேங்காய் எண்ணெய் | 9,274,828 | 13,670,133 |
| ஏனையவைகள் | 54,546,786 | 58,217,325 |
| | **1,010,951,819** | **1,065,494,038** |
| **4.1 தெங்கு வருமானம்** | | |
| பச்சை தேங்காய்கள் | 795,504,903 | 835,494,385 |
| விதை தேங்காய்கள்தேங்காய்களின் எண்ணிக்கை 351,031 | - | 7,926,599 |
| நிராகரிப்பு தேங்காய்கள் | 6,579,862 | 6,914,763 |
| கொப்பரை | 9,813,463 | 24,739,973 |
| | **811,898,229** | **875,075,671** |
| உற்பத்தி (தேங்காய்கள்) | 12,938,759 | 15,534,498 |
| விற்பனை (தேங்காய்கள்) | 12,748,710 | 16,038,589 |
| தேறிய விற்பனை சராசரி (1000 தேங்காய்களுக்கு) | 63,685 | 54,561 |
| விற்பனை கிரயம் (1000 தேங்காய்களுக்கு) | 34,260 | 28,320 |
| **4.2 இறப்பஉ வருமானம்** | | |
| **RSS** | - | - |
| லேரெக்ஸ் | 40,955,073 | 52,522,508 |
| கழிவுகள் மற்றும் வெட்டுத்துண்டுகள் | 2,167,061 | 2,048,441 |
| | **43,122,134** | **54,570,949** |
| உற்பத்தி (கிலோகிராம்) | 85,350 | 95,572 |
| விற்பனை (கிலோகிராம்) | 86,816 | 96,167 |
| தேறிய விற்பனை சராசரி (1 கிலோகிராமிற்கு) | 497 | 567 |
| விற்பனைக் கிரயம் (1 கிலோகிராமிற்கு) | 499 | 419 |
| **5 விற்பனைக் கிரயம்** | | |
| தேங்காய் | 436,773,019 | 454,213,443 |
| இறப்பர் | 43,316,665 | 40,295,131 |
| றம்புட்டான் | 5,722,000 | 2,875,284 |
| மிளகு | 4,877,338 | 3,445,995 |
| முந்திரிகை | 10,791,205 | 7,450,607 |
| மா | 6,364,787 | 2,752,443 |
| பசுமை மற்றும் அலங்கார செடிகள் | - | 1,093,414 |
| ஏனையவைகள் | 55,379,699 | 37,432,306 |
| | **563,224,713** | **549,558,623** |

| திசெம்பஉ 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|
| **6 ஏனைய செயற்பாட்டு வருமானம்** | | |
| பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள் மீதான இலாபம் (குறிப்பு - 6.1) | 41,173,432 | 29,839,522 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அகற்றுதல் மற்றும் விற்பனை செய்வதில் இலாபம்/(நட்டம்). | 14,883 | 3,494 |
| பலகை மரங்களின் விற்பனையிலிருந்தான இலாபம் | 7,688,488 | 2,775,095 |
| தாமதமாக அகற்றுதல் மற்றும் கட்டணம் செலுத்துதல் - தேங்காய் | 8,902,338 | 9,236,758 |
| குத்தகை/வசதி கட்டண வருமானம் | 12,158,791 | 17,441,101 |
| மணல் / மண் | - | - |
| திரும்ப எழுதுதல்/ (பதிவழிப்பு) | 4,085,228 | 3,367,438 |
| ஏனைய நானாவித வருமானம் | 12,116,144 | 2,598,416 |
| | **86,139,304** | **65,261,823** |
| **6.1** பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள் விற்பனை மீதான இலாபம் - தென்னை மர விற்பனை | 14,490,751 | 21,955,158 |
| கழி: ஆண்டின் போது அகற்றப்பட்ட மரத்தின் கிரயம் விலை | (391,566) | (279,840) |
| சேர்: திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு | 391,566 | 279,840 |
| | **14,490,751** | **21,955,158** |
| பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள் விற்பனை மீதான இலாபம் - இறப்பர் மர விற்பனை | 27,218,340 | 8,686,850 |
| கழி: ஆண்டின் போது அகற்றப்பட்ட மரத்தின் கிரயம் விலை | (2,848,812) | (5,098,759) |
| சேர்: திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு | 2,313,152 | 4,296,273 |
| | **26,682,681** | **7,884,364** |
| பயன்பாட்டு உயிரியல் சொத்துக்கள் விற்பனை மீதான இலாபம் | 41,173,432 | 29,839,522 |
| **7 நிர்வாகம் மற்றும் பொதுச் செலவினங்கள்** | | |
| ஊதியம் தொடர்பான செலவினங்கள் | 156,131,423 | 167,289,799 |
| பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 25,180,482 | 18,634,124 |
| ஏனைய நிர்வாக செலவினங்கள் | 45,521,713 | 37,327,110 |
| | **226,833,617** | **223,251,034** |

**செயற்பாட்டு நடவடிக்கைகளிலிலிருந்தான இலாபம்**

**பின்வருவனவற்றை அறவிட்ட பின்னஉ குறிப்பிடப்படுகிறது**

| | | |
|---|---|---|
| பணிப்பாளர்கள் சம்பளம் | 3,709,321 | 3,306,160 |
| நியதிச்சட்ட கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளர் கட்டணங்கள் | 977,084 | 813,000 |
| நன்கொடைகள் | 105,000 | 484,818 |
| பெறுமானத்தேய்வு / காலக்கழிவு- | | |
| - JEDB தோட்டங்களின் தரிசு நிலத்திற்கான குத்தகை உரிமைகள் | 2,614,258 | 2,614,259 |
| - JEDB தோட்டங்களின் அசையா குத்தகை சொத்துக்கள் | 2,616,727 | 2,996,826 |
| - முதிர்ந்த தோட்டம் | 27,967,053 | 23,412,725 |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 59,416,848 | 55,139,142 |
| - ஆளணி கிரயம் உள்ளடக்குகிறது | | |
| - வரையறுக்கப்பட்ட நலன் திட்டம் - ஓய்வூதியப் பணிக்கொடை | 30,297,366 | 20,326,144 |
| - வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்ட கிரயம் - EPF மற்றும் ETF | 41,297,786 | 39,979,379 |
| - செயலாற்றல் ஊக்குவிப்பு படி | 90,000,000 | 89,623,016 |
| - மிகையூதியம் | 16,204,156 | 15,988,434 |
| - விடுமுறை கொடுப்பனவு | 8,420,164 | 8,472,211 |
| - மருத்துவ விடுமுறை | 7,893,183 | 7,689,041 |
| - சம்பளம் மற்றும் கூலிகள் | 352,693,141 | 344,191,158 |

| திசெம்பஉ 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2023 ரூபா | 2022 ரூபா |
|---|---|---|
| **8 தேறிய நிதி வருமானம் / (செலவினம்)** | | |
| **நிதி வருமானம்** | | |
| கால வைப்புக்கள் மீதான வட்டி | 195,875,851 | 134,432,405 |
| REPOs மீதான வட்டி | 11,116,599 | 15,822,023 |
| பதவியணியினரிற்கு வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி | 1,560,629 | 1,486,418 |
| முற்கொடுப்பனவு ஊழியர்களின் நலன்களை இரத்து செய்தல் | 3,788,383 | 2,510,459 |
| | **212,341,462** | **154,251,305** |
| **கழி: நிதி கிரயம்** | | |
| குத்தகை மீதான வட்டி - JEDB | | |
| குறுங்கால கடன்களுக்கான வட்டி | (43,455,629) | (33,596,296) |
| பதவியணி கிரயத்தின் காலக்கழிவு | (3,788,383) | (2,510,459) |
| | **47,244,012** | **36,106,755** |
| தேறிய நிதி வருமானம் /(செலவினம்) | 165,097,450 | 118,144,550 |
| **9 வருமான வரி செலவினம்** | | |
| தற்போதைய வருமான வரிச் செலவினம் (குறிப்பு 9.1 & 9.2) | 57,820,389 | 39,164,963 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு (குறிப்பு 9.3 & 26) | - | - |
| | **57,820,389** | **39,164,963** |

### 9.1 தற்போதைய வருமான வரி செலவினம்

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணை உருப்படி 4,2 (இ) இன் பிரகாரம் கம்பனி முக்கியமாக [விவசாய வணிகத்தை ஜவிவசாய, தோட்டக்கலை அல்லது விலங்கு உற்பத்தி செய்யும் வணிகம் மற்றும் கால்நடைகள் அல்லது கோழி வளர்ப்பு நோக்கத்திற்காக ஒரு உறுதிமொழியை உள்ளடக்குகிறதுஸ] அதன் வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மீது 14% என்ற விகிதத்தில் வருமான வரி செலுத்த வேண்டும். வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி மொத்த விவசாய வருமானம் அதன் மொத்த வருமானத்தில் 80% ஐ விட அதிகமாக இருப்பதால், கம்பனி அதன் வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் மீது 14% என்ற விகிதத்தில் வருமான வரி செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், கம்பனி வணிகத்தில் வரி இழப்புகளைச் சந்தித்ததால், நிதிக்கூற்றிற்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை.

### 9.2 வருமான வரி+B26:B39B25B26:D47B26:B38 இற்கான கணக்கீட்டு இலாபம் இடையேயான கணக்கிணக்கம்

| | 2023 | 2022 |
|---|---|---|
| வரி விதிப்புக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் | | |
| ஏனைய மூலங்களில் இருந்தான வருமானம் ரூ விலக்கு வருமானம் | 534,383,307 | 511,539,402 |
| | 242,081,224 | 284,001,926 |
| | **776,464,530** | **795,541,329** |
| முக்கியமாக விவசாயத்தில் ஈடுபடும் சலுகை விகிதத்தின் மீதான வரி 14% | - | - |
| விவசாய நடவடிக்கைகள் மீதான வரி 0% | - | |
| ஏனைய வருமானத்தின் மீதான வரி 30% | 57,820,389 | 39,164,963 |
| **மொத்த வருமான வரி பொறுப்பு** | **57,820,389** | **39,164,963** |

### 9.3 பிற்போடப்பட்ட வரி

குறிப்பு 26 இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் வரிவிதிப்பு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் தொகைகளை எடுத்துச் செல்வதால் ஏற்படும் தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக பொறுப்பு முறையின் கீழ் 2020 திசெம்பர் 31 வரை பிற்போடப்பட்ட வரிவிதிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின்படி மேலே 9.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வேளாண் விவசாயத்தின் மூலம் வரும் வணிக இலாபத்திற்கு 2019 ஏப்ரல் 1 முதல் வருமான வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே கம்பனி விரிவான வருமான கூற்றிற்கு முன்கொண்டுவந்த பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பை தலைகீழ் மாற்றம் செய்வதற்கு முடிவு செய்துள்ளதுடன் எதிர்காலத்திற்கு பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பை இனங்காண முடியாது.

## 10 பங்கொன்றிற்கான உழைப்பு

பங்கொன்றிற்கான உழைப்பை கணிப்பிடுதல், ஆண்டுக்கான சாதாரண பங்குதாரர்களுக்குக் பங்களிக்கக்கூடிய இலாபத்தை அந்த ஆண்டில் நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி எண்ணிக்கையால் வகுக்கப்பதன் அடிப்படையில் பெறப்படுகிறது.

| திசெம்பர 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2023<br>ரூபா | 2022<br>ரூபா |
|---|---|---|
| **10.1 பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு** | | |
| சாதாரண பங்குதாரர்களிற்கு பங்களிக்கக்கூடிய இலாபம் (ரூபா) | 476,610,356 | 472,374,439 |
| சாதாரண பங்குகளின் நிறையிடப்பட்ட சராசரி எண்ணிக்கை | 20,000,001 | 20,000,001 |
| பங்கொன்றிற்கான உழைப்பு (ரூபா. சதம்) | 23.83 | 23.62 |

### 10.2 பங்கொன்றிற்கான நீர்த்த உழைப்பு

"2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் எந்த நேரத்திலும் சாத்தியமான நீர்த்துப்போகக்கூடிய சாதாரண பங்குகள் நிலுவையில் இல்லை.

எனவே, பங்கொன்றிற்கான நீர்த்த உழைப்பு மேலே கூறப்பட்ட பங்கொன்றின் அடிப்படை உழைப்பிற்கு சமம்."

## 11 ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையின் தரிசு நிலத்திற்கான குத்தகை உரிமை

**11.1** அனைத்து தோட்டங்களின் நிலங்களுக்கான குத்தகை உரிமைகள் கம்பனி உருவான உடனேயே 1992 யூன் 18 இல் உள்ளவாறு இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் அவசர சிக்கல்கள் பணிக்குழுவிடமிருந்து (UITF) பெறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், கம்பனியின் புத்தகங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, 1995 மார்ச் 08 இல் நடைபெற்ற சபையின் கூட்டத்தில், இந்த நிலங்களுக்கு நிறுவப்பட்ட மதிப்பின்படி, மதிப்பீட்டு நிபுணர் திரு. டி.ஆர். விக்கிரமசிங்க கம்பனி உருவாவதற்கு சற்று முன்னர். 1992 யூன் 18 இல் உள்ளவாறு கம்பனியின் நிதி நிலைமை கூற்றிற்கு எடுக்கப்பட்ட மறுமதிப்பீடு தொகை ரூபா 189,234,932. கொண்டுசெல்லும் பெறுமதிகள் கீழே குறிப்பு 11.3 இல் கொடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனம், LKAS/SLFRS ஐ நடைமுறைப்படுத்துவதன் மூலம் UITF தீர்ப்பை வாபஸ் பெற்று, 2012 திசெம்பர் 19 இல் குத்தகை நிலத்தில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் அறிக்கையை (SoRP) அறிமுகப்படுத்தியுள்ளது. SoRP இன் படி, நிலத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமை மேலதிக மறுமதிப்பீடுகளை அனுமதிப்பதில்லை.

**11.2** துநுனுடீ அனைத்து 13 தோட்டங்களையும் கம்பனிக்கு வழங்கியுள்ள போதிலும், இந்த தோட்டங்களில் 5 தோட்டங்களுக்கான குத்தகைகள் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளன, மீதமுள்ள 8 தோட்டங்களுக்கான குத்தகைகள் (தம்பதெனிய, தொடங்கஸ்லந்த, ஹிரியால, கட்டுகம்பொல, குருநாகல், மஹாயா, நாரம்மல மற்றும் வாரியபொல) செயற்படுத்தப்படுவதற்கு. எஞ்சியுள்ளன. இந்த குத்தகைகள் கம்பனி உருவான திகதியான 1992 யூன் 18 முதல் செயற்படும். குத்தகைக்கு வழங்கப்படாத இந்தத் தோட்டங்கள் தொடர்பாக, கம்பனி JEDB உடன் ஒரு புரிந்துணர்வு பதிவை செய்திருந்தது. இந்த புரிந்துணர்வு பதிவு JEDB மற்றும் நிறுவனத்திற்கு இடையேயான ஒப்பந்தமாக கருதப்படுகிறது.

## 11.3 தரிசு நிலத்திற்கான குத்தகை உரிமை (53 ஆண்டுகள்)

| | Rs. |
|---|---|
| **கிரயம்** | |
| 18.06.1992 இல் உள்ளவாறான மூலதன பெறுமதி | 189,234,932 |
| 18.06.1992 முதல் 31.12.2022 வரை வட்டியைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றத்தால் அகற்றப்பட்டவை | (50,586,168) |
| **31.12.2022 இல் உள்ளவாறான மீதி** | **138,648,764** |
| 01.01.2022- 31.12.2023 முதல் வட்டியைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக அகற்றல் | - |
| **31.12.2022 இல் உள்ளவாறான மீதி** | **138,648,764** |

| | |
|---|---|
| **காலக்கழிவு** | |
| 01.01.2022 இல் உள்ளவாறான திரண்ட காலக்கழிவு | 77,267,426 |
| 2022 ஆம் ஆண்டிற்கான காலக்கழிவு | 2,614,259 |
| 31.12.2022 இல் உள்ளவாறான திரண்ட காலக்கழிவு | 79,881,685 |
| 2023 ஆம் ஆண்டிற்கான காலக்கழிவு | 2,614,258 |
| 01.01.2023 முதல் 31.12.2023 வரை வட்டியைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றத்தால் அகற்றப்பட்டவை | - |
| **31.12.2023 இல் உள்ளவாறான மீதி (குறிப்பு - அ)** | **82,495,943** |

| | |
|---|---|
| **குறைத்து எழுதப்பட்ட பெறுமதி** | |
| 31.12.2022 இல் உள்ளவாறானது | 58,767,079 |
| 31.12.2023 இல் உள்ளவாறானது | **56,152,821** |

**குறிப்பு - அ**

| | |
|---|---|
| 18.06.1992 - 17.06.2045 வரையிலான குத்தகைக் காலத்திற்கான நாட்களின் எண்ணிக்கை | 19,358 |
| 18.06.1992 முதல் 31.12.2023 வரையிலான காலத்திற்கான நாட்களின் எண்ணிக்கை | 11,518 |
| 31.12.2023 (138,648,765 / 19,358 x 11,518) இல் உள்ளவாறு காலக்கழிவு | 82,495,943 |

## 12 அசையா குத்தகை சொத்துக்கள் (தரிசு நிலத்தைத் தவிர)

குறிப்பு 11 இல் விளக்கப்பட்டுள்ளபடி, UITF இன் தீர்ப்பின் அடிப்படையில் அனைத்து JEDB தோட்ட குத்தகைகளும் இன்றுவரை செயற்படுத்தப்படவில்லை என்றாலும், நிதி குத்தகைகளின் கீழ் இந்த தோட்டங்களில் உள்ள அனைத்து அசையா சொத்துகளும் 1992 யூன் 18, முதல் கம்பனியின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நோக்கத்திற்காக, 1995 மார்ச் 08, இல் குழு அதன் கூட்டத்தில் முடிவு செய்தது, இந்த சொத்துக்கள் கம்பனி உருவாகிய திகதிக்கு உடனடியாக முந்தைய நாளில் JEDB புத்தகங்களில் தோன்றியதால், அவற்றின் புத்தக பெறுமதிகளின் படி புத்தகங்களிற்கு எடுத்துக்கொள்ளப்படும். .

| மீள்மதிப்பீடு | சொத்தின் ஆயுட்காலம் ஆண்டுகள் | 18.06.1992 இல் உள்ளவாறு ரூபா | இடமாற்றம் செய்யப்பட்ட / (வழங்கப்பட்ட) ரூபா | வைப்புக்கள் ரூபா | 31.12.2022 இல் உள்ளவாறான மீதி ரூபா |
|---|---|---|---|---|---|
| நில அபிவிருத்தி கிரயம் | 30 | 1,127,305 | | (4,000) | 1,123,305 |
| கட்டிடங்கள் | 25 | 22,130,873 | | (4,437,121) | 17,693,752 |
| இயந்திரங்கள் | 15 | 34,841 | | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் | 30 | 43,001,122 | 90,335,750 | (31,259,778) | 101,797,254 |
| முதிர்ச்சியடையாத தோட்டங்கள் | | 90,647,222 | (90,335,750) | (311,472) | - |
| | | **156,941,363** | - | **(36,012,371)** | **120,649,152** |

**ஆண்டிற்கான கொண்டு செல்லும் பெறுமதிகள் பின்வருமாறு.**

| மீள்மதிப்பீடு | 01.01.2023 இல் உள்ளவாறான மீதி ரூபா | | அகற்றல் ரூபா | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி ரூபா |
|---|---|---|---|---|
| நில அபிவிருத்தி கிரயம் | 1,123,305 | - | - | 1,123,305 |
| கட்டிடங்கள் | 17,693,752 | - | - | 17,693,752 |
| இயந்திரங்கள் | 34,841 | - | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் | 101,797,254 | - | (596,372) | 101,200,882 |
| | **120,649,152** | - | **(596,372)** | **120,052,780** |

| காலக்கழிவு | 01.01.2023 இல் உள்ளவாறான மீதி ரூபா | ஆண்டிற்கான மாற்றம் ரூபா | அகற்றல் ரூபா | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி ரூபா |
|---|---|---|---|---|
| நில அபிவிருத்தி கிரயம் | 1,123,305 | (1) | - | 1,123,305 |
| கட்டிடங்கள் | 17,693,752 | - | - | 17,693,752 |
| இயந்திரங்கள் | 34,841 | - | - | 34,841 |
| முதிர்ந்த தோட்டங்கள் (குறிப்பு அ) | 91,236,619 | 2,616,727 | (589,532) | 93,263,815 |
| | **110,088,518** | **2,616,727** | **(589,532)** | **112,115,713** |

| கொண்டுசெல்லும் பெறுமதி | 01.01.2023 இல் உள்ளவாறான மீதி ரூபா | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி ரூபா |
|---|---|---|
| நில அபிவிருத்தி கிரயம் | (0) | 0 |
| கட்டிடங்கள் | - | - |
| இயந்திரங்கள் | - | - |
| முதிர்ந்த தோட்டங்கள் | 10,560,635 | 7,937,067 |
| | **10,560,635** | **7,937,067** |

ஐதோட்டக் குத்தகைகளை கம்பனியிடம் ஒப்படைக்கும் போது முதிர்ச்சியடையாதவை என வகைப்படுத்தப்பட்ட தோட்ட சொத்துக்களில் முதலீடு முதிர்ச்சியடையாத தோட்டங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது (18.06.1992 இல் மறுமதிப்பீடு செய்யப்பட்டது). அத்தகைய முதிர்ச்சியடையாத தோட்டங்களில் முதலீடு செய்வது, அவற்றைத் தருவதற்குக் குறிப்பு-13 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. இந்தத் தோட்டங்கள் வரும்போது, அவற்றை அத்தகைய நிலைக்குக் கொண்டு வருவதற்காகச் செய்யப்பட்ட மேலதிக முதலீடுகள், குறிப்பு – 13 இன் கீழ் முதிர்ச்சியடையாத தோட்டங்களின் வகையிலிருந்தும், முதிர்ச்சியடையாத தோட்டங்களிலிருந்து முதிர்ந்த தோட்டங்களுக்கும் மாற்றப்பட்டது.

## 12 அசையா குத்தகை சொத்துக்கள் (தரிசு நிலத்தைத் தவிர) தொடர்...

**குறிப்பு அ - முதிவுந்த தோட்டங்கள்**

**கிரயம்**

**18.06.1992 இல் முதிர்ந்த தோட்டங்கள்**

| | |
|---|---|
| 18.06.1992 இல் உள்ளவாறான மீதி | 43,001,122 |
| முதிர்ந்த தோட்டங்களை அகற்றுதல் | |
| 18.06.1992 முதல் 31.12.2021 வரை வட்டியைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக | (6,979,587) |
| 31.12.2022 வரை அப்புறப்படுத்தப்பட்ட தென்னை மரங்களின் பெறுமதி (அதிகரிக்கப்பட்டது தவிர) | (12,781,238) |
| 2023 ஆம் ஆண்டில் அப்புறப்படுத்தப்பட்ட தென்னை மரங்களின் பெறுமதி (துண்டாக்கப்பட்டவை தவிர) | (391,566) |
| 31.12.2023 இல் உள்ளவாறு மீதி - [ a ] | **22,848,730** |

**18.06.1992 இல் முதிர்ச்சியடையாத தோட்டங்கள் முதிர்ச்சியடைந்த காலப்பகுதியில் முதிர்ந்த தோட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.**

| | |
|---|---|
| 18.06.1992 இல் உள்ளவாறு மீதி | 90,647,222 |
| வட்டியைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றத்தால் முதிர்ச்சியடையாத நிலையில் அகற்றுதல் | (311,472) |
| வட்டியை கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக முதிர்ந்த தோட்டங்களுக்கு மாற்றப்பட்ட பிறகு அகற்றுதல் | (8,730,966) |
| 31.12.2022 வரை அப்புறப்படுத்தப்பட்ட இறப்பர் மரங்களின் பெறுமதி (துண்டாக்கப்பட்டவை தவிர) | (3,047,825) |
| 2023 ஆம் ஆண்டில் அப்புறப்படுத்தப்பட்ட இறப்பர் மரங்களின் பெறுமதி (துண்டாக்கப்பட்டவை தவிர) | (204,806) |
| 31.12.2023 இல் உள்ளவாறு மிதி - [ b ] | 78,352,153 |
| **முதிர்ந்த தோட்டங்கள்** 31.12.2023 [ c ] - ( a + b ) | **101,200,883** |

## நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள்

**குறிப்பு - ஆ குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை துண்டாக்குதல்**

வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி உருவாகும் போது, நிலம் அளவை செய்யப்படாததுடன் அனைத்து திட்டங்களும் ஒப்படைக்கப்படவில்லை. JEDB பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலங்கள் அந்த நேரத்தில் (6,555.03 ஹெக்டெயர்) சரிசெய்தல்களுடன் முன்வைக்கப்பட்டன, இருப்பினும் நிலங்களின் மதிப்பீட்டு பெறுமதி 6,722 ஹெக்டெயருக்கான ஆவணங்களின் படி செல்கிறது. தற்போதைய நிலத்தின் விரிவாக்கம் 4,971.12 ஹெக்டெயர் ஆகும். மேலும் ரூபா 67 மில்லியன் கிரயமான 1,750.88 ஹெக்டெயர் தரிசு நிலங்களின் (இது மொத்த பரப்பில் 26%) ஒதுக்ககுதல் பின்வருமாறுள்ளன.

| | | | **ஹெக்டெயஉ** |
|---|---|---|---|
| 1. | நிலத்தின் பெறுமதியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஆவணத்தில் கொடுக்கப்பட்ட நில அளவு | | 6,722.00 |
| 2. | KPL ஐ உருவாக்குவதன் மூலம் துநுனுடீ பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நில அளவு | | 6,555.03 |
| | 1 & 2 இடையே வேறுபாடு | | 166.97 |
| 3. | பல்வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட நிலப்பரப்பு | | 1,146.14 |
| | (அரசாங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், டீழுஜ வலயங்கள், பொதுமக்களின் மீள்குடியேற்றம், சட்டப்பூர்வ அறிவிப்புக்கள் போன்றவை) | | |
| 4. | நெல் நிலங்கள் ஆடே விவசாயிகளிற்கு ஒதுக்கப்பட்டது (1992க்குப் பிறகு) | | 181.68 |
| 5. | கிராம மக்களால் கையகப்படுத்தப்பட்ட நிலம் (கேபிஎல் நிறுவப்படுவதற்கு முன்பு) | | 53.85 |
| | வேலன்ருப்பா பிரிவு | 13.37 | |
| | கொம்முன்னாவ பிரிவு | 40.48 | |
| 6. | நில அளவீடுகளால் அடையாளம் காணப்பட்ட வேறுபாடுகள் | | |
| | திப்பலதென்ன பிரிவு | 99.08 | |
| | தத்துசேனபுர பிரிவு (நெல் நிலங்கள்) | 46.90 | 145.98 |
| 7. | நிலத்தின் பரப்பளவு ஏனையவை (செயற்படுத்தப்படாதது) பிரிக்கப்படாமல் வகைப்படுத்தப்பட்டுள்ளது | | |
| | தோசங்கஸ்லாண்டா | 54.25 | |
| | கட்டுகம்பொல | 2.01 | 56.26 |
| | மொத்த நிலம் குறைக்கப்பட்டது | | 1,771.36 |
| | KPL பதிவுகளின்படி நிலங்களின் தற்போதைய அளவு | | **4,950.64** |

**18.06.1992 இல் உள்ளவாறு முதிர்ச்சியடையாத தோட்டங்கள் முதிர்ச்சியடைந்த காலப்பகுதியில் முதிர்ந்த தோட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.**

| பொருளாதார ஆயுட்காலம் 30 ஆண்டுகள் | | | கிரயம் | | | காலக்கழிவு |
|---|---|---|---|---|---|---|
| **மாற்றிய ஆண்டு** | **விபரம்** | **அகற்றிய திகதி** | **18.06.1992 இல் உள்ளவாறு மீதி** | **மாற்றம் / அகற்றல்** | **31.12.2022 இல் உள்ளவாறு மீதி** | **31.12.2023 இல் உள்ளவாறான மீதி** |
| 31/12/1994 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | 37,756,930 | | | |
| | அகற்றல் - கோரகஹ - முதிர்ச்சியடையாத நிலையில் அகற்றப்பட்டது | | | (311,473) | | |
| | அகற்றல் - மஹாயாய | 8/7/1997 | | (2,957,425) | | |
| | அகற்றல் - மல்வத்தை | 8/7/1997 | | (355,313) | | |
| | அகற்றல் - அம்பானா (ரப்பர்) | 9/10/1994 | | (223,374) | | |
| | அகற்றல் - சூரியபுர | 6/6/2000 | | (92,705) | | |
| | அகற்றல் - பொல்கம்மன | 1/1/2016 | | (322,347) | | |
| | அகற்றல் - பொல்கம்மன | 1/1/2016 | | (410,721) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் 2013-2015 | 1/1/2016 | | (990,854) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2016 | 12/31/2016 | | (209,249) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2017 | 12/31/2017 | | (326,797) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2018 | 12/31/2018 | | (207,232) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2019 | 12/31/2019 | | (951,289) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2020 | 12/31/2020 | | (42,588) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2021 | 12/31/2021 | | (170,821) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2023 | 12/31/2023 | | (204.806) | | |
| | | | **37,756,930** | **(7,776,993)** | **29,979,937** | **28,978,600** |
| 31/12/1995 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | 8,429,585 | | | |
| | அகற்றல் - மாவத்தகம | 8/15/1997 | | (493,832) | | |
| | அகற்றல் - வால்போடலே | 5/31/2011 | | (721,401) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2018 | 12/31/2018 | | (18,018) | | |
| | | | **8,429,585** | **(1,233,251)** | **7,196,334** | **6,716,272** |
| 12/31/1996 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | **12,394,880** | - | **12,394,880** | **11,155,053** |
| 12/31/1997 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | 8,045,288 | | | |
| | அகற்றல் - மாவத்தகம | 8/15/1997 | | (412,325) | | |
| | அகற்றல் - பன்னல | 4/9/1999 | | (748,578) | | |
| | அகற்றல் - பெத்தியகந்த | 6/6/2000 | | (242,922) | | |
| | அகற்றல் - இறப்பர் மரங்கள் - 2017 | 12/31/2017 | | (130,979) | | |
| | | | **8,045,288** | **(1,534,803)** | **6,510,485** | **5,642,380** |

| பொருளாதார ஆயுட்காலம் 30 ஆண்டுகள் | | | | கிரயம் | | காலக்கழிவு |
|---|---|---|---|---|---|---|
| மாற்றிய ஆண்டு | விபரம் | அகற்றிய திகதி | 18.06.1992 இல் உள்ளவாறு மீதி | மாற்றம் / அகற்றல் | 31.12.2022 இல் உள்ளவாறு மீதி | 31.12.2023 இல் உள்ளவாறான மீதி |
| 12/31/1998 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | 9,962,094 | | | |
| | அகற்றல் - பொல்கம்மன | 1/1/2016 | | (684,684) | | |
| | | | **9,962,094** | **(684,684)** | **9,277,410** | **7,730,610** |
| 12/31/1999 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | 8,676,654 | | | |
| | அகற்றல் - மாவத்தகம | 8/15/1997 | | (420,467) | | |
| | அகற்றல் - பொல்கம்மன | 1/1/2016 | | (604,222) | | |
| | | | **8,676,654** | **(1,024,689)** | **7,651,965** | **6,121,292** |
| 12/31/2000 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | 4,666,747 | | | |
| | அகற்றல் - பொல்கம்மன | 1/1/2016 | | (40,648) | | |
| | | | **4,666,747** | **(40,648)** | **4,626,099** | **3,546,521** |
| 12/31/2001 | முதிர்ச்சியடையாத தோட்டத்தின் பெறுமதி | | 715,044 | | **715,044** | **524,357** |
| **மொத்தம் [ e ]** | | | **90,647,222** | **(12,090,263)** | **78,556,959** | **70,415,085** |
| **31.12.2023 இல் உள்ளவாறு காலக்கழிவு - முதிர்ந்த தோட்டங்கள் [ f ] - ( d + e )** | | | | | | **93,263,815** |

## 13 ஆதனம்,பொறி மற்றும் உபகரணம்

**பயன்பாட்டு தாவரங்கள்**

கம்பனி உருவானதில் இருந்து தோட்டங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் பின்வருமாறு. தோட்ட குத்தகையின் கீழ் எடுக்கப்பட்ட சொத்துக்கள் (தோட்ட சொத்துக்கள் உட்பட) குறிப்புகள் 11 மற்றும் 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த குத்தகைகளின் கீழ் எடுக்கப்பட்ட முதிர்ச்சியடையாத தோட்டங்களில் தொடர்ச்சியான முதலீடுகள் மேற்கூறிய குறிப்பில் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய தோட்டங்கள் விளைச்சலுக்கு வரும்போது, அவற்றைத் தாங்குவதற்குப் பொறுப்பேற்றதில் இருந்து ஏற்பட்ட மேலதிக முதலீடுகள் முதிர்ச்சியடையாத தோட்டங்களிலிருந்து முதிர்ந்த தோட்டங்களுக்கு இந்தக் குறிப்பில் மாற்றப்பட்டுள்ளன. குறிப்பு 12 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி கம்பனி உருவாவதற்கு முன்னர் குறிப்பிட்ட தோட்டத்தின் மீது துநுனுட மேற்கொண்ட முதலீடு முதிர்ச்சியடையாத தோட்டங்களிலிருந்து முதிர்ந்த தோட்டங்களுக்கு தொடர்புடைய இடமாற்றம் செய்யப்பட்டது.

### முதிவுச்சியடையாத தாவரங்கள்

| | தெங்கு ரூபா | இறப்பர் ரூபா | மரமுந்திரிகை ரூபா | இலவங்கப்பட்டை ரூபா | றம்புட்டான் ரூபா | கொய்யா ரூபா | டிராகன் பழம் ரூபா | மா ரூபா | மிளகு ரூபா | கொக்கோ ரூபா | டூரியன் ரூபா | அரிகோநட் ரூபா | | வரக்கா ரூபா | கோப்பி ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | | | | | | | | | | | | |
| 01.01.2023 இல் உள்ளவாறான மீதி | 485,917,965 | (0) | 4,848,187 | 36,043,770 | 7,306,180 | 71,859 | - | 13,962,740 | 23,284,486 | - | 7,163,598 | 864,081 | 1,234,521 | - | 238,251 | 580,935,638 |
| வருடத்தில் சேர்த்தல் | 162,636,404 | - | 1,689,036 | 14,834,822 | 2,281,497 | 48,667 | - | 11,421,773 | 6,044,603 | - | 1,013,993 | 12,991 | 467,012 | 751,808 | 211,934 | 201,414,541 |
| வருடத்தில் இடமாற்றங்கள் | (165,803,639) | - | - | (9,463,964) | (1,321,912) | - | - | (5,847,818) | (5,286,600) | - | (1,465,247) | - | - | - | - | (189,189,180) |
| வருடத்தில் அகற்றுதல் | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **31.12.2023 இல் உள்ளவாறான மீதி** | 482,750,730 | (0) | 6,537,223 | 41,414,627 | 8,265,765 | 120,526 | - | 19,536,695 | 24,042,489 | - | 6,712,344 | 877,072 | 1,701,533 | 751,808 | 450,185 | 593,160,998 |

### முதிவுச்சியடையாத தாவரங்கள்

| கிரயம்<br>சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் | தெங்கு ரூபா | இறப்பர் ரூபா | மரமுந்திரிகை ரூபா | இலவங்கப்பட்டை ரூபா | றம்புட்டான் ரூபா | கொய்யா ரூபா | டிராகன் பழம் ரூபா | மா ரூபா | மிளகு ரூபா | கொக்கோ ரூபா | டூரியன் ரூபா | அரிகோநட் ரூபா | | வரக்கா ரூபா | கோப்பி ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.2023 இல் உள்ளவாறான மீதி | 851,990,791 | 122,554,633 | 21,591,410 | 12,173,730 | 4,951,926 | 191,347 | 3,472,230 | 9,335,380 | 25,254,553 | 5,936,675 | 4,656,518 | | | | 153,769 | 1,062,262,961 |
| வருடத்தில் இடமாற்றங்கள் | 165,803,639 | - | - | 9,463,964 | 1,321,912 | - | - | 5,847,818 | 5,286,600 | - | 1,465,247 | | | | - | 189,189,180 |
| வருடத்தில் அகற்றுதல் | - | (2,644,006) | - | - | - | - | - | - | - | - | - | | | | - | (2,644,006) |
